# சிலம்பு

ஒலி 01




மேல்மாகாண கல்வித்திணைக்களம் - தமிழ்ப்பிரிவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



சிந்து கண்ட செந்தமிழாம்
குமரி கண்ட பைந்தமிழாம்
புறநானூற்றில் வீரம் விதைத்து
குறுந்தொகையுள் காதல் புதைத்து
கீழ்க்கணக்கில் அறம் வளர்த்து
திருக்குறளில் வாழும் திறம் உரைத்து
இளங்கோ வடி கள்ளாய் இனித்து
கம்பன் செய்த வம்பினால்
விருத்தம் பெற்ற
எம் உயிர்த் தமிழே
பாரதியால் வீறு கொண்டாய்
பித்தனால் சித்தம் நுழைந்தாய்
ஈழத்தில் பூதனால் சங்கம் கண்டாய்
சோதிடம், மருத்துவம், காவியம், புராணம்
எனப் பலதிறப்பட்டாய்
உன்னை அச்சேற்றிப் பாதுகாத்த
ஈழத்து பாவலர் தம் இதயங்களின் வழி
எம் மனம் இறங்கி
உதிரத்தில் வெண்குழியங்களாய்
நாவில் செந்தமிழாய்
இன்றும் ஒலிக்கின்றாய்
உனக்கு அணிகலங்களாக
காப்பியங்கள் இட்டு
அலங்கரித்து
இன்றுவரை தமிழ் வளர்த்த
அனைத்துப் பெரியார்களுக்கும்
இந்நூல் சமர்ப்பணம்

8166(P)
Arch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


பக்கம்

1. தமிழ்மொழி வாழ்த்து
2. தமிழ்த்தாய் வாழ்த்து
3. மேல்மாகாண தமிழ் இலக்கிய வாழ்த்துப்பா
4. ஆசிச் செய்திகள்

**5. முத்துக்கள்**

1. க.பொ.த உயர்தர வகுப்பில் புதிய தொழினுட்பப் பாடப்பிரிவு
   பேராசிரியர் சோ.சந்திரசேகரன் 15 - 18
2. இருபத்தோராம் நூற்றாண்டில் மாணவர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள்
   பேராசிரியர் தை.தனராஜ் 19 - 22
3. பாரதியாரின் பாப்பாப் பாட்டு
   சிரேஷ்ட விரிவுரையாளர்கனகசபை இரகுபரன் 23 - 25
4. அமர வாழ்வு - பாரதியார் பாடல்வழி ஒரு நோக்கு
   கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் 26 - 30

**6. மொட்டுக்கள்**

1. நீரின்றி அமையாது உலகு - கட்டுரை 33 - 34
2. முகப்புத்தகமும் தமிழும் - கட்டுரை 35 - 40
3. கல்வியின் பயன்கள் - கட்டுரை 41 - 42
4. தாயே உன்னை எண்ணி எண்ணி - கவிதை 43 - 45
5. தாமரையிலைத் தண்ணீராய் - கவிதை 46 - 48
6. அன்பே வாழ்க்கை - குறு நாடகம் 49 - 55
7. தாய்க்குச் சேய் பாரமா - குறு நாடகம் 56 - 60
8. காலம் செய்த கோலம் - சிறுகதை 61 - 62
9. இயந்திரமா அவள் - சிறுகதை 63 - 65

**7. இணையம்**

1. தாய்மொழி கற்பிக்கும் முறைகள் 66 - 82
2. அங்கோர் வாட் கோயில் 83 - 84

**8. நன்றியுரை** 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினும் தண்மனம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழியோங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானமறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே !
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே !

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே !"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மேல் மாாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப்பிரிவின் ஏற்பாட்டில் இவ்வாண்டு நடத்தப்படும், "மேல் மாகாண தமிழிலக்கிய விழா" வின் ஓர் அங்கமாக "சிலம்பு" என்ற இந்த இதழ் வெளிவருகிறது.

தொன்மையும் பாரம்பரியமும். மிக்கதும் நம் தாய்த் திருநாட்டின் தலைநகரைக் கொண்டு மிளிர்வதுமான மேல் மாகாணத்தில் சாகாவரம் கொண்ட தமிழும் தலை நிமிர்ந்து வாழ்கிறது, வளர்கிறது அதன் செழுமையை பறைசாற்றும் மற்றொரு நிகழ்வாக இந்த இலக்கிய விழாவும் அமைகிறது. அதன் சிறப்பம்சங்களில் ஒன்றாக வெளிவரும் "சிலம்பு"எம் தமிழின், தமிழ் பேசும் மக்களின் பெருமையைக் பறை சாற்றும் என்பதில் சந்தேகமில்லை.

பல்லாயிரம் ஆண்டு பழமை கொண்ட தமிழினத்தின் பெருமை பேசும் அற்புதச் சொற்களுள் "சிலம்பு" என்பதும் ஒன்று, இது தமிழர்களின் ஆடற் கலையின் அம்சமாகும். நீதிவழுவா நெடு வழமையின் அடையாளம் சொல்லும் அங்கமாகவும், தமிழ் மாந்தரின் கற்பு நெறி காட்டும் கவசமாகவும், ஆடவரின் அதிவீரம் காட்டும் சிலம்பாட்டம், அறிவாற்றல் காட்டும் சிலம்பம் என்ற சொற்களின் அடியாகவும் "சிலம்பு" அமைகிறது. ஒட்டு மொத்த எங்கள் கலாசாரத்தின் ஓர் அடையாளச் சின்னமான கூஷகூஷசிலம்புஐஐன்ற பெயரை இவ்விதழ் தாங்கி வருவது நமக்கு பெருமையளிக்கிறது.

மேல் மாகாண மட்டத்தமிழ் மொழித் தினப் போட்டிகளில் வெற்றியீட்டிச் சாதனை படைத்த நம் மாணவச் செல்வங்களுக்குப்பாராட்டும் பதக்கமும் அளிக்கும் இவ்விழாவிலே நம் அழைப்பை ஏற்று வருகை தந்த மேல் மாகாணத்தின் மேற்கு ஆளுநர் K.C யோகேஸ்வரன் அவர்களுக்கும் மேல்மாகாண மாண்பு மிகு முதலமைச்சர் இசுர தேவப்பிரிய அவர்களுக்கும், கௌரவ மாகாணக் கல்வி அமைச்சர் ரஞ்சித் சோமவங்ச அவர்களுக்கும் எம் தமிழ் கல்விச் சமூகத்தின் நன்றிகள் உரித்தாகும். அது போல இவ்விழா சிறக்க அறிவூட்டலும் ஆலோசனைகளும் தந்துதவிய மேல்மாகாண பிரதம அமைச்சின் செயலாளர் திருமதி. J. M.C ஜயந்தி விஜேதுங்க, கல்வி அமைச்சின் செயலாளர். திரு. S.G .விஜேபந்து ஆகியோருக்கும் எம் நன்றிகள்.

இவ்விழாவிற்கு முழு காரணகர்த்தாவும் எம்மை வழி நடத்திச் செல்பவருமான மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.விமல் குணரத்ன அவர்களுக்கும் இந்நிகழ்விற்கு பல வழிகளிலும் உதவிய மேல்மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள் திரு.G.N. சில்வா, திரு K.P.N.பிரேமஸ்ரீ ஆகியோருக்கும் இந்நிகழ்வின் அடி நாதமாக விளங்கும் மேல்மாகாண தமிழ்ப்பிரிவின் பணிப்பாளர் ஜனாப். I.L.M இன்சார் அவர்களுக்கும் நன்றிகள்.



தலைநகரில் இவ்விழா தலைநிமிர உதவிய எங்கள் கௌரவ மாகாணசபை உறுப்பினர்கள், வலயக்கல்விப்பணிப்பாளர்கள், வலயங்களின் தமிழ்ப்பிரிவு பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், விழாக்குழு உறுப்பினர்கள், "சிலம்பு" மலர்க்குழுவினர், உதவிகள் வழங்கிய அன்புள்ளங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அன்பு மாணவச் செல்வங்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள்.

அன்புடனும் நன்றியுடனும்

விழாக்குழு, மலர்க்குழுச் சார்பில்
இ.உதயகுமார்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(தமிழ்மொழி மூலப் பாடசாலைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல் மாகாண ஆளுநரின் வாழ்த்துச்செய்தி ...



மேல் மாகாண கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் அதன் தமிழ் பிரிவால் நடாத்தப்படும் "தமிழ் இலக்கிய விழாவில்" நானும் கலந்து கொள்வதோடு அந்நிகழ்வில் வெளியிடப்படவுள்ள "சிலம்பு" எனும் இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மேல் மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் அமைந்துள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் மேல் மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் தாம் வெளிக்காட்டிய ஆற்றல்களின் மூலம் இன்று பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்று மகிழ்கின்றனர். இவ்வாறான மாணவர்களின் திறமைக்கு களம் அமைக்கக்கூடிய போட்டிகள், நிகழ்ச்சிகள் மேலும் மேலும் நடாத்தப்பட்டு நம் நாட்டின் பிள்ளைகள் தேர்ச்சி மிக்கவர்களாக உருவாக்கப்பட்ட வேண்டும்.

தமிழ் மொழியை கற்பிக்கும் ஆசிரியர்கள், அழகியல் கலைகளை கற்பிக்கும் ஆசிரியர்கள், கலாசார விழுமியங்களை மாணவர்களுக்கு திறம்பட பயிற்றுவிப்பதில் மேலும் அதிக கவனம் எடுக்க வேண்டும். எமது கலாசாரத்தை அடுத்த சந்ததிக்கு சிறப்புற கையளிப்தே கல்வியின் பிரதான நோக்கமாகும்.

தமிழ்த்தினப் போட்டிகளின் போது வெற்றியீட்டிய மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு போட்டிக்காக செல்லும் போது அவர்களைச் சிறப்புறப்பயிற்றுவித்து அவர்கள் வெற்றியீட்டும் வகையில் ஆயத்தங்களை மேற்கொள்ள மாகாண மட்டத்தில் துறைசார் குழுவொன்று அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

மேலும் இந்த வருடம் போல் எதிர்காலத்திலும் இந்த விழாவைச் சிறப்புற நடாத்தத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை மாகாணக் கல்வித்திணைக்களம் மேற்கொள்ள வேண்டும், மேலும் தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் நிலவும் அழகியற்பாட ஆசிரியர் பற்றாக்குறைகளைத் துரிதமாக நிரவி மாணவர்கள் கலாசார கல்வியை சிறப்புறப் பயில நடவடிக்கைகளை மாகாணக் கல்வி அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என எனது அவாவையும் தெரிவித்து இவ்விழா சிறப்புற அமைய என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கே.சி.யோகேஸ்வரன்**
**ஆளுநர்**
**மேல் மாகாணம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல் மாகாண முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி..



மேல் மாகாண கல்வி திணைக்களத்தினால் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழா 2015 இன் போது வெளியிடப்படவுள்ள 'சிலம்பு' என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தேசிய மொழிகளில் ஒன்றான தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் வகையில் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் நோக்கமாக இவ்விழா அமையும். இவ்வகையான விழாக்கள் மாணவர்களுக்கான அடிப்படைத்தேவை எனக் கருதுகின்றேன். மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டுவதும் அவர்களை மேலும் ஊக்குவிப்பதும் முதல் அமைச்சர் என்ற வகையில் எனது பிரதான கடமையாகும். இவ்வகையில் நாம் அனைவரும் மேல் மாகாணக் கல்வி திணைக்களத்தின் இம் முயற்சியைப் பாரட்டுதல் அவசியமாகும். அறிவு என்பது நாளுக்கு நாள் மாற்றமடைந்து செல்கின்றது. அதற்கேற்ப மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வழியமைத்துக் கொடுக்க வேண்டியது எமது பாரிய பொறுப்பாகும். தவறின் எதிர்காலச் சமூகத்திற்கு இது பாரிய பின்னடைவாகக்கூட அமையலாம். எனவே எதிர்காலத் தேவையறிந்து அதற்கேற்ப கால ஓட்டத்தில் எம்மையும் தயார்படுத்திக்கொள்ளல் அவசியமாகும்.

இந்த வகையில் மேல் மாகாண கல்வித் திணைக்களம் இவ்விழாவினை மிகச் சிறந்த முறையில் ஏற்பாடு செய்து நடாத்துவதற்கும், அதற்காக முழு முயற்சியுடன் செயற்படும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

இசுறு தேவப்பிரிய
முதலமைச்சர்
மேல் மாகாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ மேல் மாகாண கல்விஅமைச்சரின் வாழ்த்துச்செய்தி..



மேல்மாகாண கல்வித்திணைக்களத்தின் தமிழ்மொழிப் பிரிவினால் இவ்வருடம் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழாவின் போது வெளியிடப்படவுள்ள 'சிலம்பு' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்களின் மொழி ஆற்றலை வெளிப்படுத்துவதற்காக பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வாக இவ்விழா அமைவது மகிழ்ச்சிக்குரியது. மாணவர்களின் அறிவு திறன் மனப்பாங்குடன் பயிற்சியை வளர்த்துக்கொள்ள பங்களிப்பு செய்யும் பொறுப்பு பாடசாலைகளுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு மட்ட திணைக்களங்களுக்குமுரிய முக்கிய பொறுப்பாகும். மாணவர்கள் பாடத்திட்டம், பாடப்புத்தகத்துடன் மட்டுமல்லாது வாழக்கற்றுக்கொள்ளல் என்பதற்கு இவ்வாறான போட்டிகள் முக்கியமானவை. மொத்தம் 50 நிகழ்ச்சிகள் வரை இப்போட்டியில் இடம்பெற்றுள்ளதாக அறிகின்றேன். விவாதம், நாடகம், நடனம் போன்ற பல்வேறு புறக்கிருத்திய செயற்பாடுகள் இதில் அடங்குபவை மகிழ்ச்சிக்குரியதாகும்.

விழா சிறப்புறவும் வெளியிடப்பட்வுள்ள சிலம்பு சஞ்சிகை நல்ல முறையில் வெளிவரவும் எனது மனதார வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்விழா சிறப்புற ஒத்துழைத்து முழு உற்சாகத்துடன் செயற்படும் சகலருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ரஞ்சித் சோமவங்ஷ,
கல்வி அமைச்சர்,
மேல்மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச்செய்தி



மேல் மாகாண கல்வித்திணைக்களத்தால் முன்னெடுத்து நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழாவில் மலரவுள்ள 'சிலம்பு' என்னும் மலரில் எனது வாழ்த்துச் செய்தியும் இடம் பெறுவது குறித்து பெருமிதம் அடைகிறேன்.

மாணவர்களின் ஆற்றல்கள், திறன்கள் என்பன பாடசாலை ரீதியாக வளர்க்கப்பட்டு தேசியரீதியாக வெளிகொணரப்பட வேண்டும் என்பது நிதர்சனமான உண்மை. சவால்கள் நிறைந்த நவீன உலகில் திடசித்தத்துடன் மாணவ சமுதாயம் கால் பதிப்பதற்கு இவ்வகையான போட்டிகள் ஒரு களமாக அமையும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு காலூன்றி நிற்பதற்கு களம் அமைத்துக்கொடுக்க வேண்டிய கடப்பாடு கல்வியிலோடு தொடர்புடையவர்களுக்கு உண்டு. மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்யும் இவ்விழா ஒவ்வொரு வருடமும் நடைபெற எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

ஜயந்தி விஜேதுங்க,
பிரதம செயலாளர்,
மேல் மாகாணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல்மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப்பிரிவால் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழாவிற்கும் அவ்விழாவில் வெளியிடப்படவுள்ள 'சிலம்பு' நூலுக்கும் என் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையர் என்ற உணர்வோடு நாம் தற்போதைய மாணவ சந்ததியை உருவாக்கும் இத்தகைய முயற்சிகள் பாராட்டத்தக்கவை. இதற்காக அர்ப்பணிப்புடன் பணிபுரியும் அனைவருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு மேல் மாகாண தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

S.G.விஜேபந்து,

செயலாளர்,

மேல் மாகாண கல்வி அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மாகாண கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



மேல் மாகாண கல்வித்திணைக்களத்தின் தமிழ் பிரிவினால் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழாவையொட்டி வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந் நிகழ்வானது மொழிரீதியான திறன்களையும் மாணவர்கள் மத்தியில் மொழியை வளர்த்துக் கொள்வதற்கான ஒரு பாலமாகவும் அமைந்திருக்கின்றது. அதற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு மாகாண ரீதியில் உள்ள அனைத்துத் தமிழ் பேசும் மாணவர்களையும் உள்ளடக்கி அவர்களுக்கிடையில் பாடசாலை மட்ட, வலய மட்ட, மாகாண மட்டப் போட்டிகளை நடாத்திப் பல்வகையான மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்கிறார்கள்.

இலைமறை காய்களாக இருந்த மாணவர்களின் திறன்களை முழு இலங்கைக்கும் காட்டுமுகமாக களம் அமைத்துக்கொடுத்த மேல் மாகாண தமிழ்மொழிப்பிரிவுப் பணிப்பாளர்களுக்கும் வலயங்களைச் சேர்ந்த தமிழ்மொழிப்பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அத்துடன் இவ்விழாவைச் சிறப்புற உதவிய ஆசிரிய ஆலோசகர்களுக்கும் பலதரப்பட்ட போட்டிகளிலும் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிக்காட்டி வெற்றி பெற்ற, போட்டியிட்ட அனைத்து மாணவச்செல்வங்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ்விழா சிறப்புறவும் இனிவரும் காலங்களில் இவ்வாறான விழாக்கள் நடைபெறவும், இவ்விழாவினைச் சிறப்பிக்கும் முகமாக பலவகையான விடயங்களை உள்ளடக்கிய "சிலம்பு" எனும் இதழினை வெளியிடுகின்றார்கள். இவ்விதம் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து இவ்விதழ் வெளிவரவும் என் வாழ்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விமல் குணரத்ன,
மேல் மாகாண கல்விப்பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின்
## தமிழ் மொழிப்பிரிவுப் பணிப்பாளரின் செய்தி



மேல் மாகாண கல்வித்திணைக்களம் தமிழ்பிரிவால் வெளிவரும் 'சிலம்பு' சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் கூறும் நல்லுலகிற்கு 'சிலம்பு' ஒரு புதிய சொல்லன்று 'சிலம்பு' காவியம் படைத்த ஒப்பற்ற இலக்கியம். இது காலத்தை வென்றது. முடிமக்கள் காப்பியங்களாகவே திகழ்ந்த காவியங்கள், சிலம்பினால் குடிமக்கள் காப்பியமாக மாற்றம் பெற்று எழுச்சி கண்டது.

ஆகவே, கன்னி முயற்சியாக எமது திணைக்களத்தின் மூலமாக வெளியிடப்படும் இச்சிறு சஞ்சிகைக்கு 'சிலம்பு' எனும் நாமத்தை மகுடமாக வைத்தோம். மேல் மாகாணத் தமிழ் மொழிப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் ஆக்கமுயற்சிகளை, இச்சிலம்பில் முத்துக் கோவையாகப் பதித்துள்ளோம். ஆகவே மாணவர் தம் திறமைக்கு களமாகவும், சான்றாகவும் 'சிலம்பு' இதழ் காலத்தை வெல்லும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

2015 ஆம் ஆண்டு மேல் மாகாண மட்டத்தில் நடைபெற்ற தமிழ் மொழித்தினப் போட்டியில் பங்கேற்ற மாணவரின் ஆக்கங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிடுகிறேன்.

இச்சஞ்சிகை சிறப்புற நூலுருப் பெற்று உங்கள் கைகளில் தவழக் காரணகர்த்தாக்களான மேல் மாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர் திரு. விமல் குணரத்தன அவர்கள், மேலதிக கல்விப்பணிப்பாளர்களான திரு.கே.பி.என்.பிறேமசிறி, திரு ஜீ.என்.சில்வா மற்றும் எமது பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆர்.உதயகுமார், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் போன்ற அனைத்துத் தரப்பினருக்கும் நன்றிக் கடனைச் செலுத்தி நிற்கிறேன். மேல் வருங்காலங்களிலும் இப்பணி தொடர எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.

"வாழ்க தமிழ் - வளர்க தமிழ்ப்பணி"

ஐ.எல்.எம்.இன்சார்
பணிப்பாளர் (தமிழ்ப்பிரிவு)
மேல் மாகாண கல்வித்திணைக்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மாகாண தமிழிலக்கிய விழா
# வாழ்த்துப்பா

**இராகம் : அமிர்தவர்ஷினி**

சங்கமது போற்றிய நம் அன்னைமொழி வாழியென
தங்குமெழி லிலங்கையிலே சங்கெடுத்து நாம் முழங்கி
மேற்கினிலே வாழுகின்ற மேன்மையுறு தமிழரெல்லாம்
போற்று தமிழ் இலக்கிய விழவு வாழியவே!

**இராகம் : பாகேஸ்ரீ**

பொங்கு தமிழ் மொழி விளங்க தூய சைவ நெறியுடன்
பௌத்தம் இஸ்லாம் கிறிஸ்தவமும் பார் புகழ ஓங்கிட
மங்கலம் விளங்கிடவே எங்கும் தமிழ் ஓங்கிடவே
ஏற்று தமிழ் இலக்கிய விழவு வாழியவே!

**இராகம் : அடாணா**

கல்வியொடு கலை விளக்கும் கல்விப்புல மாந்தருடன்
தங்கு புகழ் கலைஞருடன் பாட்டாளி மக்களுமே
எங்கள் தமிழ் வாழ்கவென ஏற்றமுடன் நாமிங்கு
சாற்று தமிழ் இலக்கிய விழவு வாழியவே!

**இராகம் : பிருந்தாவனசாராங்கா**

நித்தமெமை வாழவைத்து நீங்கா துறைகின்ற
முத்தமிழ் முழங்கிடவே சித்தமுடன் நாமிணைந்து
கத்து கடல் சூழிலங்கை மேற்கிலங்கும் மாகாணம்
இயற்று தமிழ் இலக்கிய விழவு வாழியவே!


பாடலாக்கம் : சோமசுந்தரர் முரளி
அதிபர், தெகிவளை தமிழ் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மாகாண தமிழிலக்கிய விழா
# ஏற்பாட்டாளர் குழு

- திரு. D. D. P விமல் குணரட்ண - மேல் மாகாண கல்விப் பணிப்பாளர்
- திரு. G. N. சில்வா - மேல் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
- திரு. K. P. N பிறேம ஶ்ரீ - மேல் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)
- திரு. I.L.M இன்சார் - மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் (தமிழ்ப்பிரிவு)
- திரு. இ. உதயகுமார் - மேல் மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்ப்பிரிவு)
- திரு. A.B.M அலவி - மேல் மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர்
- திருமதி. த. இராஜரட்ணம் - பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கொழும்பு வலயம்)
- திரு. தி. கணேசராஜா - உதவிக்கல்விப் பணிப்பாளர் (களனி வலயம்)
- திரு. I. A. காதர் - உதவிக்கல்விப் பணிப்பாளர் (பிலியந்தல வலயம்)
- திரு. M.S. அஸ்ரப் - பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கம்பஹா, மினுவாங்கொட வலயம்)
- திரு. M.H.M சக்ரியா - உதவிக்கல்விப் பணிப்பாளர் (களுத்துறை வலயம்)
- செல்வி. யோ. ராஜந்திரம் - உதவிக்கல்விப் பணிப்பாளர் (மத்துஹம வலயம்)
- திருமதி.ச. மனோகரன் - உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஹோமாகம வலயம்)
- திரு. M. சந்திரமோகன் - உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஹொரண வலயம்)
- திருமதி. பிரபா செல்லத்துரை - கோட்டக் கல்விப்பணிப்பாளர் (கொழும்பு மத்தி)
- திரு. சோ. முரளி - அதிபர் (தெகிவளை தமிழ் மகாவித்தியாலயம்)
- திரு. வை. கணேசலிங்கம் - ஆசிரிய ஆலோசகர்
- திருமதி. பா. சிவலோகநாதன் - ஆசிரிய ஆலோசகர்
- திருமதி. க. ஶ்ரீஸ்கந்தராஜா - ஆசிரிய ஆலோசகர்
- திருமதி. அ. பிரபாகரன் - ஆசிரிய ஆலோசகர்
- திருமதி. சா. செல்வதாஸ் - பகுதித் தலைவர் (றோயல் கல்லூரி)
- செல்வி. கா. ஆனந்தராஜா - ஆசிரியை (அல் முஸ்தபா வித்தியாலயம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மாகாண தமிழிலக்கிய விழா
# பனுவலின் வகிபங்காளர்கள்


- திரு. I.L.M. இன்சார் - மேல்மாகாணக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்ப் பிரிவு)
- திரு. இ. உதயகுமார் - மேல்மாகாணக் உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்ப் பிரிவு)
- திரு. தி. கணேசராஜா - உதவிக் கல்விப் பணிப்பாளர் (களனி வலயம்)
- திருமதி. தவேஸ்வரி இராஜதுரை - ஆசிரிய ஆலோசகர்
- திருமதி சுலோஜனா சகாதேவன் - ஆசிரிய ஆலோசகர்
- திரு. த. அகிலநேசன் - ஆசிரியர் (புனித அந்தோனியார் த.ம.வி கொழும்பு -14)
- திரு. M.I.S ஹமீட் - ஆசிரிய ஆலோசகர்
- திருமதி. உதயா குகநாதன் - ஆசிரிய ஆலோசகர்
- திரு.சி. ஈஸ்வரன் - ஆசிரிய ஆலோசகர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்துக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர வகுப்பில் புதிய தொழினுட்பப் பாடப்பிரிவு

பேராசிரியர் சோ.சந்திரசேகரன்
முன்னாள் கல்விப் பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

நீண்டகாலமாக க.பொ.த உயர்தர வகுப்புகளில் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பாடப்பிரிவுகளையே மாணவர்கள் கற்று வந்தனர். விஞ்ஞானப் பாடத்தில் கணிதம், உயிரியல் ஆகிய இரு பிரிவுகள் உள்ளன. வர்த்தகவியல் பாடங்கள் பிற்காலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்களில் உள்ள சகல பீடங்களுக்கும் இப்பாடப்பிரிவுகளைப் பயின்ற மாணவர்கள் திறமைச் சித்தியின் அடிப்படையிலும் மாவட்ட ரீதியாகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாணவர்கள் பெறும் புள்ளிகள் Z புள்ளிகளாக மாற்றப்பட்டு, அனுமதிக்கு அவை பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறான பாடப்பிரிவுகள் பெருமளவுக்கு நூற்கல்வி சார்ந்தவை. மருத்துவம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம் போன்ற உயர் தொழிற் துறைகளில் பயில மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் மொத்தத்தில் தொழினுட்பம் சார்ந்த கற்கை நெறிகள் உயர்தர வகுப்புக்களில் முக்கியத்துவம் பெறவில்லை. பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களில் கணிசமான தொகையினர் கலைப்பிரிவிலேயே அனுமதி பெற்றனர். வேலையற்ற பட்டதாரிகளில் கலைப்பட்டதாரிகளின் தொகையே அதிகமாக இருந்தது. இவர்கள் பெரும்பாலும் அரசாங்கத் தொழில்களையே நாடினர். இன்னும் அரசாங்கத்துறையில் 15% வேலைவாய்ப்புகளே காணப்படும் நிலையில் இவர்களை உள்வாங்கிக் கொள்வது அரசாங்கத்துறைக்கு சிரமமாக இருந்தது. இவ்வகையில் கலைப்பீட மாணவர்கள் தொகையைக் குறைத்தேயாகவேண்டும் என்பது உயர்கல்விக் கொள்கை வகுப்போரின் எண்ணமாக இருந்து வருகின்றது.

2007 - 2010 காலப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவோரில் 30% மானவர்கள் கலைப்பிரிவைச் சேர்ந்தவர்களாவர். பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெறுவோரில் ஏறத்தாழ 50% மானவர்கள் கலைப்பாடங்களைப் படித்தவர்களாவர். (பார்க்க அட்டவணை)

**தகுதி பெறுவோர் 2007 - 2010**

| மொத்தம் | 2007<br>121421 | 2009<br>125284 | 2010<br>142516 |
|---|---|---|---|
| கலைத்துறை | 56917 | 62676 | 72800 |
| விஞ்ஞானத்துறை | 26650 | 29400 | 34000 |
| வர்த்தகப் பிரிவு | 37961 | 33202 | 35581 |

இக்குறிப்பிட்ட ஆண்டுகளில் அனுமதி பெறும் மாணவர்களில் 30% மானவர்கள் கலைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். 1960 முதலான புள்ளிவிபரங்களின்படி கலைப்பீட மாணவர் சதவீதம் 40% - 50% மாக இருந்து பின்னர், வர்த்தகவியல் துறையின் அறிமுகத்துடன் இச்சதவீதம் 30 இற்குக் குறைந்தது. பல்கலைக்கழகத்தில் பயின்ற மொத்த மாணவர்கள், பட்டம் பெற்றவர்கள் ஆகியோரில் கலைப்பாடங்கள் கற்றவர்களின் தொகையே அதிகமாக இருந்ததைக் காணலாம் (2004 - 2006).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் பயின்ற மொத்த மாணவரில் கலைப்பீட மாணவர் (2005 - 2007)

| | 2005 | 2006 | 2007 |
|---|---|---|---|
| மொத்த மாணவர் | 63355 | 65206 | 67600 |
| கலைப்பீட மாணவர் | 22510 | 23704 | 23750 |

பல்கலைக்கழகப் பட்டம் பெறும் மாணவர்களில் கலைப்பட்டம் பெற்றவர்கள் (2005 - 2007)

| | 2005 | 2006 |
|---|---|---|
| பட்டதாரிகள் (மொத்தம்) | 7020 | 11235 |
| கலைப்பட்டதாரிகள் | 1652 | 4392 |

மொத்தத்தில் பல்கலைக்கழக அமைப்பில் கலை பயிலுவோரின் தொகை அதிகமாகக் காணப்பட்டு வந்தது. அவர்கள் வேலையற்றோராக இருக்குமிடத்து அதனால் பல சமூகப் பிரச்சினைகள் தோன்றின. முன்னைய காலங்களில் இளைஞர் விருத்தியானது கிளர்ச்சிகளுக்கு இட்டுச் சென்று பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். உயர்கல்விக்கான வாய்ப்புகள் இல்லாமையும் வேலையின்மைப் பிரச்சினையும் இக்கிளர்ச்சிகளுக்கான முக்கிய காரணங்களாகக் கூறப்பட்டன.

இப்பின்புலத்தில் க.பொ.த உயர்தரக் கல்வியில் மாற்றங்கள் தேவை என உணரப்பட்டது. கலை, வர்த்தகம், விஞ்ஞானம் போன்ற பாடப்பிரிவுகளுடன் ஒரு தொழினுட்பப் பாடமும் கற்பிக்கப்படல் வேண்டும் என 2003 ஆம் ஆண்டில் தே.க.ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. யுனெஸ்கோவும் உலக தொழில் தாபனமும் (ILO) தனது அறிக்கைகளில் பாடசாலையில் வழங்கப்படும் பொதுக்கல்வியுடன் தொழினுட்பக் கல்வியை இணைப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றி எடுத்துக் காட்டி இருந்தன (பார்க்க பெட்டி)

> "இவ்வாறு தொழினுட்ப கல்வியை பாடசாலைக் கல்வியுடன் இணைப்பதன் நோக்கம் மாணவர்களைத் தொழில் உலகுக்கும் தொழினுட்ப உலகுக்கும் அறிமுகம் செய்வது பொருட்கள், சாதனங்கள், கருவிகள், உற்பத்திச் செய்முறை, பொருள் விநியோகம், முகாமைத்துவம் என்பன பற்றி அறியச் செய்தல், செயல் முறை அனுபவத்தினூடாகக் கற்றல் அனுபவத்தைச் செழுமைப்படுத்தல்.
>
> - UNESCO & ILO (2002).

க.பொ.த சா/த பாட ஏற்பாட்டில் தொழில்சார் பாடத்தொகுதி ஒன்று உண்டு. அப்பாடங்களுள் ஒன்றை மாணவர்கள் கற்க வேண்டும் என்பது நியதி. அப்பாடங்கள் ஓரளவுக்குத் தொழில் உலகை மாணவர்களுக்கு அறிமுகம் செய்வன. ஆனால் அதன் பின்னர் மூன்றாம் நிலைக் கல்வி நிலையில் அவர்கள் தொழில்சார் கல்வி பெற வாய்ப்புகள் இருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| க.பொ.த சா/த தொழில்சார் பாடங்கள் | க.பொ.த உ/த தொழினுட்பக்கல்விப் பாடங்கள் (S) |
|---|---|
| • தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் | • சிவில் தொழினுட்பம் |
| • விவசாயம், உணவுத்தொழினுட்பம் | • பொறித்தொழினுட்பம் |
| • கடற்றொழில் | • மின்தொழினுட்பம் |
| • தட்டச்சும் சுருக்கெழுத்தும் | • விவசாயத்தொழினுட்பம் |
| • மனைப்பொருளியல் | • உயிரியல் தொழினுட்பம் |
| • உடற்கல்வியும் சுகாதாரமும் | • உணவுத்தொழினுட்பம் |
| • தொடர்பாடல், ஊடகங்கள் | |

கடந்த ஐந்து ஆண்டு காலமாக வலதுபுறம் தரப்பட்டுள்ள ஆறு தொழினுட்பப் பாடங்கள் க.பொ.த மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் முக்கியத்துவம் இப்பாடங்கள் கலைத்துறை மாணவர்களுக்குரியவையாகும். அவர்கள் இவ்வாறு பாடங்களில் ஒன்றையும் இரு கலைத்துறைப் பாடங்களையும் தெரிவு செய்ய வேண்டும். இவ்வாறு உயர் இடைநிலைக் கல்வியில் தொழினுட்ப பாடங்களை இணைத்துப் பல நாடுகளில் பின்பற்றப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டு காலத்துக்குரிய தரவுகளைப் பார்க்கும் போது, சிறு தொகையான மாணவர்களே இத்தொழில்நுட்பப் பாடங்களைத் தெரிவு செய்ததாகத் தெரிகின்றது. இதற்குக் காரணம் ஆசிரியர்கள் மற்றும் வளப்பற்றாக்குறையாகும். அத்துடன் தொடர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளும் குறைவாக இருந்தன. இப்பாடங்களைக் கற்றவர்கள் இறுதியில் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையிலேயே சேர வேண்டியதாயிற்று.

**க.பொ.த உ/த தொழினுட்பப் பாடத்தைக் கற்று பரீட்சைக்கு அமர்ந்தவர்கள்**

| பாடங்கள் | 2009 | 2010 |
|---|---|---|
| • சிவில் தொழினுட்பம் | 62 | 125 |
| • இயந்திரத் தொழினுட்பம் | 104 | 175 |
| • மின், தகவல் தொழினுட்பம் | 67 | 164 |
| • உணவுத் தொழினுட்பம் | 57 | 123 |
| • விவசாய தொழினுட்பம் | 106 | 210 |
| • உயிரியல் தொழினுட்பம் | 137 | 174 |

கலைத்துறையில் சேருகின்ற மாணவர் தொகையைக் குறைத்துத் தொழினுட்பப் பிரிவில் சேரும் மாணவர் தொகையை அதிகரிக்கும் நோக்குடன் அரசாங்கம் உயர்தர வகுப்புகளில் தொழினுட்பப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது. இப்பிரிவில் சேருபவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து அக்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும். கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு அடுத்தபடியாக ஒரு தனிப்பிரிவாக இது அறிமுகம் செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இணைந்து நடத்திய கலந்துரையாடல்களின் பின்னர் இப்பிரிவுக்குரிய பாடங்கள் பற்றி முடிவு செய்யப்பட்டுள்ளது.

1. இரு பரந்த பாடப்பிரிவுகள்
   - பொறியியல் தொழினுட்பம்
   - உளவியல் தொழினுட்பம்

   இவற்றில் ஒன்றைத் தெரிவு செய்தல்
2. தொழினுட்பத்தின் விஞ்ஞானம் என்னும் பாடம், இதில் விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழினுட்பம் என்பவற்றின் அடிப்படைத் தத்துவங்கள் அடங்கும்.
3. க.பொ.த உ/த வகுப்புக்குரிய ஒரு தொகுதிப்பாடங்களில் ஒரு பாடம் (அவையாவன : பொருளியல், புவியியல், ஆங்கிலம், மனைப் பொருளியல், வியாபாரக் கற்கை, விவசாய விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை ஆகிய பாடங்களுள் ஒன்றாகும்)

இரு தொழினுட்ப பாடங்களுடன் ஒரு கலைப் பாடத்தையும் (பொருளியல் அல்லது புவியியல்) அல்லது ஒரு வர்த்தகவியல் பாடத்தையும் கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிட்டுகின்றது.

மூன்றாவது தொகுதிக்கான பாடத்திட்டங்கள் ஏற்கனவே உள்ளவை. முதலிரு பாடங்களுக்கான (பொறியியல் தொழினுட்பம், தொழினுட்பத்துக்கான விஞ்ஞானம்) பாடத்திட்டங்கள் புதிதாக வரையப்பட்டுள்ளன. இம்முயற்சியில் பல்கலைக்கழக அறிஞர்கள், மூன்றாம்நிலை, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அதிகாரிகள், கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் ஆகியோர் பங்கு கொண்டனர்.

பல பல்கலைக்கழகங்கள் பொறியியல், விஞ்ஞானம் தவிர்ந்த பல தொழினுட்பக் கற்கை நெறிகளில் பட்டங்களை வழங்கி வருகின்றன. புதிய தொழினுட்பவியல் கற்கைப் பிரிவில் பயிலுவோர் பல்கலைக்கழகங்கள் வழங்கும் இத்தொழினுட்பக் கற்கை நெறிகளில் அனுமதி பெறமுடியும். அத்துடன் இம்மாணவர்களுக்கும் நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக்கும் பொருத்தமான புதிய தொழினுட்பக் கற்கை நெறிகளை உருவாக்குமாறு பல்கலைக்கழகங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் இக்கற்கை நெறிகளைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக ஆணைக்குழு செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு.

க.பொ.த உ/த வகுப்புகளில் தொடங்கப்படவுள்ள இத்தொழினுட்பப் பிரிவு இலங்கையின் உயர்தரக் கல்வி நிலையில் ஏற்படவுள்ள ஒரு பிரதான மாற்றத்தைக் குறிக்கின்றது. வழமையான நூற்கல்வி சார்ந்த கலை, வர்த்தகம், விஞ்ஞான பாடநெறிகளுக்கு அப்பால் செயல்முறை சார்ந்த ஒரு கற்கை நெறி இதுவாகும். தொழிற் சந்தையில் கோரப்படும் தொழினுட்பத்திறன்களுடன் நேரடித் தொடர்புடைய பாடங்களை இக்கற்கை நெறி கொண்டு விளங்கும். அத்துடன் பல்கலைக்கழக நிலையில் இத்துறையில் பட்டக்கற்கை நெறிகளைக் கற்கும் வாய்ப்பும் உண்டு. க.பொ.த உ/த கல்வியைத் தொழில் மயப்படுத்தும் இக்கற்கை நெறியானது, சர்வதே ரீதியான கல்விப் போக்குகளுக்கும் இசைவானது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கற்கை நெறியை உருவாக்குவதில் தேசிய கல்வி நிறுவகம் முன்னின்று செயற்பட்டது என்பது மற்றொரு முக்கிய அம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தோராம் நூற்றாண்டில் மாணவர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள்

பேராசியர் தை. தனராஜ்
பீடாதிபதி, கல்விப்பீடம்
Horizon Campus, Malabe

## அறிமுகம்

மனிதன் தனது தோற்றத்திலிருந்தே மாற்றங்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளான். கிரேக்கத்தில் சோக்கிரற்றீஸ் காலத்துக்கு முன்னர் வாழ்ந்த ஹெரகிலிற்றல் என்னும் தத்துவ ஞானி "நீங்கள் ஒரே ஆற்றில் இரு முறை கால் வைக்க முடியாது" எனக் குறிப்பிட்டார். இக் கூற்றிலிருந்து மாற்றம் குறித்த பிரக்ஞை மனிதனிடம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்துள்ளமை தெளிவாகிறது. எனினும் கடந்த ஐம்பது வருட காலத்தில் மனித வாழ்வியலில் குறிப்பாக மருத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பவியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மனிதனின் தோற்றத்திலிருந்து ஏற்பட்டுள்ள மாற்றங்களை விட அளவிலும் தரத்திலும் மிக அதிகமானவை எனக் கூறப்படுகிறது. டக்ளஸ் கெல்னர் (douglas kellner, 2008) என்பவரின் கூற்றுப்படி தற்போது ஏற்பட்டு வருகின்ற தொழில் நுட்பவியல் புரட்சியானது கடந்த காலத்தில் அச்சுயந்திரத்தின் கண்டுபிடிப்பு மனித வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களை விட பாரிய தாக்கங்களை ஏற்படுத்தப் போகின்றது என எதிர்வு கூறுகிறார். உண்மையில் புதிய மிலேனியம் மனித வாழ்வியலின் சகல அம்சங்களிலும் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றது என்பதில் ஐயமில்லை.

மேற்படி தொழில் நுட்பவியல் புரட்சியானது எமது கல்வி உலகையும் விட்டு வைக்கப் போவதில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகள் பல ஏற்கெனவே தமது கல்வி முறைமையிலும் வகுப்பறை செயன்முறைகளிலும் தொழில்நுட்பத்தை உள்வாங்கி பல மாற்றங்களை செய்து வருகின்றன. இன்றைய முதலாம் தரத்தில் பயிலும் மாணவர்கள் 2075 ஆம் ஆண்டில் ஓய்வு பெறக்கூடும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் உலகில் ஏற்படப் போகும் மாற்றங்களையே எதிர்வு கூற முடியாத நிலையில் மேற்படி மாணவர்களை உலக வாழ்வுக்கு தயார்ப்படுத்தும் பொறுப்பு ஆசிரியர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இதனை ஆசிரியர்கள் எவ்வாறு நிறைவேற்றப் போகின்றனர் என்பது வியப்புக்குரியது என்றாலும் அது தவிர்க்க முடியாதது என்னும் யதார்த்தத்தையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இக்கட்டுரையானது இருபத்தோராம் நூற்றாண்டின் தொழினுட்ப புரட்சியானது மனித வாழ்வியலில் ஏற்படுத்தும் மாற்றங்கள், அவற்றுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு அவர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய புதிய தேர்ச்சிகள் ஆகியவற்றை சுருக்கமாக விபரிக்க முயல்கின்றது.

## 21 ஆம் நூற்றாண்டு

ஏற்கனவே கூறியவாறு 21ஆம் நூற்றாண்டு மனித வாழ்வியலில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இவற்றில் சில இங்கு குறிப்பிடத்தக்கவையாகும். அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட மனித உயிர்க்கல செயற்றிட்டம் (Human Genome Project) வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. இதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வுக்காலம் அதிகரிக்கும் அதே நேரத்தில் குடும்ப உறவுகள், தொழில், ஓய்வு பெறுதல் முதலியவை தொடர்பான பிரச்சினைகள் அதிகரிக்கக்கூடும். நனோ தொழில்நுட்பவியல் (Nano Technology) விருத்தியானது மருத்துவத்திலும் விண்வெளி பயணங்களிலும் வியத்தகு மாற்றங்களை உருவாக்கும். அதே நேரத்தில் அணுசார் பயங்கரவாத பிரச்சினைகள் எழக்கூடும். பச்சை வீட்டுத் தாக்கம் (Green house Effect) பலவித புற்றுநோய்களை உருவாக்கும். வெப்ப வலயக் காடுகளின் அழிவு காலநிலைப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் பூகோள மயமாக்கம், பல்தேசிய கம்பனிகளின் ஆதிக்கம் நாடுகளின் எல்லைகளையும் தேசங்களின் இறைமையையும் கேள்விக்குட்படுத்தலாம்.

இவ்வாறு இருபத்தோராம் நூற்றாண்டு ஒரு புறத்தில் புரட்சிகரமான நல்விளைவுகளையும் மறுபுறத்தில் மனிதகுலத்தின் அழிவுக்கான காரணிகளையும் ஒருங்கே கொண்டுள்ளது. புதிய தொழில்நுட்பவியல்கள் காரணமாக புதிய வலு மூலகங்கள் கண்டறியப்பட்டு விருத்தி செய்யப்படலாம். மனித செயற்பாடுகளாலும் காலநிலை மாற்றத்தினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகள் மீண்டும் விருத்தி செய்யப்படலாம். விண்வெளிப் பயணங்களும், ஆழ்கடல் ஆய்வுகளும் மனித குலத்து நல்வாழ்வுக்கு அளவிட முடியாத வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் வளர்ச்சி காரணமாக உலகம் பெரிதும் சுருங்கி விட்டது. ஒரு நாளில் ஏழு மில்லியன் குறுஞ்செய்திகள் (sms) மரிமாறப்படுகின்றன. ஒரு நாளில் சுமார் 3000 நூல்கள் வெளி வருகின்றன. ஒரு மாதத்தில் 2.7 பில்லியன் தேடல்கள் கூகுளில் (Google) பதிவு செய்யப்படுகின்றன. மொத்தத்தில் மனித அறிவு வெறும் 72 நாட்களில் இரு மடங்காக அதிகரித்து வரும் எனப்படுகிறது. எனவே 21 ஆம் நூற்றாண்டு என்பது அறிவு மைய நூற்றாண்டாக மலர்ந்துள்ளது.

## 21 ஆம் நூற்றாண்டில் கல்வி

21 ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்பவியல் புரட்சியானது கல்வித்துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. பாடசாலைகள் என்பன குறிப்பிட்ட காலத்தில் மாணவர்களை பரீட்சைகளுக்கு தயாரிக்கும் தொழிற்சாலைகள் என்பதிலிருந்து உருமாறி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தை உலக அறிவுச் செல்வத்துடன் இணைக்கும் அறிவு மையங்களாக மாறி வருகின்றன. நாட்டுக்குள் உள்ள பாடசாலைகளை மாத்திரமன்றி வேறு நாடுகளிலுள்ள பாடசாலைகளையும் ஒன்றிணைக்கும் வலையமைப்புகள் தோற்றம் பெற்றுள்ளன. பாடசாலைகளில் ஆசிரியர்களின் பிரதான வகிபங்கு தகவல் வழங்குதல் என்பதிலிருந்து மாற்றம் பெற்று மாணவர்களை வாழ்க்கைக்குத் தயார் செய்யும் பணியாகியுள்ளது. வாழ்க்கை நீடித்த கல்விக்கான ஆர்வத்தை மாணவர்களில் விதைத்து வளர்க்க வேண்டியவர்கள் ஆசிரியர்களே. பின்வரும் அட்டவணை கல்வி முறைமையின் பல்வேறு அம்சங்களிலும் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் காட்டி நிற்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழைய கல்வி முறைமை | இன்றைய கல்வி முறைமை |
|---|---|
| ✦ ஒரு பாடநூல் | ✦ இலத்திரனியல் நூலகம் |
| ✦ கற்பதற்கான கருவியாக புத்தகம் | ✦ கருவிகளாக தொழில் நுட்பவியல்கள் |
| ✦ நான்கு சுவர்களுக்குள் வகுப்பறை | ✦ சுவர்களற்ற மெய்நிகர் (virtual) வகுப்பறை |
| ✦ வகுப்பறை தான் உலகம் | ✦ உலகமே வகுப்பறை |
| ✦ பாடசாலை, நியமங்களை தீர்மானிக்கும் | ✦ உலக நியமங்கள் |
| ✦ வாசிப்புத் திறன்கள் | ✦ தொடர்பாடல் திறன்கள் |
| ✦ மாணவர்கள் தனித்தனியாக செயற்படுதல் | ✦ கூட்டாக செயற்படுதல் |
| ✦ குறைவான மாணவர் சுதந்திரம் | ✦ கூடிய கற்றல் சுதந்திரம் |
| ✦ அடிப்படை எழுத்தறிவு | ✦ பன்முக எழுத்தறிவு |
| ✦ ஆசிரியர் அறிவூட்டுபவர் | ✦ ஆசிரியர் அறிவைப் பெற வழிகாட்டுபவர் (Coach, mentor, facilitator) |

**Dr. Steve Bett (1998)**

மேற்படி அட்டவணையானது கல்வி முறைமையின் பல்வேறு அம்சங்களாக கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள், மாணவரின் தேர்ச்சிகள் மற்றும் ஆசிரியர்களின் புதிய வகிபங்குகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படவேண்டிய மாற்றங்களைக் காட்டி நிற்கின்றது. குறிப்பாக 21ஆம் நூற்றாண்டுக்குரிய கலைத்திட்டமானது செயற்றிட்டம் சார்ந்ததாகவும், ஆய்வு சார்ந்ததாகவும் பல்வேறு கற்கை நெறிகளை ஒன்றிணைப்பதாகவும் அமைந்துள்ளதோடு உள்ளூர், தேசிய பிராந்திய, உலகளாவிய சமூகங்களை ஒன்றிணைப்பதாகவும் உள்ளது. உயர் மட்ட சிந்தனைத் தேர்ச்சிகள், பன்மை நுண்ணறிவுகள், பன்மை எழுத்தறிவுகள், தொழினுட்பவியல், பல்லூடகம் மற்றும் பல்லின மதிப்பீட்டு முறைகள் ஆகியவற்றை நவீன கலைத்திட்டம் ஒன்றிணைப்பதாக உள்ளது.

## 21ஆம் நூற்றாண்டில் மாணவர்களிடம் விருத்தி செய்ய வேண்டிய திறன்கள்

புதிய நூற்றாண்டின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமெனின் மாணவர் விருத்தி செய்ய வேண்டிய புதிய திறன்கள் யாவை என்பது முக்கியமானது இதைப்பற்றி ஆய்வுகள் ஏற்கெனவே பல நாடுகளில் பல அமைப்புகளினாலும் ஆய்வாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் சில பின்வருமாறு :

1. 21 ஆம் நூற்றாண்டுக்கான பங்காண்மை
   (Partnership tor 21st Century)
2. ஏழு வாழ்க்கைத் தேர்ச்சிகள் - ரோனி வாக்னர்
   (Tony wagner's Seven survuval Skills)
3. அயோவா அத்தியாவசிய தேர்ச்சிகள்
   (Iowa Essential Skills for 21st Century)
4. கனக்டிகற் கல்வித் திணைக்களத்தின் 21 ஆம் நூற்றாண்டு திறன்கள்
   (Onneccticut Department of educations 21st centary Skills)
5. 21 ஆம் நூற்றாண்டு கற்பித்தலும் கணிப்பீடும்
   (Assessment and Teaching of 21st Cenrtury)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி ஆவணங்களில் மாணவர்கள் 21ஆம் நூற்றாண்டில் கொண்டிருக்க வேண்டிய திறன்களின் பட்டியலைத் தருகின்றன. இவை யாவும் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றில் ரோனி வாக்னரின் ஏழு வாழ்க்கைத் திறன்கள் முக்கியமானவை. அமெரிக்க மாணவர்கள் கொண்டிருக்க வேண்டிய திறன்களையும் அவர்கள் தற்போது கொண்டிருக்கும் திறன்களையும் மதிப்பீடு செய்த வாக்னர் The Global Achievement Gap என்னும் ஆய்வு நூலை வெளியிட்டார். குறிப்பிட்ட இடைவெளியை நீக்க வேண்டுமெனின் பின்வரும் ஏழு திறன்கள் முக்கியமானவை என அவர் குறிப்பிட்டார். அந்த ஏழு தேர்ச்சிகளும் பின்வருமாறு :

1. ஆழ் சிந்தனையும் பிரச்சினை தீர்த்தலும்
2. பல்வேறு வலையமைப்புகளுடன் இணைந்து செயற்படல்
3. விழிப்புணர்வும் சூழலுக்கு இசைவு படுதலும்
4. தன்முனைப்பும் தொழின் முயற்சியாண்மையும்
5. விளைதிறன் மிக்க தொடர்பாடல்
6. தகவல்களைப் பெறுதலும் பகுப்பாய்வு செய்தலும்
7. தெரிந்து கொள்ளும் ஆர்வமும் கற்பனை வளமும்

இவை ஒவ்வொன்றைப் பற்றியும் ஆசிரியர்களும் பெற்றார்களும் ஏனைய கல்வி சார் பணிப்பாளர்களும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இச் சிறு கட்டுரையில் மேற்படி திறன்கள் பற்றிய விரிவான விளக்கத்தைத் தர முடியாது. எனினும் www.gse.harvard.edu என்னும் இணைய தளத்தில் மேற்படி விடயம் பற்றிய விரிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதே போல ஆசிரியர்களும் புதிய வகிபங்குகளை மேற்கொள்ள வேண்டிய தேவையை 21ஆம் நூற்றாண்டு ஏற்படுத்தியுள்ளது. ஆசிரியர்களின் புதிய வகிபங்குகள் பற்றிய விளக்கத்தை அகவிழி (டிசம்பர் 2012) சஞ்சிகையில் காணலாம்.

**முடிவுரை**

21 ஆம் நூற்றாண்டின் தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் (ICT) புரட்சியானது அறிவை ஜனநாயகப்படுத்தியுள்ளதோடு அதனை எங்கும் எப்போதும் பெற்றுக் கொள்ளக் கூடிய புதிய வழிமுறைகளையும் ஏற்படுத்தியுள்ளது. எனினும் 21ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டுமெனின் மாணவர்கள் பல்வேறு புதிய திறன்களை விருத்தி செய்து கொள்வதுடன் பல்லின எழுத்தறிவையும் (Multiple Literacy) பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். இத்திறன்களை மாணவர்களில் விருத்தி செய்யும் பெரும் பொறுப்பினை சமகால ஆசிரியர்கள் கொண்டுள்ளனர். இப்பொறுப்பினை செவ்வனே நிறைவேற்ற ஆசிரியர்கள் புதிய வகிபங்குகளை ஏற்கவேண்டியவர்களாக உள்ளனர். புதிய மிலேனியத்தின் தொழில் நுட்பவியல் புரட்சியானது ஆசிரியர்களின் வகிபங்குகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது உண்மையாக இருந்த போதிலும் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளில் அவர்களது பங்களிப்பையும் முக்கியத்துவத்தையும் இன்னும் குறைத்து விட வில்லை.

**(இக்கட்டுரையானது இணையத்தில் உள்ள தகவல்களை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டுள்ளது)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரின் பாப்பாப் பாட்டு



கனகசபை இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பாரதியார் தமிழ்ச் சமுதாயத்தையும் தமிழ் மொழியையும் அதன் இலக்கியத்தையும் முற்போக்கான வழியிலே செலுத்த முனைந்த உந்நதமான கவிஞர் - மஹாகவி. இந்திய சமுதாயத்திலே குறிப்பாக தமிழ்ச் சமுதாயத்திலே புரையோடிப் போயிருந்த பிற்போக்கான விடயங்களைக் கண்டனஞ் செய்து நல்வழிகாட்டித் திருத்த விழைந்த பாரதியார் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற அரிய பொன்மொழியையும் அறிந்திருந்தார் போலும். ஆகையால் வளர்ந்த சமுதாயத்தைச் சீர்ப்படுத்துவதோடமையாது இளம் பருவத்தினருக்கு ஏற்ற உண்மைகளைப் புகட்டி அவர்களை ஏற்றங்கொள்ளச் செய்ய அவாவினார். ஏற்றமிகு கருத்துக்களையெல்லாம் உட்கொண்டதாகப் பாப்பாப்பாட்டுப் பாடி பாலர்களுக்கு நல்ல பல விழுமியங்களை உணர்த்தினார்.

மனிதன் உற்சாகமாக இருக்க வேண்டும் என்பது பாரதியாரின் கருத்து. ஆகையால் குழந்தைகளை ஓடி விளையாடச் சொல்கிறார். மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவியாகச் சமுதாய வாழ்க்கை வாழவேண்டும் என்பதையும் உணர்த்த விழைந்தவராய் அக்குழந்தைகளைக் கூடி விளையாடச் சொல்கிறார். எவரையும் வைது மனம்நோகச் செய்வதாகாது என்பதையும் கூடவே சொல்கிறார்.

*ஓடி விளையாடு பாப்பா நீ*
*ஓய்ந்திருக்க லாகாது பாப்பாயூ*
*கூடி விளையாடு பாப்பா – ஒரு*
*குழந்தையை வையாதே பாப்பாயூ*

தனியே மனிதர்களோடு மட்டுமல்ல உலகத்துச் சீவராசிகள் அனைத்தோடும் அன்பாகப் புழங்க வேண்டும்; ஐந்தறிவு உயிர்களிடத்திருந்தும் பெறத்தக்க படிப்பினைகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*சின்னஞ் சிறுகுருவி போலே – நீ*
*திரிந்து பறந்துவா பாப்பாயூ*
*வண்ணப் பறவைகளைக் கண்டு – நீ*
*மனத்தில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பாயூ*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடும் பாரதியார் கோழியோடும் கூடிவிளையாடச் சொல்கிறார். யாரிடமும் ஏதேனும் பலவீனம் இருக்கலாம். அதற்காக அவர்களை வெறுத்தலாகாது; அவர்களுக்காக இரக்கப்பட வேண்டும் என்ற பாங்கில்,

*கொத்தித் திரியும் அந்தக் கோழி – அதைக்*
*கூட்டி விளையாடு பாப்பாயூ*
*எத்தித் திரியும் அந்தக் காக்கை – அதற்கு*
*இரக்கப்பட வேண்டுமடி பாப்பாயூ*

என்று பாடுகிறார். விலங்குகள் எதையும் இகழலாகாது. அவை நமது வாழ்க்கைக்குத் துணையாய் அமைவனவே. பசு பால் தருகிறது; நாய் மனிதனுக்குக் காவல் செய்கிறது; குதிரை வண்டி இழுக்கின்றது; மாடு வயல் உழுகின்றது. இவை யாவும் எமக்குத் துணையாய் விளங்குவன. அதேபோன்று எம்மை அண்டி வாழ்வன. ஆகவே அவற்றை ஆதரிக்க வேண்டியது நமது கடன்.

இவ்வாறாக சீவகாருண்ய சிந்தையைச் சிறுவர் மனதிலே ஊட்டுகிறார் பாரதியார். சிறுவர்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கான சில ஒழுக்க விதிகளையும் பாரதியார் சொல்லித் தருகிறார்.

*காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு*
*கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு*
*மாலை முழுதும் விளையாட்டு – என்று*
*வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பாயூ*
*பொய் சொல்லக் கூடாது பாப்பா*
*என்றும் புறஞ்சொல்லல் ஆகாது பாப்பாயூ*

மனிதன் பொய் சொல்வதும் புறஞ்சொல்வதும் எல்லாம் எதற்காக? ஏதேனும் ஒரு வழியில் முன்னேறிவிட வேண்டும் என்ற ஆசையால். ஆனால் அந்தக் குறுக்கு வழி எமக்குத் தேவையில்லை. ஏனெனில்,

*தெய்வம் நமக்குத்துணை பாப்பாயூ*

தெய்வம் நமக்குத் துணையாய் இருப்பதனால் நமக்கு ஒரு தீங்கும் வரமாட்டாதுயூ

ஆகவே நாம் எந்தப் பிழையையும் செய்ய வேண்டியதில்லை. அதேபோல் பிறர் பிழை செய்வதையும் பார்த்துக் கொண்டிருத்தலாகாதுயூ அநீதிக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற வீர உணர்வைப் பாலகர்க்கு ஊட்டுகிறார் பாரதியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயம் கொள்ளல் ஆகாது பாப்பாயூ
மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பாயூ
துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிடல் ஆகாது பாப்பாயூ

சோம்பலை பாரதியார் கடுமையாகக் கண்டிக்கிறார். பணிவை வலியுறுத்துகிறார்.

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா – தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பாயூ

தாயைப் போலவே தாய் நாட்டிலும் அன்பு செலுத்த வேண்டும், தாய் மொழியைப் போற்ற வேண்டும் என்று தாய் நாட்டின், தாய் மொழியின் பெருமையையெல்லாம் விதந்துரைத்த பாரதியார் சாதி, மத, பேதங்களைக் கண்டிக்கின்றார். அவற்றிலே பேதம் காண்பது பாவம் என்கிறார்.

சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்யூ

அவ்வாறாயின் உலகத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லையோ? என்றால் உண்டு என்கிறார் அவர்.

நீதி, உயர்ந்தமதி, கல்வி – அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்; இவை இல்லாதவர்கள் கீழோர் என்பது பாரதியாரது உயர்ந்த கோட்பாடு. ஆகையால்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மை என்று தான் அறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பாயூ

என்று பாப்பாக்களுக்கு வாழும் முறை காட்டுகிறார் பாரதியார் - தன் பாப்பாப் பாட்டினாலே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமர வாழ்வு -
## பாரதியார் பாடல் வழி ஒரு நோக்கு

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்
(முதுநிலை விரிவுரையாளர்)

பாரதி காலத்தின் சில நூற்றாண்டுகள் முன்பிருந்தே தமிழ்நாடு அந்நியராட்சியின்கீழ் இருந்து வந்ததனால், தமிழ் மக்கள் அடிமையுணர்ச்சி மிகப் பெற்றவர்களாகவும் சுயத்தையும், பலத்தையும் பெரும்பாலும் தொலைத்து விட்டவர்களாகவுமே காணப்பட்டனர். இதனால், அவர்களைப் பிரதிபலித்துத் தோன்றிய அக் கால இலக்கியங்கள் கூட காலனித்துவ கால யதார்த்தத்திற்கேற்ப நிமிர்வு, தற்றுணிவு போன்றவற்றை எடுத்துக்காட்டுவனவாக இல்லை. பாரதிகூட இவ்வாறு தமிழ் மக்கள் பலமிழந்து வாழ்ந்த யதார்த்தத்தைத் தம் கவிதைகளிற் பதிவு செய்யத்தவறவில்லை.

“சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் - ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டு ஒருவன் வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டில் ஒளிப்பார்”

(பார.பாட.,ப.133)

இவ்வாறு, துணிவைத் தொலைத்திருந்த சமுதாயத்திற்குத் துணிவையும், அடிமை வாழ்வைக் களைய வேண்டும் என்னும் எண்ணத்தையும் வழங்குவதற்காகப் பாரதியார் பல கவிதைகளைப் படைத்தளித்துள்ளமையைக் காணமுடிகிறது. இக்கவிதைகளில் அவருடைய சம காலத்துப் பிற கவிஞர்கள் எவரிடமும் கேட்கப்பெறாத வீரவுணர்ச்சியையும், வீறையும் கண்டுகொள்ள முடியும். இது தொடர்பில் அவருடைய ‘போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்’ என்னும் கவிதை மிகவும் முக்கியத்துவம் பெறும் படைப்பாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பி லேஒடுங்கினாய் போ போ போ
பொலிவி லாமுகத்தினாய் போ போ போ
பொறி யிழந்த விழியினாய் போ போ போ
ஒலியி ழந்த குரலினாய் போ போ போ
ஒளியி ழந்த மேனியாய் போ போ போ
கிலி பிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை யென்றும் வேண்டுவாய் போ போ போ"

(பார.பாட.,ப.759)

'போகின்ற பாரதத்தைச் சபித்தல்' என்னும் உப தலைப்பின் கீழ் பாரதி எழுதியுள்ள மேலுள்ள கவிதை, ஒரு சமுதாயத்தில் எத்தகைய கீழ்மை உணர்ச்சிகள் இருத்தலாகாது என்னும் அவருடைய அவாவை வெளிப்படுத்துகின்றது. வலிமையற்ற தோள், ஒடுங்கிய மார்பு, பொலிவற்ற முகம் முதலியவற்றோடு விளங்கிய தமது சம காலப் பாரத சமுதாயம் விரைவில் இத்தகைய அடிமைத்தனத்தை ஒழித்துவிட வேண்டும் என்பதே அவருடைய அவா. இங்கு உடலியற் குறிகள் மூலம் அடிமைத் தனத்தை உணர்த்தும் கவிஞர் உண்மையில் கருத்தியல் ரீதியாகச் சுதந்திரவுணர்ச்சியை ஊட்டவே விரும்பியுள்ளார். கிலி பிடித்த நெஞ்சையகற்றி உறுதி கொண்ட நெஞ்சோடு தேசத்திற்காகப் பாடுபடும் சமுதாயம் மலர வேண்டுமென்பதே கவிஞரின் விருப்பு. 'போகின்ற பாரதம்' என்று அவர் நிகழ்காலச் சொல்லைப் பயன்படுத்தித் தமது விருப்பினால் குறித்திருக்கிறாரேயன்றி, உண்மையில் அவர் இப்பாடல் எழுதிய சமகாலத்திலும் மேற்படி கீழ்மைகள் நிறைந்த பாரத சமுதாயம் நகரத் தொடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு மறுதலையாய் பாரத சமுதாயம் எவ்வாறு உயர் குணங்கள் பெற்று மிளிரவேண்டும் என்பது குறித்த தமது விருப்பை 'வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்' என்னும் உபதலைப்பில் அவர் வெளிப்படுத்துகிறார். ஒளிபடைத்த கண், உறுதிகொண்ட நெஞ்சு. களிபடைத்த மொழி, கடுமைகொண்ட தோள், ஏறுபோல் நடை முதலிய இலட்சணங்களைப் பெற்ற அங்கத்தினர்களாற் சமுதாயம் நிரம்புதல் வேண்டும் என்பது அவருடைய விருப்பெனத் தெரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, முழுச் சமுதாயமுமே வீரமும், நம்பிக்கையும், சுதந்திரமும் பெற்று விளங்க வேண்டும் எனச் சமுதாயத்தை நோக்கி அழைக்கின்ற பாங்கில் - புறநிலையில் - பாடியிருக்கின்ற பாரதியார், தம்மை மானுடகுலத்தின் அங்கத்தினராக அல்லது அடையாளமாகக் கருதி - அகநிலையில் - பாடியுள்ள பாடல்களும் வாழ்வின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவனவாக உள்ளன.

"தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?"

(பார.பாட.,ப.322)

மேற்படி பாடலின் தொடர்ச்சியாய் வலிவுடைய தோளையும், அரிவாளைக் கொண்டு பிளந்தாலும் கட்டு மாறாத உடல் உறுதியையும் சக்தியிடம் வேண்டுகின்ற பாரதியார், பிறிதோர் இடத்தில்,

"காலா! உனைநான் சிறு புல்லென மதிக்கிறேன்
என்றன்
காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்!"

(பார.பாட.,ப.179)

தன் தேசமல்லாற் சிறப்பில்லை - கற்றவனுக்கு

சென்ற இடமெல்லாம் சிறப்பு" எனக் கூறுகின்றார். கல்வி ஒருவரை சமூகத்தில் முன்னடையச் செய்கின்றது. மன உறுதியை வளர்க்க உதவுகின்றது. சமூகத்தில் புகழ்பெற வழி வகுக்கின்றது.

"கண்ணுடையர் என்போர் கற்றோர் - முகத்திரண்டு

புண்ணுடையோர் கல்லாதவர்" என்று கூறுகிறார் திருவள்ளுவர். கல்வியைக் கற்றோருக்கே கண்கள் இருக்கின்றன. அச்சிறந்த கல்வியைக் கற்காதவர்களுக்கு கண்களுக்கு பதிலாக புண்களே இருக்கின்றன. மேலும், எமது நாட்டில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு யுத்தங்களில் இடம்பெயர்ந்த மக்களை எடுத்துக் கொண்டால் அதில் கற்றவர்கள் சென்ற இடங்களில் ஒரு கௌரவமான தொழில் செய்து வாழ்ந்தார்கள் ; இன்னும் வாழ்கிறார்கள் ; ஆனால், சிறந்த பயன்களைத் தரும் கல்வியை கற்காதவர்கள் அகதி முகாமிலேயே தமது வாழ்நாளைக் கழித்தார்கள் ; இன்னும் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்வி என்பது ஒரு அழியாச் செல்வமாகும். பிற செல்வங்கள் கொடுக்கக் கொடுக்கக் குறையும் ; வெள்ளத்தால் அழியும் ; வெந்தழலால் வேகும் ; கள்வராலும், பகைவர்களாலும், வேந்தர்களாலும் கவரப்பட்டுக் களவாடப்படும். ஆனால் கல்வியோ கொடுக்கக் கொடுக்கக் கூடும் ; வெள்ளத்தால் அழியாது; வெந்தழலால் வேகாது ; கள்வராலும், பகைவர்களாலும் வேந்தர்களாலும் கவரப்படமாட்டாது. இவ்வாறு கல்வியின் பயன் பல உள்ளன.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று ஔவைப்பாட்டி கூறியுள்ளார். இதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தை சிறிது நோக்குவோமானால் எண் என்பது கணிதத்தையும் எழுத்து என்பது இலக்கிய இலக்கணத்தையும் குறிக்கும். இதனை நாம் அனைவரும் கட்டாயம் கற்க வேண்டும். கல்வி உள்ளத்தில் உள்ள அறியாமை எனும் இருளைப் போக்கி அறிவு எனும் ஒளியைத் தருவதால் கண் எனப் போற்றப்படுகிறது. இக்கல்வியைக் கற்பதற்கு அடிப்படையாக அமைவது எண்ணும் எழுத்துமாகும்.

**"விலங்கொடு மக்கள் அனையர் - இலங்கு நூல்**

**கற்றாரோடு ஏனையவர்"** என்று திருவள்ளுவர் கூறுகிறார். கற்றவர்களே மனிதர்கள் கல்லாதவர்கள் விலங்குகளுக்கு ஒப்பானவர்கள்.

**"நீ ஏழை என சிறுமைப்பட வேண்டாம். சிறந்த ஞானம் அற்றவனே உண்மையான ஏழை"** என புத்தர் ஆயர்குல சிறுவனுக்கு உபதேசம் செய்ததாக பௌத்தர்களின் புனித நூலான திரிபீடகத்தில் குறிப்பிடப்படுகின்றது.

**"சீனாவிற்கு சென்றேனும் சீர் கல்வியைக் கற்றுக்கொள்"** என்றார் முஸ்லிம்களின் இறைதூதர் முகம்மது நபி. இவ்வாறு ஒவ்வொரு மதத்திலும் கல்வியின் சிறப்பைப்பற்றியே கூறப்படுகின்றது. எனவே நாம் பள்ளத்தை நாடி ஓடும் வெள்ளத்தைப் போல சிறந்த பயன்களைத் தரும் கல்வியை கற்போம்.

**தலை குனிந்து கற்பதெல்லாம்**
**தலை நிமிர்ந்து வாழ்வதற்கே !**

### நாலடியார்

**யாக்கை நிலையாமை**

மலைமிசைத் தோன்றும் மதியம் போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசை
துஞ்சினார் என்றெடுத்துத் துற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத்தில்

**மேன்மக்கள்**

பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்து
ஏதிலார் இல்கண் குருடராய்த் தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மாகாணத் தமிழ்மொழித்தினப் போட்டி
# முதலிடம் பெற்ற கவிதை

பிரிவு - 04
கவிதை ஆக்கம்
**M.R.S.**ரஸ்மினா பானு
ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலயம்

## தாயே உன்னை எண்ணி எண்ணி.....

தாயே உன்னை எண்ணி எண்ணி நான் வியந்து போகிறேன்
நான் என்னைப் பற்றி எண்ணிய நாட்களை விட
உன்னையும் உன் அர்ப்பணிப்புகளையும் பற்றி எண்ணிய
நாட்களும் நிமிடங்களுமே அதிகம்

நான் உன் கருவறையில் தரித்திருந்த நாட்களில்
நீ இன்ப வேதனை அடைந்தாயே....
நீ என்னை ஈன்றெடுத்த தருணத்தினிலே
அர்ப்பணிப்பென்னும் அரும்பணியாற்றினாயே.....

இரவிரவாய் கண்விழித்து காத்து வந்தாயே
கைகளைத் தலையணையாய் எனக்காக்கினாயே
குருதியினைப் பாலாய் ஊட்டி என் பசியாற்றினாயே
தாயே உன் பெருமையை எப்படிச் சொல்வேன்.....

ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல்லையென்று
உரைத்ததாம் நான்மணிக்கடிகை - ஒப்பிட
முடியுமோ உன் அரும்பணியை வேறொன்றுடன்.....
தராசும் உடைந்திடுமே உன் பணியை வைத்தால்

என் அன்பின் தாயே உன் அன்பின் பணியை
நான் எண்ணினேன்.... மதி மயங்கினேன்.....
உன் பணிகளைக் கோர்த்திட வார்த்தைகள் தேடினேன்
தேடிய வார்த்தைகளை முத்துக்களாய் வடிக்கின்றேன் இத்தாளினிலே....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தின் போது என் துயர் துடைத்தாயே
இன்பத்தின் போது இணைந்து மகிழ்ந்தாயே
இன்னலின் போது தோள் கொடுத்தாயே

தாயே உன் பெருமையை என்னவென்று சொல்வேன்
ஏணிப்படிகளாய் நின்று வானத்தைத் தொடு என்றாயே
ஏக வல்ல இறைவனைத் துதி செய்யப் பழக்கினாயே
நெருப்பாய் இருந்து சுடாது காத்து வந்தாயே
தாயே உன் மகிமையை எவ்வாறு புகழ்வேன்....

அன்புக் கட்டளைகளை விதித்து நேர்வழிப்படுத்தினாயே
அறநெறி தவறாதிருக்க காத்து வந்தாயே
தோளோடு தோள் சேர்ந்து தோழியாய் நின்றாயே
துணை நின்ற தூயவளே நீ என்றும் வாழ்க.....!

உன்னை எண்ணுகையில் பெருமிதம் கொள்கிறேனே
உன் பணிகளைப் பார்க்கையில் பூரித்துப் போகிறேனே
என்றுமே என்னைப் பற்றியே எண்ணும் உன்னை - இன்று
நான் எண்ணிப் பார்க்கையில் உலகையே மறந்தேனே....

நான் நோயில் இருந்த போது துடியாய் துடித்தாயே
நோய் நீங்க நோன்பிருந்து நீ வந்தாயே
ஆராட்டிய கரங்களே தாலாட்டிய மடியே
என்றென்றும் இவ்வுலகினிலே நலமாய் வாழ்ந்திடுவாயாக !

சலிப்பின்றி நீ ஆற்றிய பணிகள் அனைத்தும்
சிகரம் தொட வாழ்நாள் முழுதும் நோன்பிருப்பேனே
பசித்திருந்தும் இரையளித்த வள்ளல் மனமே
இப்புவி அழிந்தாலும் உன் புகழ் அழியாதே

உன் அன்பிற்கு ஈடு இணை இல்லையம்மா வேறொன்றும்
வெள்ளை மனதையுடையவளே, புகழுக்கு நீ உரியவளாவாய்
எத்தனை பிறவிகள் எடுத்தாலும் நான்
உனக்குப் பிள்ளையாய்ப் பிறந்திட வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகளின் போது போராடு என்றாயே
"என்றென்றும் ஜெயம் உனக்கே" என்றுரைத்தாயே
பாசத்தோடு தன்நம்பிக்கையையும் ஊட்டி வளர்த்தாயே.....
"தாயே" என் வெற்றிக்கு என்றும் நீ உரியவளாவாய்

"அம்மா" என்ற சொல்லினிலே மூன்றெழுத்துக் கவியானாய்
இன்று இத்தாளினிலே கவிதைக்கு உரியவளானாய்
"தாயே" உன்னிலும் சிறந்தது வேறில்லை என்றெண்ணுகிறேன்
புகழுக்கு உரியவள் உன்னை அன்றி வேறொருவர் உண்டோ?

கண்களிலே அன்பினை வைத்திருப்பவளே
உன் கண்களாய் இருந்திட ஆசைப்படுகிறேனே
அளவில்லா அன்பினை அளவோடு பொழிபவளே
உன்னை எண்ணி எண்ணி நான் மகிழ்கிறேனே....

கண்ணை இமை காப்பது போல
என்னைக் காத்து வந்த உன்னை
என்றென்றும் காத்திட எண்ணுகிறேன்
நிறைவேறுமோ என் இச்சிறிய ஆசை.....

எனக்கு உயிர் கொடுத்த என் அன்பின் தாயே
நீ என்றென்றும் நலமாய் நீடூழி வாழ்வாயாக....
தாயே உன் பெருமையை இயலுமானவரை புகழ்ந்து
முத்துக்களாய் மேய விடுகிறேன் இத்தாளினிலே.....

## நான்மணிக் கடிகை

நெருங்கி வாழ்பவர்களை நன்மை செய்து உயர்த்து
ஒட்டாத மக்களை காலமறிந்து விலக்கு
எவரிடத்தும் சென்று உண்பதைக் குறைத்துக்கொள்
ஏழை எழியவர்களிடம் கோபப்படுவதைக் கைவிடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை ஆக்கம்

பிரிவு - 05
சக்தி சிறிகஜன்
மகளிர் கல்லூரி
கொழும்பு

# தாமரையிலைத் தண்ணீராய்.....

வாழும் வாழ்வினிலே - பல,
நிழல்களும் கடந்திடவே,
புது விம்பங்கள் காட்சிக்காகவே,
கடந்திடுமே இவையெல்லாம் கானல் நீராகவே

புத்தம் புது ஆடையணிந்த காலம்,
ஆனால் இன்று அவையாவும் பழையனவே
காலத்தின் வேகத்தோடுதான் நாம் மாறாவிடில்,
இவையொன்றும் நிலையற்றதே.

பூமாதேவியில் அவதரித்த மானிடன்,
இளவரசனைப் போலப் பறிக்கிறான்,
பெருஞ்செல்வத்திற்கும், அவாவினால் கடன்பட்டால்,
அகன்றிடுமே அவன் செல்வமெல்லாம் ஆவியாய்.

பெற்றோரென் கண் கண்ட தெய்வமென்றாள்,
அவர் அவ்வணைப்பில் அகமகிழ்ந்தான்.
சட்டென்றது விதி விபரீதம்,
அரவணைப்பு, அன்பு, ஆனந்தம் மட்டுமா அள்ளிச்சென்றது?

அன்பினை எண்ணி, அரவணைப்பிற்கு ஏங்கினான்,
கிட்டவில்லை அவனுக்குப் பெற்றோரின் பாசம்,
அவர்கள் ஞாபகங்கள் மனதை வாட்ட,
நினைவுகள், கடந்திடும் சுவடுகள் என்றுணர்ந்தான்.

'என் காதலியிடமிருந்தாவது அன்பு எனக்கெட்டுமா?'
என நினைத்து, பெண் கண்டான்,
பெண் கொண்டான், ஆனால் நீடிக்கவில்லை,
நீடித்ததுதான் ஈர் ஆறு மாதங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் சந்திப்பு ஒழுங்கமைக்கப்பட்டது,
அன்றுதான் தெரிவித்தாள் பெண் - தன்
திருமண அழைப்பிதழை நீட்டி,
இவனை நோகடித்தாள், சாகடித்தாள்.

மனமுடைந்து, உளம் நொறுங்கி,
சிந்தித்தான், மனங்கசந்தழுதான்,
உணர்ந்தான் இவை நிலையற்றதென,
இது பாதையில் நாம் கடந்திடும் மரங்கள் தானே.

இன்றியமையா நட்புமிக்க பள்ளித் தோழன்,
பாடசாலைப் பருவங்கடந்து இன்றே சந்திப்பு,
'எப்படி சுகம்?' என உலகறிந்த கேள்வி,
பதிலாய்த் தொடர்ந்தது இவனுக்கு கேள்வி.

இவனுடைய காதலியின் கணவன்,
'வேறு யாருமல்ல, நான் தான்டா தம்பி !'
எனும் கூற்று எதிரொலிக்கின்றதே?
இப் பிஞ்சு உள்ளத்தினுள்ளே.

இம்மட்டும் ஏமாளியாய் இருந்தேன்,
இனிமேலும் ஏமாறேன்,
எக் கேடு ஏற்படினும் - இனித் துணிவு,
எனக்குள் - துணிந்திடுவேன், நிதம் எதிர்த்திடுவேன்.

அக்காலம் அவன் வியாபாரச் செழுமை,
அனுபவ முதுமை - காலத்தின் வறுமை,
அதி உயர் நம்பிக்கைக்கு உரிய கூலியாள்,
கொள்ளையடித்து, அள்ளிச் சென்றான் - சொத்தை

கோபமடைந்தவன், விரக்தியடைந்தான்.
தன் மனைவியிடம் ஆறுதல் தேடினான்,
அவளும் அவனது பணத்தையே சார்ந்தாள்,
எனும் போது எத்தனை வேதனை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி தான் பெற்ற மக்களே,
தனது வெற்றி எனக் கருதியதால்,
தன் பெண் செல்வங்களான தான் ஈன்றவற்றை,
இராப்பகல் பாராது ஆதரித்தான்.

பிள்ளைகள் வளர்ந்தோங்கினர்,
நன்கு கற்று, தனக்குப் பெருமையும் சேர்த்தனர்.
உரிய வேளையில் மாப்பிள்ளைகளுடன் வந்து,
ஆசி பெற்று, விடைபெற்றனர்.

சட்டெனக் கண்ணிமைப்பொழுதில் நடந்திட்டனவே,
இவையாவும், என் குழந்தைகளைப் பிரித்திட்டனவே,
கடைசிமட்டும் குழந்தைகள் கூட வருவதில்லை,
இவை கூட வாழ்வில் நிலைத்திடுவதில்லையே.

இன்று இவனும் பூமாதேவியை
விட்டகல்கின்றான் - இவனது நினைவுகள்,
என்றும் மக்கள் மனதில் ஆறா வடுக்கள்,
மாயை, மாயை, அனைத்துமே மாயை.

ஆயிரம் பெண், பதினாயிரம் பொன்கொண்டும்,
வானத்தின் கீழிலும், பூமியின் மேலிலும்,
நடக்கும் அனைத்துமே மாயை என விளம்பிய,
மகா சாலமன் மன்னனின் வாக்கு எத்தனை உண்மை?

பூமியில் வாழ்வு அழகாய்த் தோன்றிடினும்,
அது என்றும் நிலைப்பதில்லை,
வாழும் வாழ்வே இவ்வொருமுறையிருக்க,
பேராசை கொண்டலையும் மாந்தர் எத்தனையோ?

தாமரை, நீரில் அழகானாலும்,
அதன் இலை பூவாகப் பூக்காது.
இலையின் மீது வந்தமரும் நீர்த்துளிகள்,
ஆவியாகிடுமே, தாமரையிலைத் தண்ணீராய்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறு நாடகம்

பிரிவு 04
ஏ.விஷ்ணுபிரியா
புனித அன்னம்மாள் ம.வி
கொழும்பு

# அன்பே வாழ்க்கை

### மேடையமைப்பு




மேடையானது 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1) இ.மே, இ.ம, இ.கீ என்பன புகையிரத பெட்டியைக் குறிக்கின்றது. இங்கு புகையிரத நிலையமொன்றின் அமைப்பையும், புகையிரத பெட்டி ஒன்றிற்கான அமைப்பையும் சித்தரித்தல் வேண்டும்.
2) ம.மே, ம.ம, ம.கீ என்பன இசைக்கல்லூரியைக் குறிக்கின்றது. இங்கு இசைக் கல்லூரி ஒன்றில் காணப்படும் பொருட்கள் வைக்கப்பட வேண்டும்.
3) வ.மே, வ.ம, வ.கீ என்பன ராஜாவின் வீட்டைக் குறிக்கின்றது. இங்கு சாதாரணமாக வீடொன்றில் காணப்படும் பொருட்கள் வைக்கப்பட வேண்டும்.

### பாத்திரங்கள்

ராஜா - நல்லவர், இரக்கமானவர், பிறர் நலம் விரும்புபவர்

சக்தி - ராஜாவின் மனைவி, நல்லவள், அன்பானவள்

ஹரி - கண்பார்வையை இழந்தவன், திறமையானவன்

ரவி - ஹரியின் நண்பன், நல்லவன்

பரத் - ஹரியின் தூரத்து சொந்தக்காரர்

குகன் - ஹரியின் எதிரி

வரன் - குகனின் நண்பன்

### ஒளியமைப்பு

1) புகையிரத நிலையத்தை சித்தரிக்கும் வகையில் ஒளியமைப்பு
2) பெரிய, பெரிய மின்விளக்குகள்
3) பிரகாசமான மின்விளக்குகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி : 1

பாத்திரங்கள் - ராஜா, சக்தி, ஹரி

களம் - இ.மே, இ.ம, இ.கீ

ஒலி - 1

ஒளி - 1

(ஹரி புகையிரத பெட்டிக்குள் பாடல் பாடிக்கொண்டு பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்)

சக்தி : (ராஜாவை நோக்கி) என்னங்க இந்தப் பையன் எவ்வளவு அழகா பாட்டு பாடுகிறான்.

ராஜா : ஆமாம் சக்தி. பாவம் கண்கள் குருடாக இருப்பினும் இத்தனை திறமையாக பாடுகிறான்.

சக்தி : ஆண்டவன் திறமையைக் கொடுத்து விட்டு கண்களைப் பறித்துக் கொண்டானே !

ராஜா : ஏன் இந்தப் பையனை இவனின் பெற்றோர் இப்படி பிச்சையெடுக்க விட்டுவிட்டார்களோ தெரியவில்லை.

சக்தி : இந்த காலத்தில் உள்ள பெற்றோர்கள் இப்படித்தான் ராஜா செய்கின்றனர். அவர்களுடைய சுகத்திற்காக பிள்ளைகளைப் பெற்றுவிட்டு அப்புறம் அவர்களை பிச்சையெடுக்க விட்டு விடுகிறார்கள். பிள்ளையின் அருமை இவர்களுக்கு எப்படி தெரியும்?

ராஜா : நீ எதற்காக சக்தி வீணாகக் கோவப்படுகிறாய்? எல்லாம் அவரவருடைய தலைவிதி என்று நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

(ஹரி ராஜா, சக்தியை நோக்கி வருகிறான்)

ஹரி : ஐயா..... நான் பாடிய பாடல் தங்களுக்குப் பிடித்திருந்தால் தயவு செய்து உங்களால் முடிந்த பணத்தை இந்த தட்டில் போடுங்கள்.

ராஜா : (தட்டில் பணத்தைப் போட்டுவிட்டு) தம்பி இங்கு கொஞ்சம் அமருகிறாயா? உன்னிடம் கொஞ்சம் நான் பேசலாமா?

ஹரி : (தயக்கத்துடன்) இந்த குருடனிடம் என்னத்த ஐயா பேச போறீங்க? எது பேசுவதாக இருப்பினும் கொஞ்சம் சீக்கிரமாக சொல்லுங்கள் ஏனெனில் நான் அடுத்த பெட்டிகளுக்கும் செல்ல வேண்டியுள்ளது.

சக்தி : (ஹரியை அமர்த்தி விட்டு) தம்பி உன்னுடைய பெயர் என்ன? உன்னுடைய பெற்றோர் எங்கே?

ஹரி : (வருத்தத்துடன்) என்னுடைய பெயர் ஹரிஹரன் என்னைச் சுருக்கமாக ஹரி என்பார்கள். எனது தந்தை நான் பிறந்தவுடனே நான் குருடன் என்பதை அறிந்தவுடன் என்னையும் என்னுடைய அம்மாவையும் தனியாக தவிக்க விட்டுவிட்டு சென்று விட்டார். பாவம் எனது அம்மா தான் என்னையும் என் அக்காவையும் கூலி வேலை செய்து காப்பாற்றினார்கள். சில நாட்களுக்கு முன்னர்தான் என்னுடைய அம்மா மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார்கள். எனது அக்காவிற்கும் திருமணம் நடைபெற்று விட்டது. இனிமேலும் நான் யாருக்கும் தொந்தரவாக இருக்க விரும்பவில்லை அதனால் தான் நான் இவ்வாறு பாடல் பாடிக் கொண்டே பிச்சையெடுக்கிறேன் சேர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் 1 : இவன் இவ்வாறுதான் பொய்க் கதையெல்லாம் கூறி பரிவையும் பணத்தையும் பெற்றுக் கொள்வான். இவனை நம்பாதீர்கள் சேர். பொய்க்கு சரி வீட்டுக் கஷ்டங்களை கூறி உங்களிடம் பணம் பறிக்க தான் திட்டம் போடுகிறான் இந்த பையன்.

ராஜா : (கோபத்துடன்) உன் வேலையை நீ பார். எங்களுக்கு எல்லாம் தெரியும். அவனே பாவம் இந்த சிறுவயதில் தனக்கு யாரும் இல்லையென்று விரக்தியோடு பேசிக்கொண்டிருக்கிறான் அவனைப் போய் பொய்காரன் என்கிறீரே உமக்கு கொஞ்சம் கூட இரக்கமே இல்லையா?

சக்தி : ஹரி நீ அதெல்லாம் பெரிதாக பொருட்படுத்தாதே. அவன் ஏதோ தெரியாமல் சொல்லிவிட்டான்.

ஹரி : இவர் மட்டுமா? இந்த சமூகத்தில் வாழும் அனைவருமே இப்படித்தானே பேசுகிறார்கள். அப்புறம் நான் ஏன் அதற்கு மட்டும் விசேடமாக கவலை அடைய போகிறேன்.

ராஜா : ஹரி நான் ஒன்னு சொன்னால் தவறாக எண்ணமாட்டாயே?

ஹரி : என்ன ஐயா கூறுங்கள்.

ராஜா : அது வந்து ஹரி..... பேசாமல் நீ எங்களோடு வந்து விடுகிறாயா? எங்களுக்கும் பிள்ளை பாக்கியமில்லை நாங்கள் உன்னையே எங்கள் பிள்ளையாகக் கூட்டி செல்ல விரும்புகிறோம். இதைப்பற்றி நீ என்ன சொல்லப் போகிறாய்?

ஹரி : (அதிர்ச்சியுடன்) எதற்காக இந்த குருடனை கூட்டிச் சென்று வீணாக சிரமப்பட போகிறீர்கள்? என்னுடன் பேசி பத்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் என்னை எதற்காக உங்கள் பிள்ளையாக......

சக்தி : உன்னை எங்கள் மகனாக ஏற்று பார்ப்பதில் எங்களுக்கு எந்தவித கஷ்டமும் இல்லை ஹரி ஏனென்றால் இந்த உலகில் அன்பிருந்தால் எதுவுமே சிரமமாக தென்படாது ஹரி.

(சற்று நேரம் கழித்து)

ஹரி : சரி மாமா இதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இந்த உலகில் எனக்கும் இப்படியொரு அன்பு உள்ளங்களை பார்க்க கிடைக்குமென்று நான் நினைக்கவேயில்லை.

(ராஜாவும், சக்தியும் ஹரியை அவர்களோடு அவர்களுடைய வீட்டுக்குக் கூட்டி சென்றனர்.)

## காட்சி : 2

பாத்திரங்கள் - ராஜா, ரவி, ஹரி, குகன்

களம் - ம.மே, ம.ம, ம.கீ

ஒலி - 2, 3

ஒளி - 2

(சில நாட்களுக்கு பின்னர் ராஜா ஹரியின் பாடல் பாடும் திறமையை மேலும் வளர்க்க வேண்டும் என்றெண்ணி அவனை இசைக்கல்லூரி ஒன்றில் சேர்த்து விடுகிறார்)

ராஜா : (இசைக்கல்லூரியின் பிரதான வாசலில் நின்று கொண்டிருந்த குகனைப் பார்த்து) தம்பி இவன் என்னுடைய பையன் இவன் இப்போதுதான் புதிதாக இந்தக் கல்லூரிக்கு வந்திருக்கின்றான். பாவம் இவனுக்குக் கொஞ்சம் கண்பார்வை தெரியாது அதனால் இவனைக் கொஞ்சம் உங்களுடைய வகுப்புக்கு கூட்டிட்டு போக முடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகன் : (கோபத்துடன்) இந்த கண்ணில்லாத கபோதியெல்லாம் எதற்காக இசைக் கல்லூரிக்கெல்லாம் வருகுதோ தெரியவில்லை. இது கல்லூரியா இல்லையெனில் பராமரிப்பு நிலையமோ தெரியவில்லை. அதில் வேறு இந்த குருடனை நான் கூட்டிப்போக வேண்டுமாம்.

ராஜா : தம்பி கொஞ்சம் மரியாதையாக பேசுங்கள் நான் இவனை கொஞ்சம் கூட்டி போக தானே சொன்னேன் அதற்கு முடியும் முடியாது என்று கூற வேண்டியது தானே அதற்கு பதிலாக அநாவசியமாக பேசுகிறாயே உனக்கு எந்தவித இங்கிதமும் கிடையாதா?

ரவி : (ஓடிவந்து) ஐயா சற்று கோவப்படாதீர்கள் அவன் ஏதோ தெரியாமல் பேசிவிட்டான் அவன் சார்பாக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

(ராஜாவைப் பார்த்து)

குகன் : இதோ உங்கள் வாய்சவுடால் எல்லாம் இந்த குகனிடம் செல்லாது. புரிகிறதா? நான் இந்தக் கல்லூரிக்கே சட்டதிட்டம் விதிக்கும் அளவிற்கு உயர்ந்தவன். அதனால் என்னிடம் சற்று தள்ளியே இருங்கள் மிஸ்டர்.

(என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றான்)

ராஜா : சரியான வாய்பேசுகிறவனாக இருக்கின்றானே? இவன் கூட எல்லாம் என் மகன் எவ்வாறு படிக்கப் போகிறானோ தெரியவில்லையே?

ரவி : அதை பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்படாதீர்கள் சேர். நான் உங்கள் மகனோடு தான் படிக்க போகிறேன் அதனால் அவரை நான் பத்திரமாக பார்த்துக் கொள்கிறேன் நீங்கள் எதைப் பற்றியும் யோசிக்காது சென்று வாருங்கள்.

(பின்பு ரவி கூறியதை கேட்ட ராஜா ஹரியை விட்டு விடைபெற்று சென்றான்)

ரவி : (ஹரிக்கு கை கொடுத்துவிட்டு) நான் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்னுடைய பெயர் ரவி நானும் உங்களோடு இணைந்தே இந்த பள்ளியில் படிக்க போகிறேன் ஆமாம் உங்கள் பெயர் என்ன?

ஹரி : என்னுடைய பெயர் ஹரிஹரன் எல்லோரும் என்னை ஹரி என்று அழைப்பார்கள். அத்தோடு நானும் உங்கள் அன்பான குரலைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

ரவி : ஆஹா...... நன்றாக பேசுகிறீர்களே ஆமாம்......... உங்கள் பேச்சே இப்படி பாடல் போன்று உள்ளதெனில் உங்கள் பாடல் எவ்வாறு இருக்குமென்று அறிய எனக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது ஹரி.

ஹரி : அப்படியா? ரவி ஏன் இப்படி பொய்யெல்லாம் சொல்கிறீர்கள் நான் பெரிதாக ஒன்றும் பாடபோவதில்லை. ஏதோ எனக்கு தெரிந்தது அவ்வளவுதான்.

ரவி : அதையும் பார்ப்போம் எனக்கென்னமோ நீங்கள் மிக அருமையாக பாடும் ஒருவர் என்றுதான் தோன்றுகிறது.

(இருவரும் பேசிக்கொண்டே வகுப்பை வந்தடைந்தனர்)

பின்பு வகுப்புக்கள் ஆரம்பித்தன. வகுப்பில் ஆசிரியர் ஹரியின் குரல்வளத்தை பார்ப்பதற்காக அவனைக் கொஞ்சம் பாடுமாறு கூறினார். ஹரியும் பயப்படாமல் அவனறிந்ததைப் பாடினான். அங்கிருந்த அனைவரும் ஏன் குகன் உட்படவும் ஹரியின் பாடலைக் கோட்டு வியந்தனர். (இடைவேளை நேரம் ஆரம்பித்தது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி : ஹரி..... பார்த்திங்களா? நான் உங்களுக்கு முதலே கூறினேன் தானே நீங்கள் திறமையான பாடகர் என்று ஆமாம் உங்கள் குறிக்கோள்தான் என்ன ஹரி?

ஹரி : எனது குறிக்கோள் எல்லாம் ஒன்றுதான் ரவி. நான் எப்படியாவது சர்வதேச அளவிலோ அல்லது நம் அகில இலங்கை வரையிலாவது பாடல் பாடி முதலிடம் பெறவேண்டும் என்பதுதான். (மகிழ்ச்சியுடன்)

ரவி : அப்படியா? ஹரி நிச்சயம் நீங்கள் நினைத்தது ஒரு நாள் இல்லையெனில் ஒருநாள் நடக்கும்.

ஹரி : உங்கள் வாய் முகூர்த்தம் சீக்கிரம் ஈடேறினால் எனக்கு மகிழ்ச்சிதான் நண்பரே !

## காட்சி : 3

(மூன்று மாதங்கள் கழித்து)

பாத்திரங்கள் : ரவி, ஹரி, குகன், வரன்

களம் - ம.மே, ம.ம, ம.கீ

ஒலி - 2

ஒளி - 2, 3

ரவி : (ஓடோடி வந்து) ஹரி....... ஹரி நீ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் இப்போது வந்துவிட்டது.

ஹரி : (வியப்புடன்) என்ன சொல்கிறாய் ரவி?

ரவி : ஆம்..... நம் கல்லூரியினர் இந்த வருடம் நடக்கவிருக்கும் அகில இலங்கை பாடல் போட்டிக்கு நம்முடைய கல்லூரி சார்பாக உன்னை தான் தெரிவு செய்துள்ளனர்.

ஹரி : (மகிழ்ச்சியோடு) என்னது....... என்னால் நம்பவே முடியவில்லை ரவி நீ சொல்வதெல்லாம் உண்மையா?

ரவி : உன் மீது சத்தியமாக சொல்கிறேன். நான் கூறியதனைத்தும் முற்றிலும் உண்மை.

(ஹரி என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்து போனான்)

குகன் : (ஆவேசத்துடன்) ஏய் கண்ணில்லாத கபோதியே நீ கெட்ட கேட்டுக்கு பாடல் போட்டி ஒன்றுதான் குறை. மரியாதையாக சொல்கிறேன் நன்றாகக் கேட்டுக்கொள் நான் தான் இந்த முறை இந்த போட்டியில் பங்கிட வேண்டும். அதனால் நீயே சென்று நான் இதற்கு தகுதியானவன் இல்லையென்று கூறிவிடு.

ரவி : குகன், உன்னைவிட நம் ஹரி தான் நன்றாக பாடும் ஆற்றலுடையவன் அதனால்தான் நம் கல்லூரியினரே அவனைத் தெரிவு செய்துள்ளனர். அதனை முதல் தெரிந்து கொள்.

வரன் : என்ன குகனுக்கெதிராக நீயும் உன் நண்பனும் களமிறங்கி விட்டீர்களோ! குகன் நினைத்தால் உன்னுடைய நண்பனை என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். அதனால் மரியாதையாக இதிலிருந்து விலகி விடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி : உங்களுடைய உருட்டல் மிரட்டல்களுக்கு எல்லாம் நாங்கள் அஞ்ச மாட்டோம் வேண்டுமெனில் எங்களிடம் கூறியதைப் போய் கல்லூரி ஆலோசனைக் குழுவிடம் கூறுங்கள் அப்போ தெரியும் யார் போட்டிக்கு செல்ல போகிறார்கள் என்று.

(சற்று நேரம் கழித்து)

ஹரி : குகன், நீங்கள் சொன்ன மாதிரியே நான் கல்லூரியினரிடம் கூறிவிடுகிறேன் நீங்கள் தான் இந்த முறை போட்டிக்கு போக பேகிறீர்கள் என்று. இப்போ உங்களுக்கு சந்தோஷமா?

குகன் : ம்... இந்த பயம் இருக்கட்டும் (என்று கூறிவிட்டு வெளியேறினான்)

ரவி : (கோபத்தோடு) உனக்கென்ன பித்துப் பிடித்து விட்டதா ஹரி சுயநினைவில் தானே இருக்கிறாய்? நல்ல சந்தர்ப்பமொன்றை இப்படி நழுவ விடலாமா?

ஹரி : அவன்தான் போட்டிக்கு போக வேண்டுமென்று இவ்வளவு ஆசைப்படுகிறானே ! இனி போகட்டுமே !

ரவி : எனக்கு நன்றாக புரிந்துவிட்டது சாமி உன் அன்பான உள்ளம் அதற்காக உன் ஆசை இந்த நேரத்தில் முக்கியம் கிடையாதா?

ஹரி : முக்கியம் தான் ரவி, இருப்பினும் இவ்வுலகில் எல்லாவற்றையும் விடவும் அன்புதான் முக்கியம். இப்போது தான் என் வாழ்வில் அன்பு உள்ளங்களாக நீ, ராஜா மாமா, சக்தி மாமி நம் கல்லூரியினர் போன்றோர் கிடைத்துள்ளனர். என்னிடம் ஏதாவதொன்றை கேட்டு வந்தோரை என்னால் திருப்பியனுப்ப முடியாது ரவி. குகன் என்னிடம் கேட்டபோது என்னால் மறுப்பச் சொல்ல முடியவில்லை ரவி. நான் அவன் மீது வைத்திருக்கும் அன்பு என்னை சம்மதிக்க வைத்து விட்டது.

ரவி : ஹரி நான் உன்னை என்னவோ நினைத்தேன். நீ அதற்கும் ஒருபடி மேல் என்று இப்போ தான் புரிகிறது. குகன் எத்தனை தடவை உன்னை அவமானப்படுத்தியும் அவனுக்கு போய் உதவி செய்கிறாயே? உனது அன்புள்ளம் இப்போதான் எனக்கு புரிகிறது ஹரி.

ஹரி : என்னை பொறுத்தளவில் அன்புதான் வாழ்க்கை வாழ்க்கைதான் அன்பு இது இரண்டையும் என்னால் வெவ்வேறாக பிரித்து பார்க்க முடியாது ரவி. இப்போ நான் குகனுக்கு இந்த வாய்ப்பை விட்டுக் கொடுத்ததால் அவனுக்கு நிச்சயம் என் மீது அன்பு ஏற்படும் ரவி. எனக்கு அதுவே போதும்.

## காட்சி : 4

பாத்திரங்கள் : ராஜா, ஹரி, பரத், சக்தி

களம் - வ.மே, வ.ம, வ.கீ

ஒலி - 3

ஒளி - 3

(நடந்த எல்லாவற்றையும் தனது தூரத்து சொந்தக்காரர் பரத்திடம் ஹரிக் கூறிக்கொண்டிருக்கின்றான்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத் : அப்புறம் ஹரி உனது பெற்றோர் ராஜா மாமாவும் சக்தி மாமியும் இதற்கு என்ன சொன்னாங்க?

ஹரி : அவர்களுக்கு நான் போட்டியில் பங்கு கொள்ளாதது வருத்தமாக இருந்த போதிலும் நான் எல்லோர் மீதும் இவ்வளவு அன்பாக இருப்பதை எண்ணி சந்தோஷம் அடைந்தனர்.

பரத் : நான் இத்தனை காலம் கழித்து உன்னை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன் ஹரி. எங்க உன்னை பார்க்க கிடைக்காதோ என்றெண்ணி தான் நான் இந்த ஊர்க்கு வந்தேன். ஆனால் கடவுள் புண்ணியத்தில் உன்னைக் கண்டுவிட்டேன்.

ராஜா : எனக்கு இப்படியொரு அன்பான மகன் கிடைத்தது நான் செய்த புண்ணியம் பரத். என்னுடைய மகன் தன் மீது அன்பு காட்டியோரிடமும் ஏன் காட்டாதவரிடமும் அன்போடு பழகுவதை எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன் பரத்.

ஹரி : ராஜா மாமா என்னை பொறுத்த வரையில் அன்பே வாழ்க்கை நான் என்மீது அன்புகாட்டுவோர், அன்பு காட்டாதோர் என்று அனைவருக்கும் உதவிக்கொரு உள்ளமாய் இருப்பேன்.

சக்தி : நிச்சயமாக ஹரி, அன்பே வாழ்க்கை என்று வாழும் உன் மனப்பாங்கு போற்றத்தக்கது.

“ஹரி போல நமக்கு அன்பு காட்டாதோரிடமும் அன்பு காட்டுவோம்
ஏனெனில்
அன்பே வாழ்க்கை”

எல்லோரிடமும் அன்போடு பழகுவோம்
அப்பே நமது வாழ்க்கை உயரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு - 05

**F.சஸ்மினா**

குறுநாடக ஆக்கம்

கம்பஹா மாவட்டம்

மினுவன்கொட வலயம்

அல் - மான் ம.வி

# தாய்க்கு சேய் பாரமா?

பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| தாய் (சுசீலா) | : | தன் பிள்ளைக்காக எதையும் செய்யக் கூடிய அளவு தன் பிள்ளை மீது அதிக அன்பு கொண்டவள். |
| கணேஷ் (பிள்ளை) | : | தன் தாயை மதியாதவன், பேராசை கொண்டவன். |
| கணேஷின் நண்பன் (சுதீப்) | : | நல்ல உள்ளம் படைத்தவன். |
| பாலா (கணேஷின் வகுப்பாசிரியர்) | : | மிகவும் கண்டிப்பானவர். |

## காட்சி : 01

(கணேஷ் திறமையாகக் கற்கக் கூடிய ஒரு மாணவன். ஆனால் தற்பெருமையும் பேராசையும் அவனில் எப்போதும் குடிகொண்டிருக்கும். இன்று பாடசாலையில் பெற்றோருக்கான ஒரு கூட்டம். கணேஷோ ஆங்கிலமொழி மூல பாடசாலையில் கல்வி கற்கக் கூடியவன்)

(கணேஷின் தாய் ஏழையாக இருந்தாலும் படிக்காதவளாக இருந்தாலும் பல கஷ்டங்களுக்கு மத்தியில் தன் பிள்ளை நல்ல நிலைக்கு வரவேண்டும் எனப் பாடுபடுபவள்)

(மேலும் கணேஷ் உயர்தரத்தில் இறுதியாண்டில் கல்வி கற்கக் கூடியவனாவான்)

காலை வேளை !

கணேஷ் : அப்பா ! அப்பா !

தாய் : என்ன மகனே அப்பாவ கூபிட்ர ! அப்பா இன்னக்கு சீக்கிரமாவே வேலைக்கு போய்ட்டார். என்ன விஷயம்?

கணேஷ் : அய்யோ அப்பா போயிட்டாரா? இன்னெக்கு எங்க ஸ்கூல்ல முக்கியமான ஒரு பெற்றோர் கூட்டம் அதுக்கு தான் அப்பாவ கூப்பிடலாம்னு பார்த்தேன் சரி பரவால்ல நான் சமாளித்துக் கொள்ரேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் : அப்பா எதுக்கு ! நான் வரட்டுமா ! நீ ஒரு நாள்கூட என்ன இப்படி கூப்பிட்டதே இல்ல அதனால நா வரட்டுமா?

கணேஷ் : (பலத்த சிரிப்புக்கு பின்) என்ன நீங்களா? அங்க நல்ல படிச்ச பெற்றோர் தான் வருவாங்க இங்கிலீஷ்ல பேசுவாங்க உங்களுக்கு என்ன எழவு புரியும். நீங்க முதல்ல ஒரு வார்த்த இங்லீஷ்ல பேசுங்க பாப்போம் அப்பாக்கு சரி பேச முடியும் உங்களால முடியாது அங்க வந்து என் மானத்தை வாங்காம பேசாம இருங்க அம்மா ! சரி சரி சும்மா உங்க கூட பேசி நேரத்தை வீணாக்க ஏலாது நான் போய்வாரேன் !

தாய் : (உள்ளம் உடைந்து மனம் தளர்ந்தபடியே) சரி மகனே பத்திரமா போய்வா (கணேஷ் சென்ற பின் "பரவால்ல என் மகன் தானே என்ன அவமானப்படுத்தினான் வேற யாருமில்லையே ! அதெல்லாம் நாம பெருசா எடுக்கக் கூடாது எப்படி சரி அவன் நல்ல நிலைமைக்கு வரணும்" என தன் மனதை ஆறுதல்படுத்தி கொள்கிறாள்)

(பாடசாலையில் கூட்டம் நடந்து முடிந்த பின்னர் வகுப்பாசிரியர் பாலா கணேஷை அழைக்கிறார்)

பாலா : என்ன கணேஷ் உங்க வீட்டில இருந்து யாருமே வரல்லயா (என காரசாரமாக கேட்கிறார்)

கணேஷ் : (தயக்கத்துடன்) இல்ல சார் எங்க வீட்டுல எல்லோருக்கும் சுகம் போதாது என சொல்லி சமாளிக்கிறான்.

பாலா : சரி நான் உங்க பெற்றோர்ட்ட சொல்லனும் எண்டு நினச்சன் பரவால்ல உன் கிட்டயே சொல்றேன் நீ நாங்க வெச்ச பரீட்சையில நல்ல புள்ளிகள் வாங்கியிருக்கறதால எங்க ஸ்கூல் கல்வி அபிவிருத்தி அமைப்பால வெளிநாடு போய் நீ படிக்க ஒரு புலமைப் பரிசில் தந்திருக்கிறோம் வாற மாதமே நீ லண்டன் போய் உன் படிப்ப தொடரலாம்.

கணேஷ் : (பலத்த வியப்புடன்) உண்மையாவா சேர் என்னால நம்பவே முடியல்ல ! ரொம்ப சந்தோஷம்.

சுதிப் : (இவ்விடயத்தை அறிந்து மகிழ்ச்சியுடன்) அட ரொம்ப சந்தோஷம் கணேஷ் நீ மென்மேலும் முன்னேறணும் (என வாழ்த்துகிறான்.)

## காட்சி : 02

(இந்த விடயத்தை வீட்டில் தெரியப்படுத்தினான் கணேஷ். தாய்க்கோ சுவர்க்கலோகத்தில் வாழ்வது போல அளவற்ற மகிழ்ச்சி)

(கணேஷ் தான் செல்வதற்கான சகல ஆயத்தங்களையும் மேற்கொள்கிறான், செல்லும் நாளும் வந்து விட்டது)

அன்று காலை !

கணேஷ் : அம்மா ! அப்பா எங்க எனக்கு நேரமாகுது அப்பாவ வரச் சொல்லுங்க என்ன கொண்டுபோய் விமான நிலையத்துக்கு விடச் சொல்லுங்க.

தாய் : (கலங்கிய கண்களுடன்) இல்லப்பா அப்பாவுக்கு இண்டெக்கு முக்கியமா ஒரு வேல இருக்கு போகாம இருக்க ஏலாது எண்டு சீக்கிரமா கிளம்பிட்டாரு என் கூட போக சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேஷ் : இந்த அப்பாவுக்கு இதே வேலையா போச்சி ! (என எரிச்சலுடன் கூறுகிறான்).

(தாய் சுசீலா மகனை விட்டுப் பிரியும் கவலையில் கண்ணீர் பெருக அழுகிறாள்)

கணேஷ் : இப்ப எதுக்கு சும்மா அழுது சீன் காட்ரீங்க ! அதும் போற வேளேல அபசகுனமா ! (என எரிச்சலுடன் கத்துகிறான்) சரி வாங்க என் நேரம் உங்கள கூட்டிட்டு போக வேண்டி இருக்கு ! (என வேண்டா வெறுப்புடன் அழைக்கிறான்)

(சுசீலா கணேஷ் கூறிய எதையும் பொருட்படுத்தாமல் அவனுடன் செல்லத் தயாராகிறாள். இருவரும் செல்கையில் போக்குவரத்துச் செலவுக்கு பணம் இல்லாமல் கணேஷ் யோசிக்கிறான்)

(உடனே சுசீலா கஷ்டத்துடன் சேர்த்து வைத்த ஒரு தொகை பணத்தை கொடுக்கவே இருவரும் ஒரு முச்சக்கர வண்டியில் செல்கின்றனர்)

(திடீர் என ஒரு சத்தம் வீதியில் சென்று கொண்டிருந்த அனைவரும் வியப்புடன் பார்க்கின்றனர் ! கணேஷ் சென்ற வண்டியோ ஒரு இரசாயனப் பதார்த்தங்கள் கொண்டு செல்லும் வண்டியில் மோதி நொருங்கி கிடந்தது)

கணேஷ் : ஐயோ என் கண் ! என் கண் ! (எனக் கதறுகிறான்)

(இதை அறிந்த சுசீலா என் பிள்ளையைக் காப்பாத்துங்க என அங்குள்ள அனைவரிடமும் கெஞ்சிக் கதறினாள் அத்துடன் அவ்விடத்திலேயே இறக்கிறாள்)

**காட்சி : 03**

(கணேஷ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றான்)

(கணேஷ் மெல்ல கண் திறந்து பார்க்கையில் அவன் முன்னிலையில் சுதீப் இருக்கிறான்)

சுதீப் : டேய் கண்ண திறந்திட்டியா அந்த கடவுளுக்கு தான் நன்றி சொல்லனும்.

கணேஷ் : (தளர்வுடனே)
என் அம்மாவும் அப்பாவும் எங்க?

சுதீப் : அப்பா மருந்து வாங்க கடைக்கு சென்றிருக்கிறார்.

கணேஷ் : அப்ப அம்மா எங்க கூப்பிடு

(சுதீபின் கண்கள் கலங்குகின்றன. மெல்ல தயக்கத்துடன்)

சுதீப் : அம்மா ! அம்மா வந்து இறந்துட்டாங்க (என அழுகிறான்)

கணேஷ் : இல்ல நீ பொய் சொல்ற இல்லவே இல்ல (என கத்துகிறான்)

சுதீப் : சத்தியமா !

கணேஷ் : ஆமா எனக்கு கொஞ்சம் கொஞ்சம் ஞாபகமிருக்கு ஆனா நா மயக்கமா இருந்ததால முழுசா ஞாபகப்படுத்த முடியல்ல. அத்தோடு நா வைத்தியசாலேல அனுமதிக்கப்பட்ட போது டாக்டர் எனக்கு கண் பார்வ போயிடிச்சு எசிட் பட்டதால கண் செயலிழந்திரிச்சு என்டு சொன்னதா ஞாபகம் இப்ப நா எப்படி பார்க்கிறேன் அப்படின்னா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதீப் : (கவலலையுடன் கணேஷின் கையை பிடித்தவாறு) ஆமா உண்மை தான் இப்ப நீ பாக்குறது உன் தாய்ட கண்ணால ! ஏன்னா நீ அவதிப்பட்டது விளங்கிடிச்சோ தெரியல்ல அவங்க கடைசி வார்த்தையா என் கண்ண பொருத்தியாவது என் புள்ளய காப்பாத்துங்க என்னிடமிருந்து என்னவேணாலும் எடுத்துக்குங்க என்டு சொல்லியிருந்தாங்க !

(ஓ வென கணேஷ் அழுகிறான் ! தன் தாயின் அதிக அன்பை உணர்கின்றான் !)

கணேஷ் : ஐயோ ! என்ட தாய் எனக்காக என்ன வேனாலும் செய்திருக்கிறாங்களே ! ஆனா நா அவங்க இருக்கும் போது ஒரு கணம் கூட அவங்கள சந்தோஷப்படுத்தணும் எண்டு நினக்கெல்லயே நா ஒரு பாவி ! பாவி ! அவங்கள மதிக்க கூட இல்லையே ஐயோ ! ஐயோ ! (என கதறி கதறி அழுகிறான்)

## காட்சி : 04

(தன் தாயின் இழப்பை ஈடு செய்ய வேணும்னா அவங்க நல்லா படிச்சு பெரியாளா வரனும்னு நெனச்சத சாதிச்சி காட்டணும் அப்பதான் என் தாய் ஆத்மா சாந்தி அடையும் என மனதில் திடவுறுதி கொண்டு கணேஷ் இங்கேயே படித்து பெரியாளாகிறான்)

(இப்போ கணேஷ் ஒரு பெரிய கம்பனிக்கே சொந்தக்காரன்) அவன் வேலையில் ஈடுபடும் முதல் நாள் இன்று)

(அத்துடன் அக்கம்பனிலேயே சுதீபும் கணேஷிற்குக் கீழ் வேலை புரிகிறான்)

சுதீப் : சேர் ! மீட்டிங்குக்கு நேரமாச்சு எல்லோரும் உங்களுக்காக காத்திருக்காங்க !

கணேஷ் : டேய் ! சேர் என்டு எல்லாம் சொல்ல தேவையில்ல நா என்னவா இருந்தாலும் நீ எனக்கு நண்பன் பேசாம கணேஷ் என்டே கூப்பிடு ஓகே !

சுதீப் : சரி வா போவோம் !

(கணேஷ் சென்று அனைவருக்கும் மத்தியில் உரையாற்றுகிறான்)

கணேஷ் : அனைவருக்கும் வணக்கம் ! என் பேர் கணேஷ் (என தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான் மேலும் அக்கம்பனியின் விதிகளையும் அனைவருக்கும் கூறிவிட்டு அன்றோ அன்னையர் தினம் எனவே தன் அன்னையைப் பற்றியும் அனைவரிடமும் (பகிர்ந்து கொள்கிறான்), நான் என் அன்னை உயிரோடு இருக்கும் போது ஒரு பெரிய பாரமாகவும் சுமையாகவுமே கருதினேன். அவங்க மொத்தத்துல அவங்கள ஒரு பொருட்டாவே மதிக்கல ஆனா என் அன்னையோ என்னைப் பொத்தி பொத்தி பாதுகாத்தாங்க எனக்காக எதையும் செஞ்சாங்க இறுதியில ! (என தனக்கு நடந்த அந்த அசௌகரியமான சம்பவத்தையும் தன் தாய் தனக்குச் செய்த தியாகத்தையும் கூறிவிட்டு அனைவர் முன்னிலையிலும் அழுகிறான்)

(அங்குள்ள அனைவரின் கண்களிலும் கண்ணீர் பெருகுகிறது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேஷ் : (மேலும்) உலகத்திலுள்ள அனைவரும் ஒரு நாள் தான் அன்னையர் தினமா கொண்டாடுறாங்க ஆனா எனக்கு என் தாய் என்னவிட்டு போன நாளில் இருந்தே எல்லா தினமும் அன்னையர் தினமே ! எனவே என்ன போல் இல்லாத போது வருத்தப்படாம நீங்க உங்க தாய்மார நல்லா கவனிச்சுக் கொள்ளுங்க ஏனா அவங்கள விடச் சிறந்தவங்க இந்த உலகத்தில யாரும் இல்ல (என அனைவருக்கும் அறிவுரை கூறுகிறான்)

சுதீப் : ரொம்ப சந்தோஷம் கணேஷ் உன்ன நினைச்சா எனக்கு மிகப் பெருமையா இருக்கு ! (எனப் பாராட்டுகிறான்)

(இருவரும் உள்ளே செல்கின்றனர்)

★ (எனவே கணேஷ் தன் தாயின் விருப்பத்தையே தன் வாழ்வாக ஆக்கி கொண்டு வாழ்கிறான்)

★ தாய்க்குச் சேய் எப்போதும் பாரமல்ல ! சேய்க்குத் தான் தாய் பாரமே எமது தாய்மார் எம்மை ஆளாக்க பல இன்னல்களை அனுபவிக்கின்றனர். ஆனால் ஒருபோதும் எம்மைப் பாரமாகக் கருதுவதில்லை ! ஒரு கணம் எம்மை அவர்கள் பாரமாக நினைத்திருந்தால் உலகில் எந்தப் பிள்ளையும் பிறந்திருக்க மாட்டாது! ஆனால் பிள்ளைகளோ தன் தாயையே ஒரு பாரமாகக் கருதி துரத்தும் நிலை ஆங்காங்கே உண்டு)

★ (ஆகவே தன் தாயை மதித்து வாழ்ந்து வெற்றி பெறுவோம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் செய்த கோலம்

[stamp]

பிரிவு 04
**M.F.F.**நிப்தா
அல் ஹஸ்ஸாலி மு.வி

அந்த உயர் தர கார் மிக வேகமாக முன்னோக்கி சென்று கொண்டிருந்தது. ஆனால் அதில் பயணித்தவனது சிந்தனையோ பின்னோக்கி சென்று கொண்டிருந்தது. மனதினுள் ஒரு வித சிலிர்ப்பு. அவனாலேயே அவனது நிலையை புரிந்து கொள்ள முடியாத ஒரு நிலை.... தன் இலட்சியத்தை பலவித அனுபவங்களுடனும் துக்கங்களுடனும் சிறு சிறு மகிழ்ச்சிகளுடனும் கடந்து வந்ததையிட்டு ஒரு இனம் புரியாத மனத்திருப்தி அவனது சிந்தனை இறுதியில் போய் நின்ற இடம் ஆம்! அவனது சிறுபராயத்திற்குத்தான்.............

சந்திரனால் சூழப்பட்டு இருளின் ஆக்கிரமிப்பால் துவண்டு போயிருந்த சூழலை ஒளிபெறச் செய்வதற்கு மட்டுமல்லாமலும் பல கோடி மக்களின் பலதரப்பட்ட ஆசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் கூட ஒளிமயமாக்க உதயமாக்க கொண்டிருந்தது சூரியன் அச் சூரியனின் ஒளிக்கற்றை மேனியில் பட திடுக்கிட்டு எழுந்தான் மனோகரன் அவசர அவசரமாக எழுந்து குடிசையிலிருந்து வெளியிறங்கி கிணற்றடிக்குச் சென்றான் முகம்வாய் கழுவுவதற்காய் "ஏய் கறுப்பையா சிக்கிரம் வாடா, அம்மா அப்பம் சுட்டுருக்கேன் போய் வித்துட்டு வா" என்ற அம்மாவின் தினசரி பல்லவிக்கும் அவன் கிணற்றடியில் இருந்து வருவதற்கும் நேரம் சரியாகி விட்டது. அவனது தாய் வைத்த பெயர் மனோகரனாக இருப்பினும் அவனது தோற்றத்தின் காரணமாகவோ தெரியவில்லை அவனை அனைவரும் கறுப்பையா என்றே அழைத்தாள். அவனுக்கு ஆசை ஆசையாய் வைத்த மனோகரன் என்ற பெயரையே மறந்தவளாய் .... சிறு வயதிலே தந்தையின் பாசத்தை இழந்த அவன் அன்றிலிருந்தே அவனது வீடு வீடாய் போய் அப்பம் விற்று வரும் தொழிலை ஆரம்பித்து இருந்தான் அவ்வாறு விற்று வந்ததன் பிற்பாடே பாடசாலை செல்ல தயாராவான்.

அன்றும் அவ்வாறு தான் அப்பத்தை விற்றுவந்த அவன் கழுவி கழுவி பட்டையான அவனது சீருடையை அணிந்தவனாகவும் பல இடங்களில் ஓட்டை விழுந்திருந்த சப்பாத்தை அணிந்தவனாகவும் பாடசாலையை நோக்கி செல்லலானான். ஓட்டமும் நடையுமாக சென்றாலும் அன்றும் அவனால் ஏழு முப்பதிற்கு முன்னர் பாடசாலை நுழைவாயிலை அடையமுடியவில்லை. பாடசாலை நுழைவாயிலுக்கு அருகாமையில் அவனது வருகையை எதிர்பார்த்தவர் போல பிரம்புடன் காத்திருந்தார் கண்ணசாமி சேர். வழமை போல் அவனது பிஞ்சுக் கைகளை பிரம்பு பதம் பார்த்து விட்டது. ஏன சேர், என்னை மட்டும் இவ்வாறு நோகடிக்கிறீகள், உங்க மகனும் தானே தாமதமாகி வந்தான். ஏன் அவனை மட்டும் தண்டிக்க மாட்டேங்குறிங்க. அவனுக்கு நோகும் என்றதாலேயா? நானும் அவனப் போல ஒருவன் தானே நான், கீழ்சாதியானவன், ஏழை எண்டதாலயா என்னமட்டும் தண்டிக்கிறிங்க?" என்று நாலுவார்த்தை கேட்க நா துடித்தது எனினும் அவனது பணிவு, அடக்கம் என்பன அவனை அவ்வாறு கேட்கவிடாமல் தடுத்தன கண்ணீர் சிந்தியவனாகவே வகுப்பை நோக்கி நடக்கலனான்.

இவ்வாறு போராட்டங்கள் பலவற்றோடு அவனது வாழ்க்கை நகர்ந்தாலும் அவ்வனைத்து போராட்டங்களும் அவனுக்கு பல்வகைப்பட்ட அனுபவங்களையும் வாழ்க்கைப்பாடங்களையும் கற்றுக்கொடுத்து விட்டே சென்றன. வாழ்க்கையில் வரும் இடைஞ்சல்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடைஞ்சல்களை தாண்டி எவ்வாறு வாழ்க்கையில் முன்னேறுவது போன்ற படிப்பினைகள் அவற்றில் சிலவாகும்.

அழுத முகத்துடன் வகுப்பறையை வந்தடைந்தான் அப்போது விஞ்ஞான ஆசிரியை கற்பித்துக் கொண்டிருந்தார். அவரது ஏச்சுப்பேச்சுகளுடன் கூடிய அனுமதியுடன் உள்நுழைந்தான் கறுப்பையா பாடம் படிப்பித்ததன் இறுதியில் ஒரு முக்கிய தகவல் ஒன்றையும் கூறினார். அதாவது வரும் திங்கட்கிழமை பாடசாலை ரீதியாக விஞ்ஞான போட்டி நடைபெற உள்ளதாகவும் விரும்பியோர் கலந்து கொள்ள முடியும் என்று கூறிய அவர் விரும்பியோர் எழும்புங்கள் என்றும் கூறினார். விஞ்ஞானத்தில் திறமையானவனாக இருந்தால், தானும் பங்குபற்றினால் நல்லாயிருக்குமே தான் அதில் வெற்றி பெற்றால் அனைவராலும் பாராட்டப்படுவேன் என்ற எதிர்பார்ப்புடன் எழும்பி நின்றான் இவன் எழும்பியதைக் கண்ட அவனது சகமாணவர்கள் கொல்லென சிரித்தனர். அதனைக் கண்ட ஆசிரியர் கடுகடுத்த முகத்துடன் காட்சி தந்தார். டேய் உனக்கு எப்படா தெம்பு வந்தது இதெல்லாம் ரொம்ப பெரிய போட்டி உனக்கெல்லாம் அப்பிடி இதிலயெல்லாம் பங்குபற்ற அனுமதிக்கயேலாது கீழ் சாதியான நீங்களெல்லாம் பாடசாலைக்கு வந்தோமா போனோமா என்றிருக்கனும் பேசாம இரிடா'' என்று நாய்போல் குரைக்க தொடங்கினார் கறுப்பையாவிற்கு ஒன்றும் புரியவில்லை "நான் என்ன தவறு செய்தேன் என்னப்போல ஏழைகளெல்லாம் ஒன்றுக்கும் ஆசைப்படக் கூடாதா? என்ற சிந்தனை அவன் மனதினில் ஓடிக்கொண்டிருந்தது "இல்லை இல்லை எம்மாலும் முடியும் நாம் ஏன் பின்வாங்க வேண்டும் நானும் என்சகமாணவர்களைப் போல திறமையானவன்தான் அவர்களை விட திறமையில் அதிகமானவனே! குறைந்தவனில்லை இவர்களுக்கெல்லாம் நான் ஒரு பாடத்தை புகட்ட வேண்டும் ஏழைகளுக்கும் ஏன்? கீழ் சாதியினருக்கும் கூட வாழ்வில் முன்னேற முடியும்! முன்னேறிக் காட்டுவேன்'' என்ற உறுதிமொழியை எடுத்துக்கொண்டான்.

என்றுமில்லாத ஓர் உற்சாகம் அவனை ஆட்கொண்டு விட்டது. ஓர் மனிதனுக்கு தான் வாழ்க்கையில் முன்னேற ஓர் இலட்சியம் வேண்டும் என்ற பாடத்தை அன்று அவன் பெற்றுக் கொண்டான். வாழ்வில் பல அனுபவங்களைப் பெற்றவனாக இவன் இருந்தால் அனைவரையும் விட அவனால் வாழ்க்கையில் முன்னேற முடியும். படித்தான் நன்றாகவே படித்தான் தியாகம் செய்தான் தூக்கம், பசி , ஆசைகளைத் தியாகம் செய்து தனது இலட்சியத்தை அடைய முழு மூச்சாக முயற்சி செய்தான். இடையூறுகளை வெற்றிகரமாக முகங்கொண்டு வாழ்க்கையை வெற்றி கொண்டான்.

"ஐயா! நீங்க சொன்ன இடத்திக்கு வந்திட்டம் உங்களுக்காக எல்லாரும் இருக்காங்க'' என்ற சாரதியின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தான். அவனுக்கு இப்போது நன்றாக புரிந்தது ஏன் ஒருவித சிலிர்பு, திருப்தி எல்லாம் அவனை ஆட்கொண்டதென அதே போல் "அனுபவக் கல்வியே வாழ்வின் மேன்மை'' என்ற கருத்தை புரிந்து கொண்டான் ஆம்! மனோகரின் வாழ்வை அனுபவம் எனும் கல்வி மேம்மையாக்கிவிட்டது. ஏட்டுக் கல்வியைவிட அனுபவக் கல்வியே அதிகம் துணைபுரிந்தது என்று எட்டுத்திக்கிலும் எதிரொலிப்பது போல அவன் உணர்ந்தான்.

சிந்தனையை கலைத்தவனாய் ஆடையையும் தலைமுடியையும் சரிசெய்த வண்ணம் காரிலிருந்து இறங்கினான், அவனது சொந்தச் செலவில் அவனாலே வடிவமைக்கப்பட்ட அவனது தாயின் பெயர் சூடப்பட்ட லட்சுமி அம்மாள் வைத்தியசாலையின் திறப்புவிழாவில் பங்கு கொள்ள டாக்டர் மனோகரன் எனும் கறுப்பையா!,,,

முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரமா அவள்

பிரிவு 05
செல்வன் S.H.F சைனப்
அல் - ஹிலால் மு.வி
நீர் கொழும்பு

சங்கரியைத் தெரியுமா உங்களுக்க? எங்கள் காலணியில் இயந்திரமாகச் சூழலும் அவளை காலணியிலேயே பலபேருக்குத் தெரியாது பின் எப்படி உங்களுக்குத் தெரிந்திருக்கப் போகிறது? சங்கரியைப் பற்றிச் சொல்லும் முன்னர் எங்கள் காலணியைப் பற்றிச் சொல்கிறோன். முப்பது வீடுகள் கொண்ட எமது காலணியில் இருபத்திஒன்பது குடும்பங்கள் ஜீவிக்கின்றன போவோர் வருவோருக்கு நேரம் பார்க்க உதவியாக ஒரு பெரிய கோபுரக் கடிகாரம் முற்றத்தில் நிற்கின்றது.

நான் மூன்றாவது வீட்டில் வசிப்பவன் பட்டப்படிப்பை முடித்து விட்டு வேலைக்கான வரிசையில் நின்று கொண்டிருக்கும் ஒரு வேலையில்லா பட்டதாரி. என்னைப் பற்றி நானே சொல்வது நாகரிகம் இல்லையானாலும், சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்.

நானும் ஒரு வாட்ட சாட்டமான இளைஞன் தான் காலையில் "தேவை" பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு முன் வராந்தாவில் அமர்ந்தேனேயானால் பேப்பரைக் தவிர மற்ற எல்லாவற்றையும் பார்ப்பேன். காலையில் தன் குஞ்சுகளுக்காக உணவு தேடிக் கொண்டு வரும் பறவைகள் தன் பிள்ளைகளின் தேவைக்காக முதல் சம்பாதிக்கப் புறப்படும் குடும்பத் தலைவர்கள், தலைவனுக்கு உடந்தையாகச் செல்லும் இல்லத் தலைவிகள், பாடசாலைக் கல்வியின் பின் வேறு கற்கைக்களுக்காக நெஞ்சோடு தழுவிய புத்தகங்களோடு என்னைத் தாண்டி செல்லும் பக்கத்து வீட்டுப் பரிமளா, மேட்டிலிருந்த பள்ளத்துக்கு வரும் வாகனத்தின் ஒரு நிமிடத்துக்குள் பட்டுத் தெறிக்கும் தலைமை ஒளி போன்ற அவளது பார்வை......

" நறுக்" கென்ற ஒரு பார்வை அது!

இவற்றுள் ஒன்று தான் சங்கரியின் தரிசனம் மன்னிக்கவும், சங்கரிப் பாட்டியின் தரிசனம் எங்கள் காலணியில் வீட்டுக்கு ஒன்றாக இருக்கும் வாண்டுகளை, கோபுரக் கடிகாரத்தில் மணிகள் ஒன்பது அடிக்கும் போது முன்பள்ளிக்கு (Nursery) கூட்டிக் கொண்டு போய், மணி நான்கு அடிக்கும் போது கூட்டிக் கொண்டு வருவதற்காக அரசாங்கத்தால் மாதம் ஐந்நூறு கொடுத்து அமர்த்தப்பட்டிருக்கும் ஆயா தான் சங்கரிப் பாட்டி.

அறுபத்தி ஐந்தைத் தாண்டிய வயது, சுருக்கம் விழுந்த தோல், குழி விழுந்த கண்கள், பற்கள் இன்னும் இருக்கின்றன. நல்ல உயரமாக இருந்திருப்பாள் போலும்! முதுகு வளைந்து கொடுத்து கூன் எட்டிப் பார்த்திருந்தது.

நான் தினந்தோறும் அவனை பார்ப்பேன் அவள் என்னைக் கண்டு கொள்ளவே மாட்டாள் மணி ஒன்பதானதும் "டான்" என்று வந்து நிற்பாள் முதலாவது வீட்டின் முன் நின்று "ராமு.... ராமு...." என்பாள் ராமு ஒரு கையில் ஷூவுடன் வந்து நிற்பான். அவனைக் கண்டு கொள்ளாது அவன் கையை இழுத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அடுத்த வீட்டின் முன்னால் போய் நிற்பாள் "பாலா.... பாலா" சாப்பிட்ட வாயைக் கூட கழுவாமல் பையைத் தோளில் மாட்டியும் மாட்டாமலும் வந்து நிற்பான் அவனையும் அழைத்துக் கொண்டு அடுத்தடுத்த வீடுகள்..........."சிவா .... அமுதா..... சுமனா....."எல்லோரையும் அழைத்துக் கொண்டு செல்வாள் ம்ஹூம்....இழுத்துக் கொண்டு செல்வாள் என்பதே சாலப் பொருத்தம்.

குழந்தைகள்.... அவர்கள் ரோஜா மலர்க் கொத்துக்கள். ஒவ்வொருவருக்குள்ளேயும் ஒளிமயமான எதிர்காலம் ஒழிந்திருக்கின்றது. அவர்களின் கண்களை கூர்ந்து கவனித்ததுண்டா நீங்கள்? சங்கரிப் பாட்டி நிச்சயமாக கவனித்திருக்க வாய்ப்பில்லை. அவள் ஒரு இயந்திரம். வெறும் ஐந்நூறு ரூபாவுக்காக உணர்வுகளைக் கல்லாக்கிய இயந்திரம் வாத்துக் கூட்டத்தைத் தடியால் விரட்டிக் கொண்டு போகும் கிராமத்துப் பெண் போல அவளும் விரட்டுவாள், இந்த பிஞ்சுகளின் பெற்றோரின் மேல் தான் எனக்கு கோபம் கோபமாக வரும்.... இப்படி விரட்டுகின்றாளே!

மறுநாள் மணி ஒன்பது அடித்தது சங்கரிப்பாட்டி வந்தாள் "ராமு...... ராமு.... பையை மாட்டிக் கொண்டு ராமு வந்தான். "பாலா....பாலா....." பாலா வரவில்லை. "பாலாவுக்கு சுகமில்ல ஆயா".... வெளியே வந்து சொன்னாள் பாலாவைப் பெற்றவள். சங்கரிப்பாட்டி அடுத்த வீட்டை நோக்கி நடக்கிறாள் சங்கரிப் பாட்டி. அட! என்ன சுகயீனம் என்றாவது கேட்டிருக்கலாமே! என் மனம் பொருமுகிறது.

அடுத்த நாளும் வருகிறாள் சங்கரிப் பாட்டி "பாலா..... பாலா..." பாலாவின் வீட்டின் முன் நின்று சத்தம் போடுகின்றாள் "பாலாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாயிருக்கு ஆயா..." பெற்றவள் கண்களை ஒற்றிக் கொள்கிறாள். ஒரு வார்த்தை கூட பேசாமல் சங்கரிப் பாட்டி நகர்கிறாள். சீ....
என்ன பெண் இவள்! மனது மட்டையாகி, மரத்துப் போன இயந்திரம் இவள்! என் மனம் ஆவேசமாகக் கூச்சலிடுகின்றது.

மூன்றாவது நாள்.....
நான்காவது நாள்.....
ஐந்து, .... ஆறாவது நாள்......

ஏழாவது நாள் அதிகாலையில் ஒரு கனவு. வானம் கடுமையாகக் குமுறிக் கொண்டிருக்கின்றது. காலணி முழுக்க வெள்ளம். சங்கரிப் பாட்டி ஒரு ஐந்து வயது மதிக்கத்தக்க குழந்தையை கையில் தூக்கிக் கொண்டு வருகிறாள். வெள்ளம் முழங்காலை அடைகிறது. பின் இடுப்பைத் தொடுகின்றது. அவள் குழந்தையைத் தொடுகிறது. நீருக்குள் குழந்தையைத் தவற விடுகின்றாள்.

பலத்ததொரு இடி முழங்குகிறது நான் திடுக்கிட்டு எழுகிறேன். சுவர்க்கடிகாரம் மணி ஏழைக் காட்டுகிறது. வெளியில் மழை கொட்டிக் கொண்டிருக்கின்றது. வெளியில் அழுகுரல்கள் சங்கு ஊதும் சத்தம் என் செவிகளில் விழுகிறது. எழுந்து ஜன்னல் வழியாகப் பார்க்கிறேன். பாலாவின் வீட்டின் முன்னாலிருந்து பெண்கள் ஒப்பாரி வைக்கின்றனர். "முகங் கழுவ போகையிலே - பாலா மூர்க்க எமன் வந்திட்டானோ...... ஓ.....ஓ...." இது கனவா இருக்கக் கூடாதா......? என் தலை, ஜன்னல் கம்பிகளில் சென்று மோதுகிறது இல்லை... இது நிஜம் தான்..... ஆம் - ஒரு மொட்டு கசங்கி விட்டது.

காய்ச்சலின் சூட்டால் கருகி விட்டது.... என் கண்களில் இருந்து கண்ணீர் கால்வாய் வெட்டி வழிந்து தரையை முத்தமிடுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி ஒன்பதடிக்கின்றது. சங்கரிப்பாட்டி வருகிறாள். பாலாவின் வீட்டின் முன் வந்து நிற்கிறாள். குழி விழுந்து ஒளி மங்கிப் போன அவளது கண்களிலிருந்து நீர் பெருக் கெடுக்கிறது. ஒட்டி உலர்ந்து போன கன்னம் எங்கும் ஈரம் கசிகின்றது. அவள் என்னைப் பார்க்கிறாள் என் உதடுகள் துடிக்கின்றன. "பாலா" அவளது முகத்தில் எந்த அசைவும் இல்லை. கண்கள் மட்டும் கண்ணீரை சொரிந்த படி இருக்கின்றன. உதடுகள் தழுதழுக்கின்றன. இந்த நேரத்தில் அவள் மனம் எதையெல்லாம் அசை போடுகின்றனவோ!

கோபுரக் கடிகாரம் மணி மூன்றைக் காட்டுகிறது. சடாரென்று எழுகிறாள் அடுத்த வீட்டை நோக்கி நகர்கிறாள். "ராமு...ராமு..."என் உள்மனம் கதறி அழுகின்றது. அவளைப் பற்றி என்னவெல்லாம் நினைத்தேன்? இல்லை அவள் பற்றி என்னவெல்லாம் நினைத்தேன்? இல்லை அவள் சுயநலவாதி இல்லை... அவள் தன்னை அந்த மழலைகளுக்காகவே அர்ப்பணித்திருக்கிறாள். அவளது உயரிய பண்பு என் மனதில் உச்சத்தில் இருக்கிறது. என் மனம் ஓலமிடுகிறது. அவள் இயந்திரமல்ல!!!

**(முற்றும்)**

**(உலகத்துக்காய் வாழ்வது உயரிய பண்பு என்ற கருப் பொருளில் எழுதப்பட்டது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழி கற்பிக்கும் முறைகள்

முனைவர் மு.செல்வதுரை
முதுநிலை ஆய்வு வளமையர்
செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை.

**முன்னுரை :**

மனித எண்ணங்களையும், உணர்வுகளையும் எடுத்துச்சென்று, வெளிப்படுத்தும் கருவியாக மொழி அமைகிறது. மனிதன் பேசுவதற்கு தொடங்கிய நாள்முதல் மொழியில் ஒழுங்கில்லாமல் தான் பேசிக்கொண்டு இருந்தார்கள். பின்னர் நாளடைவில் அவகர்கள் மதி நுட்பத்திற்கேற்ப அவனைத் திருத்திக்கொண்டு மற்றவர்களுக்கும் கற்றுகொடுக்கும் முயற்சியில் இறங்கினான். கற்றல், கற்பித்தல் தொடர்பான சிந்தனைகள் இந்தியப் பண்பாட்டில் வேதகாலம் தொடங்கியே ஏற்பட்டுவிட்டது. எந்த எழுத்தை எப்படி உச்சரிப்பது? தவறுதலாக உச்சரித்தால் ஏற்படும் விளைவுகள் நேரிடும் என்று தெரிந்து கொண்டான். கற்பித்தலை எளிமையாக்குவதின் மூலம் மாணவர்களின் திறன்களை எவ்வாறு வெளிக்கொணர முடியும் என்பதை ஆய்வுப்பொருளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**கேட்டல் திறன் :**

நான்குவகைத் திறன்களில் கேட்டல் திறனே மிகவும் இன்றியமையாத திறனாகும். இதனையேத் திருவள்ளுவர்,

> **"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
> **செல்வத்துள் எல்லாம் தலை"** (குறள்: 157)

என்று குறிப்பிடுகிறார். ஒன்றைப் படித்துத் தெளிவதைவிட கேட்டு தெளிவதே பயனுள்ளதாக இருக்கும். ஒரு குழந்தை வயிற்றில் இருக்கும் பொழுதே கேட்கும் திறனைப் பெற்றுவிடுகிறது. அக்குழந்தை பேசுவதற்கு வேண்டுமேயானால் நாட்கள் பல ஆகும். அதுவரை கேட்டல் என்ற ஒருதிறனை வளர்த்துக் கொண்டுதான் வரும். ஆசிரியர் பேசும்பொழுது மாணவர் கேட்கின்றனர். கேட்கின்றவர் எல்லோரும் மிகக்கவனமுடன் அல்லது கூர்மையுடன் கேட்பதாகச் சொல்ல இயலாது. ஏனெனில் ஆசிரியர் பேச்சின் கருத்து மிகக்கடின மானதாக அல்லது பேசப்படும் பொருள் மாணவர்களின் அனுபவத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம். எனவே கேட்பவரின் திறன் மாறுபட இடமுண்டு.

ஒருவர் கேட்க முற்படும் பொழுதும் படிக்கும் பொழுதும் பேசும்பொழுதும் என்ன என்பதை செவிமடுத்து கேட்பது அதுவே அவரின் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாகும். ஆசிரியர்கள் வாசிக்கும் பொழுது மாணவனைத் தன்வயப்படுத்தி எளிமையான சொற்களைச் சொல்லும் பொழுது அவன் செவிமடுத்து கேட்பான். மாணவரின் புரிதல் திறனுக்கேற்ப பாடல்கள் பாடியோ அல்லது ஒரு சொல் சொல்லி அதற்கு எதிர்ச்சொல் என்னவாக இருக்கும் என மாணவனை யோசிக்க வைக்கவேண்டும். ஆசிரியர் மாணவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கிடையே ஒரு தொடர்ச்சி சங்கிலிப் பிணைப்பு இருந்தால் தான் கேட்டல் திறன் முழுமைப்பெறும் என்பதில் ஐயமில்லை. கேட்கும் திறன் என்பது தனிப் பட்டவர்களின் மனநிலை, விருப்பு, வெறுப்பு, ஆர்வம் ஆகியவற்றைப் பொறுத்தும், தனிப்பட்டவர் களின் திறமை, அவர்களின் உடல், மனநிலையில் உள்ள குறைபாட்டைப் பொறுத்தும் உள்ளது.

### வாசித்தல் பழக்கம் :

ஒரு பாடத்திட்டத்தில் உள்ள பாடப்புத்தகத்தை மட்டும் படிக்கும் மாணவனை மற்றப் புத்தகங்களையும் படிக்க வைப்பதற்கு தூண்டுகோலாக ஆசிரியர் விளங்கவேண்டும். கதைப்புத்தகங்கள், நாளிதழ்கள் போன்றவற்றை வாசிப்பதற்கு ஆர்வங்காட்டுவதால் மாணவர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்வதோடு, பிழையின்றி வாசிக்கவும், எழுதவும் முடிகிறது. தினந்தோறும் வகுப்பில் ஒரு ஐந்து நிமிடம் ஒதுக்கி இன்றையச் செய்திகளை வாசிக்க வைக்கும் பொழுது மாணவர்களிடையே ஓர் உந்துதல் ஏற்பட்டு அவனை விட நாம் நன்றாக வாசிக்க வேண்டும் என்று அறிவுப் போட்டி ஏற்படும். வாசித்தலின் போது ஆசிரியர் எந்த இடத்தில் ஏற்றி இறக்கி வாசிக்க வேண்டும் என்று சொல்லும் பொழுது மாணவரின் மனதிலும் நன்றாகப்பதியும். வாசிக்கும் பொழுது சந்திப்பிழை, ஒற்றுமிகுதல் ஒற்று மிகாதல் போன்ற இலக்கண குறிப்புகளையும் ஆசிரியர் சொல்லிக்கொண்டே வந்தால் நாளடைவில் மாணவன் பிழையின்றி வாசிக்கவும் அதன் மூலம் எழுதவும் முடியும். நூல் வாசிக்கும் பழக்கம் இல்லையெனில் அவர்களது அறிவை விரிவுபடுத்த முடியாது. ஏதாவது ஒரு தலைப்பில் கட்டுரை எழுதச்சொன்னால் அவர்கள் வார்த்தையைத் தேடுவர். அவர்களிடத்தில் சொல்லாட்சித்திறன் இல்லாமல் போய்விடும். மாணவர்களிடத்தில் சொல்வளத்தைப் பெருக்குவதற்கு அவர்களுக்கு பிடித்தமான கதையைச் சொல்லி பின்பு அக்கதையின் சுருக்கத்தை எழுதச்சொல்லும் பொழுது அவனுடைய சொந்த முயற்சி வெளிப்படும். எனவே ஆசிரியர் வாசித்தல் பழக்கத்தை ஏற்படுத்தும் பொழுது சிறந்த மாணவனை உருவாக்க முடியும்.

### இலக்கணம் கற்பித்தல் :

ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இலக்கணம் பயன்படுகிறது. சொற்களை விளக்கும் கருவியாக இலக்கணம் அமைகிறது. இலக்கணம் என்பது மொழிக்கு விளக்கம் கூறும் மரபிலக்கண நூற்களின் செய்திகள் மட்டுமல்ல. நாம்பேசும் எழுதும் மொழியின் அமைப்பையும் ஒழுங்கு நெறியையும் கூறுவதாகும். இலக்கணத்தை கற்பிக்கும் ஆசிரியன் மாணவரிடத்தில் பயத்தை உண்டு பண்ணுதல் கூடாது. இன்றைய சூழ்நிலையில் குருட்டு மனப்பாடம் செய்ய வைத்து அவர்களுக்கு புரிதல் திறனே இல்லாமல் செய்து விடுகின்ற போக்கே நிலவி வருகின்றது. இலக்கண ஆசிரியர் பாடம் கற்பிக்கும் பொழுது அக்கால மொழிச்சூழலை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்து அதன்மூலம் அக்கால மொழிப் பயன்பாடு எவ்வாறு இருந்தது? அந்த மொழிக்குரிய இலக்கணம் இவையென்று தெளிவுபடுத்த வேண்டும். காலந்தோறும் மொழியானது மாறுதலுக்குட்பட்டது. எனவே மரபிலக்கணத்தைச் சொல்லி கொடுக்கும் பொழுது, தற்பொழுது மொழியின் நிலை என்ன என்பதையும் விளக்கி மாணவர்களுக்கு வேறுபாட்டை உணரும் திறனை ஏற்படுத்த முடியும். மொழியைப் பிழையின்றி உச்சரிப்பதற்கு முதலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனுக்கு பிறப்பியல் செய்திகளைக் கூற வேண்டும். எந்த எழுத்து எந்த இடத்தில் பிறக்கிறது என்பதை மாணவனே அறிந்து உச்சரிப்பதற்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

மாணவர்களின் வயது வரம்புக்குத் தகுந்தவாறு இலக்கணம் அமைய வேண்டும். குறிப்பாகத் தொடக்கக்கல்வி மாணவனுக்கு பெயர்ச்சொல், வினைச்சொல்லுக்குரிய வரையறைத் தெரிந்தாலே போது மானது. அதைவிடுத்து பெயரெச்சம், வினையெச்சம், முற்று போன்ற இலக்கணக்கருவிச் சொற்களை கற்றுத் தரும் பொழுது மாணவனுக்கு இலக்கணத்தின் மீதே கசப்பு ஏற்பட்டுவிடுகிறது. எனவே இலக்கணம் பாடத் திட்டம் மாணவரின் புரிதல் திறனுக்கு ஏற்பவே அமைய வேண்டும். பாடத்தில் உள்ள உதாரணங்களை மட்டும் கூறாமல், மாணவனைச் சிந்திக்க வைத்து உதாரணங்கள் கூறிய பின் இத்தொடரில் பெயர்ச்சொல் எது வினைச்சொல் எது என அவர்கள் கண்டறிவதற்கு நாம் சோதனை நடத்த வேண்டும்.

## கற்பித்தலின் தரம் :

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்கும் பொழுது தெரிந்த ஒன்றைச் சொல்லி தெரியாதவற்றை எளிய சொற்களின் மூலம் விளக்குதல் வேண்டும். ஆசிரியர் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பாடத்திட்டத்தில் உள்ள பாடத்தை முடிக்கவேண்டும் என்று அவசர அவசரமாய்ச் செல்லாமல் மாணவரின் புரிதல் திறனுக் கேற்றபடி பாடத்தை நடத்த வேண்டும். முதல்நாள் வகுப்பில் நடத்திய பாடத்தை மறுநாள் மாணவர்களுக்கு நினைவூட்டும் வகையில், அவர்களிடம் வினாக்களை எழுப்புவது, மாணவர்களுக்கு அந்தப் பாடத்தை பற்றிய அறிவு போதுமானதா இல்லையா என ஆசிரியர்கள் தீர்மானிப்பதற்கு வழிவகுக்கும். மேலும், மாணவனின் புரிதல்திறன் அதிகரிப்பதற்கு எழுதுகோல்களினால் வரைந்த வரைபடங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற வற்றை ஆசிரியர் பயன்படுத்தலாம்.

மாணவன் பெரிய கவிஞனாக ஆகாவிட்டாலும் தமிழ்மொழியை பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ள வேண்டும். மாணவன் படிக்கும், பயன்படுத்தும் மொழியில் சொல்வளம் அதிகமாக இருக்குமாறு பாடத்திட்டம் அமைய வேண்டும். சொற்களைக் கற்பிக்கும் பொழுது அவன் வாழ்க்கையில் அன்றாடம் பயன்படக் கூடியவையாகவும், அனுபவத்திற்கு உட்பட்டவையாகவும் மொழி அமையவேண்டும். மாணவனுக்கு சிறு சிறுக்கட்டுரை, கவிதை, சிறு நாடகங்கள் போன்ற வற்றிற்கு வாய்ப்பு கொடுக்கும் பொழுது அவனுடைய கற்பனையாற்றல் விரிவடைந்து எந்தச் சொல்லை எங்குப் பயன்படுத்த வேண்டும் என்ற ஆற்றல் ஏற்படுகிறது. மாணவன் பிழையின்றி பேசவும், எழுதவும், அவனுடைய கற்பனைத்திறனை அதிகரிக்கவும் ஆசிரயரே முழுப்பங்கு வகிக்கிறார். இலக்கணத்தை முழுமையாக கற்று கொண்டோமேயானா ல் எந்த ஒரு மொழியையும் எளிமையாக பேச, எழுத நம்மால் முடியும் என்பதில் ஐயமில்லை.

## கற்பிக்கும் முறை :

கல்வி பயிற்றலில் பல்வேறு மாற்றங்கள் வந்தும் தமிழின் பண்பாட்டுப் பெருமானம் காரணமாக, அதன் பயில்வு முறையில் அதிக மாற்றங்கள் ஏற்பட்டன என்று கூறமுடியாது. தமிழ் வகுப்பும் தமிழாசிரியரும் கல்விப்போக்கில் பொதுவான ஓட்டத்துடன் இணையாப் பொருளாகக் கொள்ளப்படும் ஒரு நிலைமை காணப்பட்டு வந்துள்ளது" முனைவர் கா. சிவத்தம்பி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் என்பது கற்பித்தலின் மூலமே நிறைவு பெறுகிறது. பள்ளிக்கல்வியில் சிறப்பிடம் பெற வேண்டிய பாடங்களுள் ஒன்று மொழிப்பாடம். மொழித்திறனைப் பெறுபவர் நடைமுறை வாழ்க்கையுடன் பொருந்தி வாழும் வல்லமையைப் பெறுவர். அம்மொழித்திறனை மாணவர்கள் பெறுவதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் மொழியாசிரியர்கள். ஆனால் மொழியாசிரியர்கள் என்றாலே பிறதுறை அறிவும் பயன்பாடும் அற்றவர்கள் என்ற எண்ணம் பரவலாக நிலவி வருகிறது. நவீன தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள, தொலைத்தொடர்புச் சாதனங்களின் ஆட்சிக்கால மான, அந்நிய மொழி மோகம் நிறைந்த இன்றைய சூழலில் மொழிப்பாடம் கற்பித்தல் என்பது மொழியாசிரியர்களை எதிர் நோக்கியுள்ள பெரிய சவாலாகும். இக்காலக் கட்டத்தில் மொழிப்பாடம் கற்பிக்க வேண்டிய முறைமைகளையும் மொழிப்பாடம் கற்பிப்பதில் உள்ள குறைபாடுகளையும் தொடர்ந்து ஆராய வேண்டியது தேவையாகிறது.

## செந்தமிழ் நாப்பழக்கம்

பொதுவாக இந்நூற்றாண்டைத் தொலைத்தொடர்பு யுகம் என்றழைக்கலாம். கணினியில் மூழ்கிப் போவதைப் போலவே தொலைக்காட்சியிலும் மூழ்கிப்போய் விடுகின்றனர் மாணவர்கள். தொலைக் காட்சியின் உச்சரிப்புப் பிழைகள் மாணவர்களிடமும் பதிந்து விடுகின்றன, முக்கியமாக மாணவர்கள் விரும்பிப்பார்க்கும் சன்மியூசிக், ஜாக்பாட் (கேள்வி என்பது பல ஆண்டுகளாக, கேல்வி என்று உச்சரிக்கப் பட்டதைத் தமிழ் அறிந்தவர்கள் அறிவர்) முதலிய நிகழ்ச்சிகளில் ல, ள, ழ, ந, ன, ண, ர, ற ஆகிய எழுத்துகள் ஒலி வேறுபாடுகள் இன்றியோ அல்லது தவறாகவோ தாம் பெரும்பாலும் ஒலிக்கப்படுகின்றன. புதிதாகப் படித்து முடித்து வரும் தமிழாசிரியர்களில் சிலரும் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழ் மொழியின் தனிச்சிறப்பே சிறப்பு ழகரம். இவ்வொலி இன்று தன் சீரிழந்து நிற்கிறது.

“நுனிநா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்” (தொல். எழுத்து: 95)

நுனி நாக்கு மேல்நோக்கி வளைந்து அண்ணத்தைத் தடவ ழகரம் பிறக்கிறது.

“நாவிளிம்பு வீங்கி யண்பல் முதனுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்” (தொல்.எழுத்து: 96)

நாக்கு மேல்வாய்ப் பல்லின் அடியில் அண்ணத்தைத் தொட்ட அளவில் லகரமும், அண்ணத்தை வருட ளகரமும் பிறக்கிறது. இலக்கணங்களை மனத்தில் நிறுத்திக்கொண்டு இவ்வொலிகளை உச்சரித்துப் பழகுதல் வேண்டும். மாணவரோ பிறரோ யாராகவிருப்பினும் செய்தித்தாளைப் படித்து அதனை ஒலிப்பேழையில் பதிவு செய்து, மீண்டும் கேட்கும் பொழுது தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும். இப்பயிற்சியின் மூலம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பதை உணர முடியும். இதற்காகவே

“ஓடுற நரியில ஒரு நரி கிழநரி கிழநரி தலையில ஒரு முடி நரைமுடி”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும், இது போன்ற நா நெகிழ் பயிற்சிகள் நம் முன்னோர்களால் முற்காலத்தில் கொடுக்கப்பட்டன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எண்களின் கூட்டு கணிதம் என்றும் எழுத்துக்களின் கூட்டு இலக்கணம் என்றும் கூறுவர். பண்டைய முறையில் உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் ஒலிக்கக் கற்பிக்கும் பொழுது இரண்டு எழுத்துக்களாகச் சேர்த்துக் கூறுவர். (விதி விலக்கு- ஐ, ஔ).

அஆ இஈ உஊ எஏ ஒஓ

க்ங் ச்ஞ் ட்ண் த்ந் ப்ம் ய்ர் ல்வ் ழ்ள் ற்ன்

இவ்விணை எழுத்துகளை இனஎழுத்துகள் என்பர். இவற்றுள் மெய்யெழுத்துக்களை ஒலிக்கப் பயிற்சி கொடுக்கும் பொழுது இம்முறையில் எழுதியே பயிற்றுவித்தல் அவசியமாகும். மேலும் ண, ன, ந ஆகிய மூன்று எழுத்துகளையும் முறையே டண்ணகரம், தந்நகரம், றன்னகரம் என்று கூறச் செய்தல் வேண்டும். இம்முறையில் பயிற்றுவித்தலால் 'ண்' என்னும் எழுத்து தான் டகரத்தின் முன் வரும்,'ந்' என்னும் எழுத்தின் பின் 'த' தான் வரும் 'ன்' என்னும் எழுத்தின் பின் 'ற' தான் வரும் என்பதையும் புரிந்து கொள்ளவும் நினைவில் நிறுத்தவும் மாணவர்களுக்கு எளிதாக இருக்கும். கற்பிக்க வேண்டிய முறையும் இதுவே. ஆனால் மேல்நிலை மற்றும் உயர்நிலை வகுப்பு மாணவர்கள் கூட மூன்றுசுழி ண் இரண்டு சுழி ன் என்றுதான் கூறுகின்றனர். மாணவர்களின் இந்நிலைக்கு அவர்களுக்கு முறையாகக் கற்பிக்காமையே காரணம் எனலாம். எனவே மொழிப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் எழுத்துகளையும் அவற்றை ஒலிக்கும் முறைகளையும் அவற்றுக்கு வழங்கும் பெயர்களையும் அறிந்து முறையாகப் பயிற்றுவித்தால் மாணவர்களின் இழித்தகைமை நீங்கும். மொழிப்புலமை ஓங்கும்.

**இலக்கணமும் இன்சுவையே**

ஆங்கிலவழியில் பயில்வதே இன்றைய நாகரிகமாக உள்ளது. தமிழ்ப்பாடத்தை ஆர்வமின்றிப் பயில்வதும் அதிலும் இலக்கணப் பாடத்தைப் புறக்கணிக்கும் சூழலும் உருவாகி வருகிறது. கருத்தைப் பிறருக்கு எடுத்துச்சொல்வது பேச்சும், எழுத்தும். மொழியைப் பிழையின்றி பேசவும் எழுதவும் துணை புரிவது இலக்கணமே. இலக்கணம் கற்பிக்கும் பொழுது பழைய மரபுகளை மீறாமல் புதிய உத்திகளைப் பயன்படுத்தி ஆர்வத்தைத் தூண்டுவது கற்பித்தலில் தலையாய ஒன்றாகும்.

**"மனத்தி னெண்ணி மாசறத் தெளிந்து**

**இனத்தின் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்"** (தொல்.பொருள்: 656)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தொல்காப்பியம். இலக்கண விதிகளை இலக்கிய வழிகளில் மட்டுமல்லாமல் உலகியல் வழிகளிலும் பொருத்திக் காட்டுதல் வேண்டும் என்பதையே தொல்காப்பியர் "இனத்திற் சேர்த்தி" என்னும் தொடரால் உணர்த்துகிறார். கற்பித்தல் நிலையில் இலக்கணம் கற்பிக்க கரும்பலகையை மிகுதியும் பயன்படுத்துதல் வேண்டும். ஒப்புமைக் கூறுகளைக் கரும்பலகையில் எழுதிக்காட்டுதலும் ஐயப்பகுதிகளைத் தடை விடைகளைக் காட்டி தெளிவித்தலும் வேண்டும்.

இலக்கணக்குறிப்பு தொழில் பெயராகவிருப்பின் விகுதி, தல், அல், அம், ஐ, கை இவற்றுள் ஒன்றாக இருக்க வேண்டும், வியங்கோள் வினைமுற்றாக இருப்பின் க, இய, இயர் என்னும் மூன்றில் ஒன்றாக அதன் விகுதி அமைதல் வேண்டும் முதலியவற்றை அறிந்து சொற்களைப் பகுப்பர். எனவே உறுப்பிலக்கணம் எழுதும் பொழுது அதன் இலக்கணக்குறிப்பையும் எழுதச் சொல்லுதல் இன்றியமையாதது. சொற்களைப் பிரிக்கவும் சேர்க்கவும் பழகிக்கொண்டால் உயர்நிலை வகுப்புகளில் இலக்கிய வாசிப்பும் எளிதாக இருக்கும்.

இலக்கணக் குறிப்பைப் பயிற்றுவிக்கும் பொழுது மாணவர்களுக்கு அனுபவம் மிக்க பொருள்களின் அடிப்படையில் எடுத்துக்காட்டுகள் அமைந்திடின் ஆர்வம் மிகுவதுடன் மனதில் நிறுத்துவது எளிதாகிறது. சான்றாக உருவகத்தை விளக்க.

**"சலசல சலசல இரட்டைக் கிளவி**
**தகதக தகதக இரட்டைக் கிளவி**
**பிரித்து வைத்தல் நியாயம் இல்லை பிரித்துப் பார்த்தால் பொருளும் இல்லை**

இவ்வழி இரட்டைக்கிளவியின் விளக்கமும் தரலாம். ஆசிரியர் மனத்தின் எண்ணி மாசறத்தெளிந்து இவ்வுத்திகளைப் பயன்படுத்தி மாணவர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தால் இலக்கணப்பாடமும் இனிமையான அனுபவமாக அமையும். ஆனால் இம்முறையில் பயிற்றுவிக்கும் பொழுது ஆசிரியருக்குத் தெளிவு இருந்தால் மட்டுமே மாணவர்களுக்கு ஐயங்கள் எழாவண்ணம் பயிற்றுவிக்க இயலும். அதேசமயம் ஊடகங்களின் மொழிகளை உள்வாங்கிக் கற்பிக்கும் பொழுது மிகுந்த கவனத்துடன் இருத்தல் வேண்டும்.

## செவியுணவே சுவையுணர்வு

அறிவுக்கு விளக்கம் கொடுக்க வந்த திருவள்ளுவர் "தான் பிறர் வாய் நுண்பொருள் காண்பது அறிவு" (குறள்-424) என்கிறார். ஆன்ற பெருமையைத்தரும் செவிக்கு உணவாகிய, கேள்விச் செல்வத்தைப் பெற மாணவர்கள் பெரிதும் விரும்ப வேண்டும். செவிவாயாக நெஞ்சுகளனாகக் கேட்டு, கேட்டவற்றை விடாது உள்ளத்து அமைத்தல் வேண்டும். காட்சிவழிக் கற்றலுக்கு அடுத்த நிலையில் அதிகப்பலன் தருவது கேட்டல் வழிக்கற்றலில் தான். காட்சி, கேள்வி வழியில் 50 விழுக்காடு கற்றல் நடைபெறுகிறது என்றால் அதில் 11 விழுக்காடு கேட்டல் வழியில் நடை பெறுகிறது. கல்வியாளர்களில் பெரும்பாலோர் விரிவுரை முறையையே சிறந்தது என்கின்றனர். இக்கேட்டலில் மாணவர்கள் திறன் பெற்றுள்ளனரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அறிய மேல்நிலை வகுப்புகளில் 'கேட்டல் பேசுதல் திறனறி தேர்வு' (Testing off Oral - Aural skills) நடத்தப்படுகிறது. இத் தேர்விற்கு ஆசிரியர் ஏதேனும் ஒரு பகுதியைப் படித்துக்காட்டி படித்தவற்றுள் சில வினாக்களை எழுப்பிச் சோதித்தல் வேண்டும். சில தமிழ்க் கையேட்டில் உள்ளவற்றைப் படித்துக் காட்டுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். இது மாணவர்களிடம் சலிப்பை ஏற்படுத்தி கேட்டல் திறனைக் குன்றச் செய்கிறது.

நன்னூலில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற இரண்டு பகுதிகள் மட்டும் தான் உண்டு. தொல்காப்பியத்தில் இவ்விரு அதிகாரங்களோடு பொருளதிகாரம் என மூன்றாவது பகுதியும் உள்ளது. எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் தமிழின் வரிவடிவம், அதன் உச்சரிப்பு முறை, எழுத்துகள் சேர்ந்து சொற்கள் உருவாகும் முறை, சொல்லாக மாறும் பொழுது ஏற்படும் மாற்றங்கள், சொற்களின் சேர்க்கையால் ஏற்படும் தொடர்கள், தொடர்கள் உருவாகத் தேவையான அடிப்படைச் சொல்வகைகளான பெயர்ச்சொற்கள் (Noun) வினைச்சொற்கள் (Verb) இவ்விரண்டும் இணைந்து தொடர்கள் உருவாகும் விதம், அப்பொழுது தேவைப்படும் இடை மற்றும் உரிச்சொற்கள், ஆங்கிலத்தில் முன் ஒட்டுகள் (Prefix) பின்னொட்டுகள் (Suffix), இடையொட்டுகள் (Infix) எனப் பேசப்படுவன தொடர்களின் வகைகள் என விரிவாகப் பேசுகின்றன.

### தமிழ் இலக்கண நூல் ஆசிரியர்கள்

தமிழில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உணர்ந்து உரைநடைக்கான இலக்கணங்கள் எழுதப்பட்டுள்ளன. நு.ஃமான் எழுதிய அடிப்படைத் தமிழ் இலக்கணம் கொஞ்சம் வறட்சியான இலக்கணநூல் தான். ஆனால் அதன் பார்வை நூல்களாகப் பட்டியலிடப்பட்டுள்ள நூல்கள் முழுமையும் நிகழ்காலத் தமிழின் மாற்றங்களை உள்வாங்கி உரைநடையின் போக்கையும் புரிந்து கொண்டு எழுதப்பட்ட நூல். பரமசிவம், அவர்களின் இக்காலத் தமிழ் மரபு சுவாரசியமான எடுத்துக்காட்டுகளுடன் தமிழ் இலக்கணத்தைச் சொல்லித்தரும் நூல். மரபிலக்கணத்தையும் மொழியியலின் வீழ்ச்சியையும் உள்வாங்கிக் கொண்டு ச. அகத்தியலிங்கம், அ. சண்முகதாஸ், செ. வை, சண்முகம், முத்துச்சண்முகன், ப.ரா. சுப்பிரமணியன், த.ராஜாராம், பொற்கோ போன்றோர் தமிழிலும், ஆந்திரநோவ், இ. அண்ணாமலை, தாமஸ் லெக்மோன், ச. ஆரோக்கியநாதன், போன்றோர் ஆங்கிலத்திலும் எழுதியுள்ள நூல்கள் முழுமையும் இக்காலத் தமிழுக்கான உரை நடைக்கான இலக்கணங்கள். இவையெல்லாம் தமிழ்மொழி கற்பித்தலில் பற்றிய நூல்கள் ஆகும். இந்நூல்கள் பல்கலைக்கழகப் பாடப்பகுதிகளில் இடம் பெறாமல் இருப்பது ஒருவருக்கும் தெரியாமல் போய்விட்டது.

### உலகம் முழுவதும் தமிழ்மொழிக் கற்பித்தல்:

உலகம் முழுவதும் தமிழ்மொழிக் கற்பித்தல் ஒரே வகையாக இருக்க முடியாது. வெவ்வேறு நாட்டுக் கல்வி அமைப்பில் பாடத்திட்டத்தின் நோக்கமும் உள்ளடக்கமும் வேறு. தமிழ் கற்போரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமும் கற்கும் சூழலும் வேறு. தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேறுபாடுகளுக்குப் பொருந்தும் படி தமிழ்ப் பயிற்சி அமைய வேண்டிய தேவை இன்று இருக்கிறது. ஒரே நாட்டிலும் பல திறப்பட்ட கற்போரின் தேவைகளுக்கேற்பத் தமிழ்ப்பயிற்சி அமைவது பொருத்தம். இலக்கிய மாணவன் கற்கும் தமிழும் பிறதுறை மாணவன் கற்கும் தமிழும் ஒன்றாக இருக்க முடியாது.

முற்காலத்தில் இலக்கியம் படிப்பதன் நோக்கம் தமிழ் இலக்கிய மரபைத் தெரிந்துகொள்வதும், இலக்கியத்தை அர்த்தப்படுத்தி நயம் காண்பதும் இலக்கியம் புனைவதும் இலக்கியத்தைக் கற்பிப்பதுமே. இக்காலத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பள்ளிப்படிப்பு முடிந்தபின் கற்பிப்பதற்கு மட்டுமே பொருந்தும். இலக்கிய உணர்வை மனதில் விதைப்பது ஆகியவற்றோடு மொழியின் அழகியியல் வெளிப்பாட்டை அறிந்து பயன்படுத்தும் கருத்துப் பரிமாற்ற சாதனமாகவும் அமைய வேண்டும். பல வகை மொழித் திறன்களில் இதுவும் ஒன்று. கருத்து வெளிப்பாட்டுத் திறனை வளர்க்கும் வகையில் இலக்கியம் கற

## தமிழ் கற்பதில் பின்பற்ற வேண்டிய திறன்கள்:

தமிழ் கற்பதில் பின்பற்ற வேண்டிய பிறத்திறன்களில் உறவை உருப்படுத்திக்கொள்ளும் உரையாடல் திறன், சொல்லவந்த கருத்தைப் பிசிறின்றி, வேண்டாத சொல்லின்றி, ஒரு தடவையில் விளங்கும்படி சொல்லும் பேச்சுத்திறன், எழுதுத்திறன், ஒன்றைக்கேட்டு அல்லது படித்துத் தவறின்றிப் புரிந்துகொள்ளும் திறன், அறிவார்ந்த விவாதத்திறன், ஆங்கிலத்தில் கேட்டதை, படித்ததைத் தமிழில் எடுத்துச் சொல்லும், எழுதும் திறன் முதலானவையும் அடங்கும். இவைப் போன்ற திறன் தொகை (skill set) ஒன்றை ஏற்படுத்திக் கொண்டால், கல்வி, மாணவரின் கற்கும் நோக்கப்படி பாடத்திட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டிய தேவை விளங்கும்.

இலக்கணத்தைத் தனியே கற்பிக்கத் தேவை இல்லாமல் போகும். குழந்தைகள் தமிழை இயல்பாகக் கற்றுப் பேசும்பொழுது இலக்கணத்தை மனப்பாடம் செய்வதில்லை, இலக்கணத்தை மனதிற்குள் உருவாக்கிக் கொள்கிறார்கள். மாணவர்கள் இம்மாதிரியான முறையையே வகுப்பறையில் மொழி கற்பதற்கும் விரும்புவார்கள். மொழியின் அமைப்பை ஆசிரியர் விளக்க இலக்கணம் தேவைப்படும், மாணவர்களின் கற்றல் பிழைகளை விளக்கித்திருத்த இலக்கணம் உதவும். தமிழை முதல் மொழியாக தாய்மொழியாக கற்கும் மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணத்தை எடுத்துரைக்கும் திறன் வேண்டும். அதற்கு இலக்கணக் கலைச் சொற்கள் தெரியவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் கற்பிக்கும் சாதனங்கள்:

தமிழ் கற்பிக்கும் சாதனங்கள் அச்சுப் புத்தகங்களோடு நிற்கவில்லை. மணலில் விரலால் நெடுங்கணக்கை எழுதிப் படித்த காலத்திலிருந்து சிலேட்டுப் பலகைக்குத் தாவியதைப் போல், அச்சிலிருந்து மென்பொருளுக்குத் தாவுவதற்கு முயற்சிகள் தேவை. மாணவர்கள் தமிழை நண்பர்க ளுடன் செய்தி பரிமாறிக் கொள்ளப் பயன்படுத்தும் புதியத்தொடர்புச் சாதனங்களில் செய்வது தமிழை மாணவர்களின் வாழ்க்கை யோடு இணைப்பதற்குத் தேவையான ஒன்று. இன்று பாடப் புத்தகங்களில் உள்ள தமிழ் இதற்குப் பொருந்தாது. மாணவர்களைத் தன்பால் ஈர்ப்பதற்கு, அவர்கள் தமிழைக் கட்டாயத்திற்காக அல்லாமல் விரும்பிக் கற்பதற்கு, செய்ய வேண்டிய பலவற்றில் பல்லூடக வழி (ஆரடவை ஆநனயை) தமிழைக் கற்பிப்பதும் ஒன்று.

தமிழ் கற்பது ஒற்றையடிப் பாதை அல்ல, அது பல்வழிச் சாலை. மாணவர்கள் தங்கள் வேகத்தில் பயில வகை செய்வது இப்பொழுது தேவை. ஆசிரியர் இல்லாமல் தன் முயற்சியில் தமிழைக் கற்க வசதிகளும் தேவை. இதற்கெல்லாம் துணைசெய்ய இன்று கணினி இருக்கிறது. கரும்பலகை போல், கணினியைக் கற்றுக் கொடுக்கும் சாதனமாகப் பயன்படுத்தும் திறனைப் பெறுவது தமிழாசிரியர்களுக்கு இன்றியமையாத தாகிறது. கணினி தரும் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திப் பாடங்கள் தயாரிக்க வேண்டும். இதைச் செயல்படுத்த தமிழ் கற்ற கணினி வல்லுநர்களின் கூட்டுறவு தேவை.

### முடிவுரை :

தமிழ் மொழிக் கற்பதனால் எல்லா வகைத் தேவைகளுக்கும் தனித்தனிப் பாடப்பொருள்கள் (Pedagogical Materials) தயரிப்பது சாத்தியம் அல்ல தேவையும் அல்ல. தமிழ் கற்பிக்கும் முறை பலவகைப் பாடப் பொருள்களைப் பொறுக்கி, அவற்றை வேண்டும் வகையில் இணைத்து மாணவர் களுக்குத் தருவதாக அமைய வேண்டும். தமிழ் உலக மொழி என்றால் அதை உலகெங்கும் உள்ளவர்கள் கற்கும் வகை செய்ய வேண்டும். அதைச் செய்யத் தமிழைப் பார்க்கும் பார்வையை ஒரு அரசியல் சித்தாந்தத்திற்குள் அடக்குவது உதவாது. தமிழை வணங்கும் மொழியாக இருத்தால் வழங்கும் மொழியாக ஓடவிட வேண்டும். தமிழைக் கொண்டாடும் மொழியாகச் சுருக்காமல் அதைப் பேசுபவர்களை முன்னே கொண்டுசெல்லும் மொழியாக விரிக்க வேண்டும். இதற்குத் தமிழ்ப் பாடங்கள் தயாரிப்பது அரசுகளின் அல்லது சில தமிழறிஞர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதும் உதவாது. தமிழ்ப் பாடங்கள் உருவாக்குவது திறந்தவெளிப் படைப்பாக (Open Source), கூட்டு முயற்சியாக மாற்றம் பெறுவது முக்கியமான தேவை. தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களில் இலக்கணம் கற்பிக்கப்படும் முறை எல்லாக் கலை இலக்கியங்களையும் கற்பிக்கும் முறையும் தான் மாற்றப்பட வேண்டும் தகவல் தொழில்நுட்பத்தால் நெருங்கி வரும் உலகில் இது சாத்தியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழி

உலகில் தொன்மையான தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ள மொழிகள் சிலவற்றை செம்மொழிகள் என அறிவித்துள்ளனர். உலக மக்கள் பேசும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை 6760 என கணக்கிட்டுள்ளனர். இவற்றில் இந்தியாவில் மட்டும் 1652 மொழிகள் பேசப்படுவதாக மொழியிலாளர்கள் கூறுகின்றனர்.

மொழிகள் எண்ணிக்கை உலக அளவிலும் நம் நாட்டளவிலும் கூடுதலாக இருக்க ஒரே காரணம் ஆயிரக்கணக்கான பழங்குடி இன மக்கள் கொண்டது இந்த உலகம் என்பதே. மேற்காணும் ஆராயிரத்து எழுநூற்று அறுபது மொழிகளுக்கும் மொழிக் குடும்பம் உண்டு. அந்த மொழிக் குடும்பத்தில் தாய்மொழி எனும் மூலமொழியும் உண்டு. அம்மூலமொழிக்கு அடிப்படையான பிறிதொரு மொழிக் குடும்பத்துடன் உறவும் உண்டு. ஆக உலகம் பல மொழி பேசும் பல இனக் குழுக்களின், பல நிறத்தவர்களின், பல பண்பாடுகளின், பல திணை நிலங்களின் சங்கமம்.

திராவிட மொழிகளுக்கென்று குடும்பம் உண்டு. ஆறாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகளின் மூல மொழிகளுடைய் எண்ணிக்கையை ஆய்ந்தால் சில நூறு மொழிகள் பட்டியலிடப்படலாம். அது போன்ற பட்டியலில் இரு பிரிவுகள் காணப்படும்.

1. இயற்கை மொழி

   மனித இனத் தொடக்கத்தின் ஊடாகவே இணைந்து வளரும் மொழி இயற்கை மொழி.

2. செயற்கை மொழி

ஒரு இனக் கூட்டத்தாரிடம் இருந்து பிரிந்து புதியதொரு இனக் கூட்டமாக பல்கிப் பெருகும் சமூகம் இயற்கை மொழிக் கூறுகளின் அடிப்படையுடன் புதிதாகக் குடியேறிய சூழலுக்கு ஏற்றவாறு புதிய ஒலிக்குறிகளை தங்கள் மூதாதையர்களின் மூல மொழியுடன் கலந்து பேசும் போது பிறப்பவை செயற்கை மொழி.

இவ்வாறு தான் இன்று நூற்றுக்கணக்கான (மூல மொழிகளிலிருந்து) இயற்கை மொழிகளிலிருந்து கிளைத்து செயற்கை மொழித் தகுதியுடன் இருப்பவை பல்லாயிரம் மொழிகளாகும். திராவிட இயற்கை மொழிக் குடும்பமும் அவற்றில் ஒன்று. உலகின் தொன்மையான மொழிக் குடும்பம் என்ற பெருமையும் இவற்றிற்கு உண்டு.

திராவிட மொழிக் குடும்பத்தில் தாயாக இருப்பது தமிழ் மொழி. திராவிட மொழிக் குடும்பத்திலுள்ள மொழிகளின் எண்ணிக்கை 22. இதில் இலக்கியத் திறனுள்ள மொழிகள் இலக்கியத்திறன் இல்லா மொழிகள் என இருபிரிவுகள் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானிலுள்ள பலூசிஸ்தான் தொடங்கி மத்திய இந்தியாவில் வாழும் பழங்குடி திராவிட இன மக்கள், தென்னிந்தியாவில் கர்நாடகம், ஆந்திரம், மராட்டியம், கேரள எல்லைகள் மற்றும் மலைகளின் மீது வாழும் பழங்குடி இன திராவிடர்கள். தெற்கு ஆசிய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர்,மொரீசியஸ், பிஜீ தீவு, தென்னாப்பிரிக்கா, இலங்கை (ஈழம்) எனப் பல்வேறு பகுதிகளில் திராவிட இன மொழிக் குடும்ப மக்கள் வாழ்கின்றனர்.

திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்பவை இலக்கியத் திறன் பெற்றவை. இலக்கியத் திறன் இன்றி பேச்சு வழக்கில் பயன்பாட்டிலுள்ள திராவிடக் கிளை மொழிகள் கொலமி, பார்ஜி, நாய்ன்னி, கோண்டி, குய், கூவி, கொண்டா, மால்ட்டா, ஒரயன், கோயா, போர்ரி, முதலான மொழிகள் பலவும் வட மற்றும் மத்திய இந்தியப் பகுதிகளில் பேசப்படுகிறது.

தமிழகம், கன்னட நாடு, தெலுங்கு நாடு மற்றும் மலையாள நாடுகளில் உள்ள அடர்ந்த காடுகளிலும், மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதியிலும் வாழ்ந்து வரும் பழங்குடி திராவிடர்கள் தோட, கோத், படக, கேடகு, துளு முதலான தமிழின் கிளை மொழிகளைப் பேசுகின்றனர். இவற்றில் துளு மொழிக்கு தற்போது வரிவடிவமும் இலக்கியங்கள் படைப்பாக்கமும் தொடங்கியுள்ளது.

இவ்வாறு திராவிட மொழிக் குடும்பத்தின் மூல மொழியான தமிழ் தோன்றி நின்று நிலைபெற்று செழிந்திருப்பதால் செம்மொழி எனும் தகுதி வழங்கியுள்ளனர். ஏற்கெனவே சீனம், ப்ரு, பெர்சியன், அரபி, லத்தீன், கிரீக், சமஸ்கிருதம் முதலானவை இத் தகுதியைப் பெற்றுள்ளன. இந்தியாவில் செம்மொழியாக சமஸ்கிருதம் உள்ளது. இந்த வரிசையில் தற்போது தமிழும் இணைந்துள்ளது.

உலகில் உள்ள பல கண்டங்களில் ஒரே நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட செம்மொழிகள் இருக்கும் பெருமை இந்தியாவை மட்டுமே சாரும். அந்த வகையில் தமிழ், சமஸ்கிருதம் இரண்டும் தங்கள் தொன்மையால் உலக மொழிகளுக்கு முன்னோடியாய் விளங்குகின்றன.

ஒரு மொழியை செம்மொழியாக தகுதி உயர்த்த மொழியியல் அடிப்படையில் விதிகள் வகுத்துள்ளனர். அந்த விதிகள் அனைத்தும் தமிழுக்குப் பொருந்தி வருவதால் செம்மொழி எனும் நிலைக்கு தமிழ் உயர்ந்து விட்டது. உலக இயற்கை மொழிகளிலேயே மிக மிக மூத்த மொழியாக தமிழ் இருப்பினும் அதற்கு உரிய காலத்தில் செம்மொழி எனும் மதிப்பு காலம் தாழ்த்தி வழங்கியுள்ளமை சற்றே நெருடலானது.

## தகுதிகள்

செம்மொழிக்கான தகுதிகள் பதினோரு விதிகளாக வழங்குகின்றனர். அவை :

1. தொன்மை
2. தனித்தன்மை
3. பொதுமைப் பண்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நடுவு நிலைமை
5. தாய்மைப் பண்பு
6. பண்பாட்டுக் கலை அறிவு பட்டறிவு வெளிப்பாடு
7. பிற மொழித் தாக்கமில்லா தன்மை
8. இலக்கிய வளம்
9. உயர் சிந்தனை
10. கலை இலக்கியத் தனித்தன்மை
11. மொழிக் கோட்பாடு

### 1. தொன்மை

செம்மொழி நிலைக்கு ஒரு மொழி ஆயிரம் ஆண்டுக்கால தொன்மை படைத்ததாக விளங்க வேண்டும். தமிழோ ஆயிரமல்ல ஈராயிரம் ஆண்டிற்கும் மேலாகப் பேசி, எழுதி, படைத்து தனக்குள்ளே பெரும் இலக்கியச் செல்வங்களைக் கொண்டது. இதனை எவராலும் மறுக்கப்படாமல் ஏற்கத்தக்க அளவிற்கு இதன் தொன்மை சிறப்பானது. அத்துடனில்லாமல் இன்றளவும் உலகமெங்கும் பரவியுள்ள தமிழர்களின் பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும், கல்வி கற்கும் மொழியாகவும், படைப்பு புனைதலில் புதிய புதிய துறைகளிலும் நிகரற்று விளங்குவது அதன் தனிச் சிறப்பு.

### 2. தனித் தன்மை

பல்வேறு திணை நிலங்களிலும் திராவிட குடும்ப மொழிகள் கிளைத்திட வைத்த தமிழ், தாயாக விளங்கி தனக்கென ஒரு மொழிக் குடும்பத்தை உருவாக்கி தன்னைச் சுற்றி வேர்களாகவும், விழுதாகவும் மொழிகள் கிளைப்பினும் தன்னிலை மாறாத உன்னத நிலையுடன் நிலைபெற்று விளங்குவது இதன் தனித்தன்மையாகும்.

### 3. பொதுமைப் பண்பு

உலகின் எந்த இயற்கை மொழிக்கும் இல்லாத சிறப்புமிக்க இலக்கணக் கட்டமைப்பு கொண்டது தமிழ் மொழி. தமிழின் இலக்கணப் பொதுமைப் பண்பு நெறிகள் திராவிட மொழிக் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் இதர இயற்கை மொழி அனைத்தும் பயனுறும் வகையில் அமைந்துள்ளது இதன் சிறப்பாகும்.

### 4. நடு நிலைமை

தமிழின் இலக்கண விதி உன்னத நெறியுடனான பன்முகத் தன்மை கொண்டது. எனினும் இதன் இலக்கண விதிகள் வேறு எதனுடனும் சாராமல் தனித்தியங்கி நடுநிலையுடன் விளங்குவது.

### 5. தாய்மைத் தன்மை

தமிழ் எனும் மூல மொழி தான் மட்டுமே என்ற தன்னலமின்றி தாய்மைப் பண்புடன் திராவிட மொழிக் குடும்பம் உருவாகிட அடிப்படையில் விளங்கியது. பேச்சு மொழியென்றும், இலக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமிக்க மொழிகளென்றும், பல்வேறு தன்மையுள்ள மொழிக் குடும்பத்தில் முதலாய் ஏனையவற்றுக்குத் தொடக்கமாய் விளங்கும் தாய்மைப் பண்பு ஏனைய இயற்கை மொழிகளை விட சிறப்பானது.

6. **பண்பாட்டுக் கலையறிவு பட்டறிவின் வெளிப்பாடு**

தமிழின் உன்னதமே அதன் இலக்கிய வளங்கள் தாம். தமிழரின் அகத்திணைக் கோட்பாடும், புறத்திணைக் கோட்பாடும் இலக்கியப் படைப்பாளர்களான முன்னோர்களின் பண்பாட்டுக் கலையறிவின் வெளிப்பாடாகும். அகத்திணை புறத்திணை மட்டுமல்லாமல் மெய்யியல் கோட்பாடும், அறவழிக் கோட்பாடும் வேறெந்த இயற்கை மொழிப் படைப்பிலும் தமிழில் உள்ள அளவுக்கு இல்லை. இந்த இலக்கிய வளமே தமிழ்ப் புலவர் பெருமக்களின் அறிவுப் புலன் சான்றாக இன்றளவும் திகழ்கிறது.

7. **பிறமொழித் தாக்கமில்லா தனித் தன்மை**

உலகில் நிலவும் மொழிக் குடும்பங்களில் மூல மொழியாய்த் திகழும் மொழிகள் யாவும் வேர்ச் சொல்லாக்கத் திறன் குறைவால் பிறமொழிகளின் கூறுகளை சில துறைகளில் தாங்கி நிற்கின்றன.

வினைகளால் ஒரு புதிய துறை சார்ந்த சொற்களை தமிழில் எளிதாக உருவாக்கும் அளவுக்கு இலக்கண வளம் செறிந்தது தமிழ். ஆகையினால் கடந்த காலமாயினும் சரி நிகழ்காலமாயினும் சரி எதிர்காலமாயினும் சரி எக்காலத்திலும் சமூகப் பண்பாட்டில் நிகழும் மாற்றங்களுக்கேற்ப தனித் தன்மையுடன் தனக்கேயுரிய இலக்கண செழுமையுடன் தமிழில் புதிய சொற்களை, துறைகளை உருவாக்குதல் எளிது.

காட்டாக, கம்ப்யூட்டர் எனும் 20ஆம் நூற்றாண்டு சாதனம். உலகெங்கும் பல துறைகளில் பரவியது போன்றே தமிழ் நிலத்திலும் காலூன்றியது. பிறமொழிகள் அதில் வழங்கும் துறை சார்ந்த சொற்களை நேரடியாகப் பயன்படுத்தும் நிலையில் தமிழில் அதனை பொருளுணர்ந்து கணியம், கணினி, கணிப்பொறி என ஆக்கம் செய்து பயன்படுத்தல் ஒன்றே தமிழின் பிறமொழி கலவாத் தனிந்தன்மை விளங்கிக் கொள்ளத்தக்கது.

8. **இலக்கிய வளம்**

தமிழர் தமிழ் இனம் எனும் மக்களினத்தைத் தெளிவாக அறியக்கூடிய காலக் கண்ணாடியாக விளங்குவது தமிழில் உள்ள இலக்கியங்களே. இலக்கியங்கள் வழியாக தமிழரைப் பார்க்கும் போது தமிழ் நிலத்தில் ஓங்கி இருந்த பண்பாட்டை, சமூக, பொருளாதார, இயற்கைக் கோட்பாட்டுடன் இணைந்த தமிழரின் வாழ்வை, வளத்தை அறிய இயலும்.

சங்க காலத்திலிருந்து தொடங்கும் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு காலம் தோறும் அந்தந்த சூழல்களுக்கேற்ப அரசன், தலைவன், தெய்வம், அற வாழ்க்கை, அக வாழ்க்கை, புற வாழ்க்கை, வீரம், இயற்கை வளம், பழக்க வழக்கம், வழிபாட்டு முறைகள் என்பன போன்றவற்றின் தாக்கம் எப்போதெல்லாம் அதிகரிக்கின்றதோ அப்போதெல்லாம் அது தொடர்பான இலக்கியங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கப்பட்டன. எந்த இலக்கியமாக இருந்தாலும் அதில் கையாளப்படும் மொழியின் ஓசை, எழுத்து, சொல், பொருள் போன்றவை பொதுமைப் பண்புடன் துலங்கும் வகையில் இலக்கணக் கட்டமைப்புடன் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளது.

தமிழிலக்கியத்தின் சிறப்பு : பொதுவில் இத்தகைய இலக்கியப் படைப்புகள் தனிநபர், தன்னார்வக்குழு, அரசு நிறுவனம் எனும் மூன்று தளங்களில் உருவாக்கப்பட்டன. சிற்சில இலக்கியம் தனிப்புலவர்களால் உருவாக்கப்பட்டது. அதைப் போலவே கூட்டாக புலவர்கள் குழுக்களும் நூல்களைப் படைத்துள்ளனர். இது போன்ற படைப்பிலக்கியப் பணிகளுக்கு கொடையாளர்களாக அரசர்கள், அரசாங்கம் விளங்கியுள்ளது. சில அரசர்களே புலமைமிக்கவர்களாக விளங்கி இருந்தமையால் நேரடி இலக்கியப் படைப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பாலான சங்க இலக்கிய நூல்கள் புலவர்கள் அமர்ந்த பெரும் குழுவால் உருவாக்கப்பட்டு அவைகளை பிரிதொரு புலவர் குழு அந்த இலக்கிய திறனை அதன் மொழியமைப்பை ஆய்வு செய்வர். பிறிதொரு புலவர் குழு. அப்படைப்பு எக்காலமும் தமிழர்களுக்குப் பொதுவில் பயன்பட வேண்டும் எனும் உயரிய சிந்தனையால் அதன் இலக்கணக் கட்டமைப்பை ஆய்ந்திடுவர். இவ்வாறு ஒரு படைப்பு ஆய்வுக்குப்பின்னரே மக்களை அடைந்ததால் மொழிப் பயன்பாடு, பொதுமைப்பணபாடு தமிழரிடம் மிகுந்திருந்தது. தமிழ் இலக்கிய நூல்களில் கற்பனை நயத்தை விட இயைபுறு நோக்கு அதிகமிருக்கும். இயற்கையோடு இணைந்த வாழ்வியல் பண்பாட்டை தமிழர்கள் கொண்டிருந்ததால் அது இலக்கியப் படைப்புகளிலும் எதிரொலித்தன.

தமிழ் இலக்கியப் படைப்புகள் சங்க காலம் தொடங்கி 16ஆம் நூற்றாண்டு வரை செய்யுள் நடையிலேயே படைப்புகள் உருவாக்கம் நிகழ்ந்துள்ளது. ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே உரைநடை எனும் புதிய நடை தமிழில் இடம் பெற்றது. பின்னர் ஈழத்து ஆறுமுகநாவலர் தொடங்கி நாடகத்தந்தை பம்மல் சம்பந்த முதலியார், திரு.வி.க. வரை பலர் உரை நடை இலக்கியம் வளர வித்திட்டனர். மேலைநாட்டு இலக்கியங்களையொத்த புதினங்கள், சிறுகதைகள் கட்டுரைகள் எனத் தமிழிலக்கியம் உரைநடை பரிமாணம் பெற்றது. செய்யுள் நடைகளில் படைத்த இலக்கியங்களில் இலக்கணக் கட்டமைப்புடன் பல்வேறு சிற்றிலக்கியங்களும், காப்பியங்களும் விரவியுள்ளன. இவற்றில் தூது, பிள்ளைத் தமிழ், பரணி, கலம்பகம், குறவஞ்சி, பள்ளு, உலா, பல்சந்தம் எனச் செய்யுள் வடிவ இலக்கியத்துள் உறுப்புகளாக விளங்குகிறது.

இது போலவே மரபு நடைச் செய்யுள் வடிவிலிருந்து புதுக்கவிதை, அய்க்கூ எனும் வடிவுடனும் தமிழ்க் கவிதை படைக்கப்படுகிறது.

தமிழ் தன் இலக்கியச் செல்வங்களால் இயைபுறு, கற்பனை இலக்கியத்துடன் நில்லாமல் தொழில் நுட்பம் சார்ந்த அறிவியல் நூல்கள் படைப்பாக்கத்திற்கும் உட்பட்டுள்ளது. படைப்பின் எந்த உறுப்பாக இருப்பினும் அதற்கேற்ற சொல்வளமும், பொருள் வளமும் தமிழில் சிறப்புடன் விளங்குவதால் உலக இயற்கை மொழிகளின் இலக்கிய தளத்தில் தமிழுக்கென தனித்துவமான இடமுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. உயர் சிந்தனை

இலக்கியத்தில் உயர் சிந்தனை என்பது அது எத்தகைய படைப்பாக விளங்கிடினும் மக்கள் சமூகத்திற்கு பயன் விளைவிப்பதாக விளங்குதலே. இந்த அடிப்படைதான் தமிழ் இலக்கியங்களின் கருப் பொருளாக விளங்குகின்றன. தமிழ் இலக்கியங்கள் எத்தகைய காலத்தவையாக இருப்பினும் அவை மானுடம் போற்றும் உயர் சிந்தனைகளின் தொகுப்பாகவே மிளிர்வதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் பாடுபொருளாக விளங்கும் அகத்திணையும், புறத்திணையும், அறவியலும் தமிழர் வாழ்வுடன் இணைந்த உயர் சிந்தனை மரபாகும். உயர் சிந்தனை மரபுகள் இலக்கியத்தில் நிலை பெற்றிட வேண்டி இலக்கண நெறிகள் பிழையுற பின்பற்றப்பட்டன. தனிமனிதர் தொடங்கி சமூகம், அரசு என்ற மூன்று நிலைகளிலும் கோட்பாடுகளை, வாழ்வியல் நெறிகளை வலியுறுத்தும் தமிழ் இலக்கியங்களில் உள்ள உயர்ந்த சிந்தனை மரபு உலக சிந்தனை மரபிலிருந்து உயர்ந்தோங்கியவை என்பது மறுக்கவியலாது.

10. கலை இலக்கிய தனித் தன்மை வெளிப்பாடு

தமிழ் இலக்கியங்களில் திகழும் கலை நயம் தனித் தன்மை பெற்றது. தமிழ் இலக்கியங்களில் தனிப்பாடலாயினும், புலவர்கள் குழு படைத்து, தொகுத்த பாடலாயினும் அரசர்கள் அரசு உதவியுடன் படைப்புகளை உருவாக்கிய இலக்கியங்களில் இழையோடும் கலை நயமும், கவி நயமும் போற்றத்தக்கவை.

ஏழைப்புலவரான சத்திமுத்தாப் புலவர் அக்காலத்தில் பாடிப்பரிசு பெறும் வண்ணம் ஓர் ஊருக்குச் சென்றார். அது பனிக்காலம் என்பதால் மேலாடை இல்லா கவிஞர் குளிர்தாங்காமல் ஊர் புறத்தே இருந்த குட்டிச் சுவருக்கருகில் நடு நடுங்கி இருந்தார். அச்சமயம் இரைதேடப் பறந்த நாரையொன்றைப் பார்த்த சத்திமுத்தாப் புலவரின் சிந்தனை கவிபுனையத் தொடங்கியது. அவர் கவிதையை உரக்கக் கூறிய போது அந்த வழியாக இரவுக் காவலுக்குத் தாமே பொறுப்பேற்ற அவ்வூர் அரசன் குட்டிச் சுவரருகே ஒரு கவிதை ஒலிப்பதைக் கண்டு கூர்மையாக அதைக் கேட்டனன்.

“நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்
நீயு நின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி
வட திசைக்கு ஏகு வீராயின்
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூறைகளை குரற் பல்லி
பாடு பார்த்திருக்குமென் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ழுயாளனைக் கண்டனும் எனுமே''

என்று பாடினார் சத்திமுத்தப் புலவர். பாடி முடித்ததும் மறைவிலிருந்த அரசன் அவரறியாமல் தன் மேலாடையை அவர் மேல் போர்த்துமாறு வீசி விட்டு உடனிருந்த காவலரை பணிந்து இப்புலவரை அரண்மனைக்கு அழைத்து வர ஆணையிட்டுச் சென்றான்.

தமிழகத்தை ஆண்ட பல அரசர்களும் சிறந்த புலமையுடையோர். இயற்கையோடு இணைந்த வாழ்வில் ஊறித் திளைப்பவர்கள். அதனால் அவர்கள் நாட்டு நலத்துடனேயே தங்களின் புலமை வளர்க்கும் திறத்தால் அறிவு சார் புலவர் பெருமக்கள் எப்போதும் அரசவையில் சூழ்ந்திருக்குமாறு வாழ்ந்தனர். இது போன்ற அவைக்களத்தில்தான் கருத்துப் பரிமாற்றம், புதிய பொருட்களை பற்றிய ஆய்வு, இலக்கியம் படைத்தல் போன்ற தமிழ்ப் பணிகள் நடந்தது. மேற்காணும் அரசனும் அத்தகையவனே. நாரையின் கூர்மையான நீள மூக்கிற்கு இயற்கையான எடுத்துக்காட்டை அறிய பல புலவர்களையும், நூல்களையும் ஆய்வு செய்தும் சரியான விடை தெரியாத நிலையில் அரசனின் ஐயத்தையும் போக்கி, தன் நிலையையும் தன் மனைவியின் பிரிவாற்றாமையையும் நயம்படக் கூறிப் பாடிய செய்யுள்.

ஒரு புலவனின் புலமை அவன் வறுமை. அரசனின் ஐயம் என்பவற்றை மட்டும் கொண்டதல்ல. அந்நாளில் ஆள்வோரும், புனைவோரும் இயற்கையோடு இணைந்த இயல்பு வாழ்க்கையில் திளைத்தனர். அவர்கள் வாழ்க்கை முழுவதும் ஒரு கோட்பாட்டுடன் விளங்கியுள்ளது. வாழ்வதற்கேற்ற நிலம், காலம் அமையப் பெற்றதால் அன்பு தழைக்கும் அமைதி வாழ்வை கொண்டிருந்தனர். அதனால் அவர்களின் சிந்தனை எச்சூழலிலும் இயற்கை வயப்பட்டதாகவே விளங்கியுள்ளது. இந்த பண்பே பொதுமையாக இக்கால இலக்கியங்களிலும் வெளிப்பாடாக விளங்குகிறது.

## 11. மொழிக்கோட்பாடு

உலகில் சில இனங்களின் அடையாளமாக மொழி காணப்படுகிறது. அந்த மொழியில் படைக்கப்பட்டுள்ள படைப்புகளும், மொழியின் பயன்பாடும், அதன் பொதுமைப்பண்புகளும் எல்லா காலங்களுக்கும் பொருந்தும் வகையில் மொழியானது தனக்குள் உரியவாறு கட்டமைப்பைக் கொண்டிருப்பதே அம் மொழியின் அடிப்படைக் கோட்பாடாகும். இந்த அரும்பண்புகள் தமிழுக்குண்டு.

மொழியியலார் ஒரு மொழியை மதிப்பிடுகையில் மொழியில் உருவான இலக்கியங்களை திறனாய்வு செய்வர். அதில் அம்மொழிக்குரிய இனம், அது வாழ்ந்த, வாழ்ந்துவரும் சூழல், காலம் எனும் மூன்றையும் நோக்குவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் ஒரு மொழியால் உருவான இலக்கியம் அச்சமூகத்தை மட்டுமே நமக்குத் தெரிவிப்பவை அல்ல. கூடவே அச்சமூகத்தை தொடர்ந்து வரும் மரபார்ந்த பண்பு நலன்கள் பலவற்றையும் தெரிவிக்கின்றன.

எனவே தான் முன்னோர்கள் தமிழ் மொழிகளின் படைப்புகள் சமுதாயத்தில் தாக்கத்தை உருவாக்கும் வல்லமை கொண்டது என்கிற காரணத்தால் இலக்கியங்கள் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் வழங்கும்போது பொருளமைதி குறித்த கோட்பாட்டை வகுத்தனர். இந்த கோட்பாட்டை நெறிபிறழாமல் விளங்க இலக்கணத்தை வகுத்தனர். அதனால் தான் தமிழ்மொழி தனக்குள்ளே இலக்கணம் என்கிற கட்டமைப்பை பெற்றுள்ளதால் தரமிக்க இலக்கியப் படைப்புகள் அனைத்தும் சங்ககாலம் முதல் ஓர் ஒழுங்கமைதியுடன் பேணப்பட்டுவருகிறது.

அத்துடன் வளர்ந்து வரும் புதிய துறைகள் எதுவென்றாலும் அதனையும் ஏற்று தனித்தன்மை மாறாமல் தூய தமிழ் சொற்களிலேயே அத்துறைகளை அறியும் வண்ணம் சீரிளமைத் திறனுடன் தமிழ் மொழி விளங்குகிறது. இத்திறனே அதன் கோட்பாடாகும்.

இந்தப் பதினோரு தகுதிப்பாடுகளும் தமிழுக்கு மட்டுமே பொருந்துவனவாகும் என்பதுதான் தனிச் சிறப்பு சம்ஸ்கிருதத்துக்கு ஏழு தகுதிப்பாடுகளும், லத்தீன், கிரேக்க மொழிகளுக்கு எட்டுத் தகுதிப்பாடுகளும் மட்டுமே பொருந்துகின்றன என்பது மொழியியலாளர் கணிப்பு.

## இனியவை நாற்பது

★ பசியினால் உயிர்பிரியும் நிலை ஏற்பட்ட போதும் உண்ணத்தகாதவர் கையிலிருந்து உணவைப் பெற்று உண்ணாமலிருப்பது மிகப்பெரிய பெருமையாகும்.

★ வினைப்பயனால் துன்பம் வந்து சேர்ந்த ஒருவன் வருத்தமடையும் காலத்திலும் அவனுடைய மனம் அஞ்சாமலிருப்பது இனிமையானதாகும்.

★ குறையாத சிறப்புடைய இரு முதுமக்களான தாய், தந்தையரை காலையில் பார்த்து அவர்கள் திருவடிகளில் வணங்கி எழுவது இனியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கோர் வாட் கோயில்



அங்கோர் வாட் கோயில் உலகின் மிகப் பெரிய இந்து ஆலயம் கம்போடியா நாட்டில் உள்ளது உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களிலேயே மிகப் பெரியதும் இது தான். இதை கட்டியது ஒரு தமிழ் மன்னன் என்பது தான் ஒரு ஆச்சர்யமான தகவல். ஆம் அவர்தான் இரண்டாம் 'சூரியவர்மன்'. ஒரு போரின் மூலம் இந்த இடத்தை கைப்பற்றிய சூரியவர்மன் 'இந்த ஆலயத்தை கட்டினார்.

இந்த கோவிலானது சுமார் 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் அகழியால் சூழப்பெற்றாது. இந்த ஆலயத்தின் ஒரு பக்க சுற்று சுவரே சுமார் 3.6 கிலோமீட்டர் நீளம் கொண்டது என்றால் அதன் பிரமாண்டத்தை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

இது வரை நம் தமிழர்களின் சாதனைகள் பற்றி நான் தெரிவித்திருந்த தகவல்களிலேயே மிக சிறந்த ஒன்று இது! இந்த அதிசயத்தைப் நம் மக்களுடன் பகிர்ந்துக்கொள்ள நான் பெருமையடைகிறேன். ஆம் உலகிலேயே மிகப்பெரிய வழிப்பாட்டு தளம் 'கம்போடியா' நாட்டில் நம் கலைத்திறமையை உலகிற்கே காட்டிய 'அங்கோர் வாட்' கோயில்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் சூரியவர்மனால் துவங்கப்பட்ட இதன் கட்டிட பணிகளானது 27 வருடங்களில் நிறைவு பெற்றது. கட்டி முடித்த சிறிது காலத்திலேயே இரண்டாம் சூரியவர்மன் இறந்தார். பின்பு ஆறாம் 'ஜெயவர்மன' ஆட்சிக்கு வந்த பிறகு 'புத்த' கோயிலாக மாறிய இந்த ஆலயம் இன்று வரை புத்த ஆலயமாகவே விளங்கிவருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடர்ந்த காட்டிற்கு நடுவே இந்த கோவில் அமைந்திருப்பதினால் பதினாறாம் நூற்றாண்டுகளில் மக்களால் புறக்கணிக்கப்பட்டு சிதிலமடைந்தது. பிறகு ஒரு போர்சுகீசிய துறவியினால் மீண்டும் வெளியுலகிற்கு வந்தது.

இந்த ஆலயத்தை சிறப்பிக்கும் வகையில் கம்போடிய நாட்டு அரசு கம்போடிய தேசியக்கொடியில் தேசிய சின்னமாக 'அங்கோர் வாட்' ஐ பொறித்துள்ளது. எந்த ஒரு காமிராவிலும் இந்த ஆலயத்தை முழுமையாக படம் பிடிக்க முடியாது. மேலே உள்ள புகைப்படமானது பூமியில் இருந்து 1000 அடி மேலே வானத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

இரண்டாம் 'சூர்யவர்மன்' இந்த இடத்தை கைப்பற்றியவுடன் இந்த பிரம்மாண்ட கோயிலை இங்கு கட்டினான். இந்த இடம் தான் அவனின் தலை நகரமாக செயப்பட்டது. ஒரு பெருமையான விஷயம் சொல்லாட்டுமா?, வைணவத் தளமான இந்த கோயிலானது தான் இன்று வரை உலகில் கட்டப்பட்ட வழிபாட்டுத்தலங்களிலேயே பெரியது!!

இந்த கோயிலை ஒரு கலை பொக்கிஷம் என்றே கூறலாம், திரும்பிய திசை எல்லாம் சிற்பங்களை வடித்துள்ளனர். இந்த கோயிலின் ஒரு பக்க சுற்று சுவரே 3.6 கிலோமீட்டர்கள் !!! அப்படி என்றால் இந்த கோயில் எவ்வளவு பிரம்மாண்டமாக கட்டபட்டிருக்கும் என்பதை கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்.

இந்த கோயிலின் ஆரம்பக்கட்ட வடிவமைக்கும் பணிகளானது பனிரெண்டாம் நூற்றாண்டின் முதலாம் பாதியில் தொடங்கியது. இருபத்தி ஏழு வருடங்கள் இந்த இடத்தை ஆண்ட 'சூர்யவர்மன்' இறக்கும் சில ஆண்டுகள் முன்பு இதன் வேலைகள் நிறைவடைந்தது .இதன் பின்னர் ஆறாம் 'ஜெயவர்மன்' கைக்கு மாறியது .பின்னர் இந்த கோயில் கொஞ்சம் கொஞ்சமாக 'புத்த' வழிபாடு தளமாக மாற்றப்பட்டு. இன்று வரை இது புத்த வழிபாட்டுதளமாகவே செயல் பட்டு வருகின்றது!.

பதினாறாம் நூறாண்டிற்கு பிறகு இந்த கட்டிடம் சிறிது சிறிதாக புறக்கணிக்கப்பட்டது , அடர்ந்த காட்டுக்குள் இது கட்டப்படதனால் இது யார் கண்ணிற்கும் படாமல் சிதலமடயத் தொடங்கியது. பின்னர் 1586 ஆம் ஆண்டு "António da Madalena" என்ற போர்சுகீசிய துறவியின் கண்ணில் பட்டது, அதை பின்னர் ர்நசெை ஆழராழவ என்ற பிரெஞ்சு எழுத்தாளர் தன் புத்தகத்தில் இந்த கோயிலின் சிறப்பை வெளியிட்டவுடன் தான் இதன் புகழ் உலகம் முழுக்கும் பரவத்தொடங்கியது. பின்னர் இங்கு ஆய்வு பணிகளை மேற்கொண்ட பிறகு தான் இது நாம் கட்டியது என்று தெரியவந்தது!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு இருக்ககூடிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டினால் கூட, இப்போதைக்கு இது போன்ற ஒரு கட்டிடம் கட்ட 300 ஆண்டுகள் ஆகும் என ஒரு பொறியாளர் கூறி உள்ளார். ஆனால் எந்த தொழில் நுட்பமும் இல்லாத அந்த காலத்தில் வெறும் 27 ஆண்டுகளில் இது கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதில் இன்னொரு சிறப்பு 'கம்போடிய நாட்டு தேசியக்கொடியில் நம் தமிழர்கள் கட்டிய இந்த கோயில் தான் 'தேசிய சின்னமாக' ஆட்சிப் பொறுப்பு பொறிக்கப்பட்டுள்ளது!.

இதை பற்றி எழுத சொன்னால் இந்த நாள் முழுவதும் இதன் சிறப்புகளை வரிசை படுத்திக்கொண்டே இருக்கலாம், கடைசியாக ஒன்று இந்த 2012 வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு கேமராவில் கூட இன்று வரை இதன் முழு கட்டிடத்தையும் படம் பிடிக்க முடியவில்லை!! வானத்தில் 1000 அடிக்கு மேல் விமானத்தில் இருந்து எடுத்தால் மட்டுமே இதன் முழு கட்டிடமும் பதிவாகின்றது!! இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த இடத்தை பற்றி எத்தனை பேருக்கு தெரியும் என்பது தெரியவில்லை! குறிப்பாக இது நம் தமிழ் மன்னன் கட்டினான் என்பது எத்தனை தமிழர்களுக்கு தெரியும் என்பதும் கேள்விக்குறியே!!

இன்றும் தாய்லாந்தில் மன்னர், ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன் நமது திருப்பாவையை தாம் பாராயணம் செய்து பின்னர் பதவி ஏற்பதுதான் வழக்கத்தில் உள்ளது.

Posted by : தமிழ் வரலாறு மற்றும் கலாசாரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி பகர்வோம்

மேல்மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் இலக்கிய விழா சிறப்புற நடைபெறுவதற்கு ஒன்றிணைந்து ஒத்துழைத்த நல்லுள்ளங்கள்,

- ★ மேல்மாகாண ஆளுநர்
- ★ மேல்மாகாண முதலமைச்சர்
- ★ மேல்மாகாணக் கல்வி அமைச்சர்
- ★ திரு.K.T.குருசாமி, திரு.சண் குகவரதன் ஆகியோர் உள்ளிட்ட மேல்மாகாணசபை உறுப்பினர்கள்
- ★ மேல்மாகாண பிரதம கல்விச் செயலாளர்
- ★ மேல்மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்
- ★ மேல்மாகாண கல்விப் பணிப்பாளர்
- ★ மேல்மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்கள்
- ★ மேல்மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர்
- ★ மேல்மாகாண தமிழ்மொழிப் பரிவின் பணிப்பாளர்கள்
- ★ மேல்மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
- ★ மேல்மாகாண வலய மற்றும் கோட்ட பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
- ★ மேல்மாகாண சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்
- ★ மேல்மாகாண அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், நலன்விரும்பிகள்
- ★ K.J அச்சகம் மற்றும் சச்சின் அச்சகம்
- ★ மேடை வடிவமைப்பாளர் திரு.ஞானகுருபரன்
- ★ கொழும்பு லயன்ஸ் கழகம் Grand Circle

**அத்தனை பேருக்கும் செஞ்சார்ந்த நன்றிகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலம்பு

ஒலி 01

மேல்மாகாண கல்வித்திணைக்களத்தால்
மேல்மாகாண தமிழ் இலக்கிய
விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org